REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/Thinakaran.lk /ThinakaranLK

2023 பெப்ரவரி 9 வியாழக்கிழமை

தினகரன்
THINAKARAN
தினகரன்

வரு. 91 இல. 34 | Thursday 09, February, 2023 | 16பக்கங்கள் | 50/-

நீண்டகாலமாக தீர்க்கப்படாதிருக்கும் இனப்பிரச்சினைக்கு

ஒற்றையாட்சிக்குள் அதிகபட்ச அதிகார பகிர்வே சிறந்த தீர்வு

பாராளுமன்ற 04ஆவது கூட்டத்தொடரை ஆரம்பித்து வைத்து ஜனாதிபதி உரை

லோரன்ஸ் செல்வநாயகம்

"நீண்ட காலமாக தீர்வு காண முடியாதுள்ள இனப் பிரச்சினைக்கு ஒற்றையாட்சியின் கீழ் உச்சளவு அதிகாரப்பகிர்வை வழங்கி தீர்வு பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

யுத்தம் காரணமாக பாதிக்கப்பட்டுள்ள வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு தனித் தனி அபிவிருத்தி வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்த எதிர்பார்த்துள்ளதாக தெரிவித்த ஜனாதிபதி, திருகோணமலை சர்வதேச நவீன நகரமாக அபிவிருத்தி செய்யப்படும் என்றும் காங்கேசன்துறை துறைமுகம் விரிவாக்கப்படும் என்றும் தெரிவித்தார்.

இன மத பேதமின்றி அனைத்து மக்களும் முகம் கொடுக்கும் பொது பிரச்சினைகளுக்கு ஐக்கிய இலங்கைக்குள் தீர்வு காணப்படும் என தெரிவித்துள்ள ஜனாதிபதி, அதிகாரப் பகிர்வினை முறையாக நடைமுறைப்படுத்துவதற்காக நடைமுறையில் உள்ள சட்டங்களுக்கான திருத்த வரைபுகள் தயாரிக்கப்படும் என்றும் தெரிவித்துள்ளார்.

ஒன்பதாவது பாராளுமன்றத்தின் நான்காவது கூட்டத் தொடரை நேற்றைய தினம் உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைத்து அக்கிராசன உரை நிகழ்த்திய ஜனாதிபதி, தமதுரையில் மேலும் தெரிவித்ததாவது;

நாட்டைப் பிளவு படுத்துவதற்கான எந்த ஒரு நடவடிக்கைக்கும் இடமளிக்கப்போவதில்லை எனவும் அதேவேளை, ஒற்றையாட்சியின் கீழ் உச்சளவு அதிகார பகிர்வு வழங்குவதே எமது எதிர்பார்ப்பு என்றும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

நாட்டைப் பிரிப்பதோ அல்லது பிரிப்பதற்கு துணை போகும் எந்தவொரு நடவடிக்கையினையும் நாம் மேற்கொள்ள மாட்டோம் என தெரிவித்த ஜனாதிபதி, இனப் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு காண்பதற்கு இம்முறை மேற்கொள்ளும் நடவடிக்கைகள் வெற்றியளிக்கும் என்றும் தெரிவித்தார்.

இனப் பிரச்சினைக்கு நிலைபேறான ஒரு தீர்வை வழங்கும் முயற்சிகள் முன்னைய அனைத்து 06

- அதிகாரத்துக்காக பொய் கூறுபவன் நானல்ல
- ஆறு மாதங்கள் கஷ்டத்தை தாங்கினால் சிறந்த தீர்வு
- நான்காவது காலாண்டில் அரச ஊழியர்களுக்கு மேலதிக கொடுப்பனவு
- நாட்டைக் கட்டியெழுப்ப விரும்புவது சிறுவர்களும் இளைஞர்களுமே
- செய்யமுடியாதவற்றை ஒருபோதும் கூறமாட்டேன்
- நாட்டின் நலனுக்காக மக்கள் விரும்பாத முடிவுகளையும் எடுக்கத் தயார்
- ஒற்றையாட்சியில் அதிகார பகிர்வு
- சம்பந்தனுக்கும் எனக்கும் பொதுவான கனவு உண்டு
- திருகோணமலை நகரம் நவீன அபிவிருத்திக்கு உட்படுத்தப்படும்
- கிழக்குக்கு தனியான அபிவிருத்தி வேலைத்திட்டம்
- எமது பயணம் சரியானது என்பதை சர்வதேசம் உறுதிப்படுத்தியுள்ளது
- பூச்சியமான வெளிநாட்டு கையிருப்பை 500 மில்லியன் டொலராக அதிகரிக்க முடிந்துள்ளது.

நேற்று வைத்தியர்கள் பணிப்பகிஷ்கரிப்பு;

நாடு பூராவும் ஆஸ்பத்திரிகளில் நோயாளர்கள் பெரும் அவதி

நியாயமற்ற வரிக் கொள்கை உள்ளிட்ட பல விடயங்களுக்கு எதிர்ப்புத் தெரிவித்து நாட்டிலுள்ள பல்வேறு வைத்தியசாலையின் வைத்தியர்கள் பணிப் புறக்கணிப்பில் ஈடுபட்டுள்ள நிலையில், நோயாளர்கள் பெரும் சிரமங்களுக்கு முகங்கொடுத்துள்ளனர்.

இந்த பணிப்புறக்கணிப்பு நேற்று (08) காலை 8.00 மணி தொடக்கம் இன்று காலை (09) 8 மணி வரையான 24 மணித்தியாலங்கள் முன்னெடுக்கப் படவுள்ளன. சுகாதாரம், மின்சாரம், துறைமுகம், பெற்றோலியம், பல்கலைக்கழக 06

அரச ஊழியர்களுக்கான பணமில்லா சலுகைகள்

புதிய சுற்றறிக்கை வெளியானது

அரச ஊழியர்களுக்கு வழங்கப்படும் சில பணமில்லா சலுகைகளுக்கு, உழைக்கும் போது செலுத்தும் புதிய வரி (PAYEE Tax) முறைமையில் இருந்து விலக்களிக்கப்பட்டுள்ளது.

நிதி, பொருளாதார ஸ்திரப்படுத்தல் மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சின் செயலாளரின் பணிப்புரையின் பேரில் 06

பாராளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற ஒன்பதாவது பாராளுமன்றத்தின் நான்காவது கூட்டத் தொடரை ஆரம்பித்து வைக்கும் நிகழ்வையடுத்து இடம்பெற்ற தேநீர் விருந்துபசாரத்தின் போது தர்மலிங்கம் சித்தார்த்தன் உள்ளிட்ட தமிழ் தேசியக் கூட்டமைப்பு எம்பிக்கள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் அளவளாவுவதை படத்தில் காணலாம்.

மலையக பிரதிநிதிகளுடன் அரசு பேச்சுவார்த்தை

ஜனாதிபதியின் உரைக்கு மனோ எம்.பி வரவேற்பு 03

"வடக்கில் இருந்து கிழக்கு நோக்கி " பேரணி

வேலன் சுவாமிக்கு அழைப்பாணை

03

ஜனாதிபதியின் உரை புறக்கணிப்பில் எதிர்க்கட்சிகளுக்கிடையில் பிளவு

ஒரே கட்சியில் சிலர் பங்கேற்பு; ஒரு சிலர் புறக்கணிப்பு

லோரன்ஸ் செல்வநாயகம்

பாராளுமன்றத்தில் நேற்றைய தினம் 9ஆவது பாராளுமன்றத்தின் 4 ஆவது கூட்டத்தொடரை ஆரம்பித்து வைத்து ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஆற்றிய கொள்கைப்பிரகடன உரையை எதிர்க்கட்சிகள் புறக்கணித்த நிலையில் 06

அரசாங்கத்தின் கொள்கை விளக்க உரை;

ஜனாதிபதியின் திட்டங்களை பின்பற்றினால் பெரு நன்மை

பொருளாதார நெருக்கடியிலிருந்தும் மீளலாம் – டக்ளஸ்

லோரன்ஸ் செல்வநாயகம்

அரசாங்கத்தின் கொள்கை விளக்க உரையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முன்வைத்துள்ள திட்டங்களை முழுமையாக பின்பற்றினால் பொருளாதார நெருக்கடி உட்பட அனைத்து பிரச்சினைகளுக்கும் தீர்வு காண முடியும் என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நம்பிக்கை வெளியிட்டார். 06

அத்தியாவசிய செலவினங்களுக்கு மட்டுமே அரசின் நிதியை ஒதுக்கவும்

திறைசேரிக்கு ஜனாதிபதியிடமிருந்து அறிவுறுத்தல்

அரச வருமான நிலைமை மேம்படும் வரை அரச சேவையைப் பேணுவதற்கு அத்தியாவசிய அரச செலவினங்களுக்கான நிதி ஒதுக்கீட்டை மாத்திரம் வழங்குமாறு நிதி, பொருளாதார ஸ்திரப்படுத்தல் மற்றும் தேசிய கொள்கை அமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, திறைசேரி 06

2028 முதல் பட்டதாரிகளுக்கே ஆசிரியர் நியமனங்கள்

கல்வியமைச்சர் சுசில் பிரேமஜயந்த அறிவிப்பு

2028 ஆம் ஆண்டு முதல் தேசிய கல்விக்கல்லூரி மற்றும் பல்கலைக்கழகங்களில் பட்டம் பெற்றவர்கள் மட்டுமே ஆசிரியர்களாக நியமிக்கப்படுவார்கள் என கல்வி அமைச்சர் சுசில் 06

வெளிநாட்டு வேலை வாய்ப்புக்கள்;

போலி முகவர்கள் குறித்து மக்களுக்கு எச்சரிக்கை

வெளிநாட்டு தொழில் வாய்ப்புக்கள் தொடர்பில் மோசடிகளுக்கு ஆளாக வேண்டாம் என இலங்கை உரிமம் பெற்ற வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் சங்கம் பொது மக்களை எச்சரித்துள்ளது. துருக்கியில் 06

பாடசாலை மாணவர்களுக்கு மார்ச்சுக்கு முன் சீருடைகள்

கல்வியமைச்சு தேவையான நடவடிக்கை

பாடசாலை மாணவர்களுக்கான சீருடை தொடர்பில் கல்வி அமைச்சு அறிவிப்பொன்றை வெளியிட்டுள்ளது. எதிர்வரும் மார்ச் மாதம் 15ஆம் திகதிக்குள் 06

ஏப்ரல் புது வருடத்துக்கு முன் பொருட்களின் விலை குறையும்

உணவு பாதுகாப்பு அமைச்சர் நளின் உறுதி

ஏப்ரல் மாத தமிழ் சிங்கள புத்தாண்டு காலப்பகுதிக்குள் பொருட்களின் விலைகளை குறைக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருவதாக வர்த்தக மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சர் நளின் பெர்னாண்டோ 06

மலையகத்திற்கு தாதியர் பயிற்சி கல்லூரி, தொழிற்பயிற்சி நிலையம்

தமிழ் முற்போக்கு கூட்டணி, ஜூலி சங்கிடம் கோரிக்கை

நுவரெலியா தினகரன் நிருபர்

மலையகத்திற்கு தாதியர் பயிற்சி கல்லூரி ஒன்றையும் தொழில்பயிற்சி நிலையம் ஒன்றையும் பெற்றுத் தருமாறு இலங்கைக்கான அமெரிக்க உயர்ஸ்தானிகர் ஜூலி சங்கிடம் தமிழ் முற்போக்கு கூட்டணி முன்வைத்த கோரிக்கை தொடர்பாக பரீசீலிப்பதாக உயர்ஸ்தானிகர் தெரிவித்ததாக மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் தமிழ் முற்போக்கு கூட்டணியின் பிரதித் தலைவரும் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான வேலுசாமி இராதாகிருஸ்ணன் தெரிவித்துள்ளார்.

தமிழ் முற்போக்கு கூட்டணிக்கும் இலங்கைக்கான அமெரிக்க உயர்ஸ்தானிகருக்கும் இடையிலான கலந்துரையாடல் ஒன்று நேற்று முன்தினம் நுவரெலியா கிரேன் விருந்தகத்தில் இடம்பெற்றது.

இந்த கலந்துரையாடலில் தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவரும் ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் எம்.பி மனோகணேசன்,தொழிலாளர் தேசிய சங்கத்தின் பிரதித் தலைவர் எம்.பி மயில்வாகனம் உதயகுமார் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

இந்த கலந்துரையாடல் தொடர்பாக தொடர்ந்து ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த இராதாகிருஸ்ணன்.

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார பின்னடைவு காரணமாக மலையக மக்கள் பொருளாதார ரீதியாக பெரிதும் பாதித்துள்ளமை தொடர்பாக உயர்ஸ்தானிகரின் கவனத்திற்கு கொண்டு வந்தோம். மேலும் மலையக மாணவர்களின் கல்வி அவர்களுடைய வேலை வாய்ப்பு, உயர் கல்வி, சுயதொழில் வேலைவாய்ப்பு உட்பட இன்னும் பல முக்கிய விடயங்கள் தொடர்பாக மிகவும் விரிவாக கலந்துரையாடினோம்.

நாம் முன்வைத்த அனைத்து விடயங்கள் தொடர்பாகவும் அமெரிக்க உயர் ஸ்தானிகர் விடயங்களை தெளிவாக கேட்டறிந்து கொண்டதுடன் அவர் எமது கோரிக்கைகள் தொடர்பாக ஆராய்ந்து தன்னால் முடிந்த ஏற்பாடுகளையும் அபிவிருத்தியையும் செய்வதற்கான கோரிக்கையை அமெரிக்க அரசாங்கத்தின் கவனத்திற்கு கொண்டு செல்வதாக தெரிவித்ததுடன் அமெரிக்க மக்களின் நிதிப் பங்களிப்புடன் இலங்கையில் செயற்பட்டு வருகின்ற அரச சார்பற்ற நிறுவனங்களிடம் ஒத்துழைப்பு வழங்குமாறு தான் பணிப்பதாகவும் தெரிவித்தார்.

இரத்தினபுரி மாவட்டத்தில் தீவிர பிரசாரத்தில் இ.தொ.கா தலைவர் செந்தில் தொண்டமான்

உள்ளூராட்சிமன்ற தேர்தலில் இரத்தினபுரி மாவட்டத்தில் போட்டியிடும் இ.தொ.காவின் வேட்பாளர்களை ஆதரித்து இ.தொ.காவின் தலைவர் செந்தில் தொண்டமான் கடந்தவாரம் சூறாவளி பிரசாரத்தில் ஈடுபட்டிருந்தார்.

வெவெத, ஹெரமிட்டிகல, ராசகல வெலேகுப்ரா, கபரகல உட்பட பல்வேறு தோட்டங்களிலும் பலாங்கொடை, இரத்தினபுரி உள்ளிட்ட நகரங்களிலும் செந்தில் தொண்டமான் பிரசாரத்தில் ஈடுபட்டிருந்தார்.

இந்த பிரசாரங்களில் இ.தொ.காவின் உப தலைவர் ராஜாமணி, இரத்தினபுரி மாவட்ட அரசியல் அமைப்பாளர் ரூபன் பெருமாள், இ.தொ.காவின் முக்கியஸ்தர்கள், சிரேஷ்ட உறுப்பினர்கள் மற்றும் வட்டாரங்களில் போட்டியிடும் வேட்பாளர்களும் கலந்துகொண்டிருந்தனர்.

இரத்தினபுரி இரத்னேஸ்வரம் மற்றும் பலாங்கொடை முத்துமாரி அம்மன் ஆலயங்களில் இ.தொ.காவின் தலைவர் விசேட வழிபாடுகளில் இதன்போது ஈடுபட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

பெருந்தோட்டங்களில் வீட்டுத் தோட்ட செய்கையை ஊக்குவிக்க மரக்கன்றுகள்

மாவத்தகம தினகரன் நிருபர்

கண்டி மனித அபிவிருத்தி தாபனத்தினால் பெருந்தோட்டங்களில் வீட்டுத் தோட்டச் செய்கை ஊக்குவிக்கும் செயற்றிட்டத்தின் கீழ் இலவசமாக மரக்கன்றுகள் விநியோகம் செய்யும் நிகழ்வு கொட்டகலைத் தோட்டத்தில் மனித அபிவிருத்தி தாபனத்தின் தலைவர் கலாநிதி பி. பி. சிவப்பிரகாசம் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் மனித அபிவிருத்தி தாபனத்தின் மாவட்ட இணைப்பதிகாரி ஸ்ரீ காந்த், தோட்ட அதிகாரிகள் உள்ளிட்ட பல பிரமுகர்கள் கலந்து கொண்டனர்.

கொட்டகலை தோட்டப் பிரதேசத்தில் உள்ள குடும்பங்களுக்கு பெறுமதிமிக்க 1000 மரக்கன்றுகள் வழங்கி வைக்கப்பட்டதுடன் தோட்டங்களில் மரக்கன்றுகளும் நாட்டி வைக்கப்பட்டன.

நானுஓயா ரதெல்ல குறுக்கு வீதி வாகன போக்குவரத்துக்கு அனுமதி

தலவாக்கலை குறூப் நிருபர்

ஹற்றன், நுவரெலியா பிரதான வீதியின் நானுஓயா ரதெல்ல குறுக்கு வீதியில் கனரக வாகனங்கள் செல்வதற்கு நேற்று (08) முதல் அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக நுவரெலியா மாவட்ட செயலாளர் நந்தன கலபொட தெரிவித்தார்.

நுவரெலியாவிலிருந்து பாடசாலை மாணவர்களுடன் கொழும்பு நோக்கிச் சென்ற வேன், பஸ் மோதி விபத்துக்குள்ளானதுடன் முச்சக்கர வண்டி ஒன்றுடனும் மோதி விபத்துக்குள்ளானது. கடந்த ஜனவரி 20 ஆம் திகதி இடம்பெற்ற இந்த விபத்தில் வேனில் பயணித்த 6 பேரும் முச்சக்கரவண்டி சாரதியுமாக 7 பேர் உயிரிழந்ததுடன் 53 பேர் காயமடைந்தமை குறிப்பிடத்தக்கது.

நானுஓயா ரதெல்ல குறுக்கு வீதியில் ஐந்து தொன்களுக்கும் குறைவான அனைத்து வாகனங்களையும் இயக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும், வீதி அபிவிருத்தி அதிகார சபை மற்றும் பொலிஸாரும் இணைந்து இந்த வீதியின் போக்குவரத்து தொடர்பில் சாரதிகளுக்கு விழிப்புணர்வூட்டும் பதாதைகள் காட்சிப்படுத்தப்படவுள்ளன. இந்த வீதியில் ஐந்து தொன்களுக்கும் குறைவான எடையுள்ள வாகனங்களை செலுத்த அனுமதி வழங்கப்பட்டுள்ள போதிலும், அந்த வீதியின் போக்குவரத்தை தொடர்ந்து பொலிஸார் கண்காணிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளனர் என்றார்.

செலவைக் குறைக்க ரயிலில் பயணித்த அமைச்சர் இருவர்

அமைச்சர் ரொசான் ரணசிங்கவும் தேசிய விளையாட்டு சபையின் தலைவர் அர்ஜுன ரணதுங்கவும் கொழும்பிலிருந்து கண்டிக்கு ரயிலில் சென்றுள்ளனர்.

கண்டி பள்ளேகல மாகாண சபை கேட்போர் கூடத்தில் நடைபெற்ற மத்திய மாகாண விளையாட்டு அதிகாரிகள் மற்றும் முகாமைத்துவ அதிகாரிகளை தெளிவுப்படுத்தும் நிகழ்வுக்காக விளையாட்டுத்துறை அமைச்சர் ரொசான் ரணசிங்கவும் தேசிய விளையாட்டு சபையின் தலைவர் அர்ஜுன ரணதுங்கவும் கொழும்பிலிருந்து கண்டிக்கு ரயிலில் விஜயம் செய்துள்ளனர்.

அரசாங்கத்தின் நிதிச் செலவைக் கட்டுப்படுத்தும் ஜனாதிபதியின் தீர்மானத்துக்கு அமையவும் விளையாட்டுதுறை அமைச்சின் செலவுகளைக் குறைக்கும் நோக்குடன் குறித்த இருவரும் பொது போக்குவரத்தைப் பயன்படுத்தியதாக தெரிவித்துள்ளனர்.

மாத்தளை உதைப்பந்தாட்ட கழகத்தின் ஏற்பாட்டில் 2022 ஆம் ஆண்டுக்கான மாத்தளை மாவட்டப் பாடசாலை மாணவர்களுக்கிடையிலான உதைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் 16 வயதுக்கு கீழ் பிரிவில் முதலாம் இடத்தைப் பெற்றுக் கொண்ட அஜ்மீர் உதைப்பந்தாட்டக் குழுவினரையும் மற்றும் 14 வயதின் கீழ் பிரிவின் இரண்டாம் இடத்தைப் பெற்றுக் கொண்ட குழுவினரையும் பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு பாடசாலையின் கேட்போர் கூடத்தில் பாடசாலையின் பிரதி அதிபர் டி. அப்துல் சலாம் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் அஜ்மீர் சர்வதேச பழைய மாணவர் சங்கத்தின் அனுசரணையுடன் இயங்கும் உக்குவளை அஜ்மீர் உடைப்பந்தாட்ட சங்கத்தின் முகாமையாளர் எம். டப்லியூ. எம். ஜுமான் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார். (படம்: மாவத்தகம தினகரன் நிருபர்)

ரஷ்யா மீது தடைகளை விதிப்பதன் மூலம் போரிடும் வலிமையை குறைக்க முயற்சி

இந்தியாவுக்கான ஐரோப்பிய ஒன்றிய தூதுவர் தெரிவிப்பு

ஐரோப்பிய ஒன்றியத்தின் இந்தியாவுக்கான தூதுவர் யூகோ எஸ்டுடோ, புதுடில்லிக்கு விஜயம் மேற்கொண்டிருக்கும் ஜெர்மனிய பாராளுமன்ற தூதுக் குழுவை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தினார்.

ஐரோப்பிய ஒன்றியத்துக்கும் இந்தியாவுக்கும் இடையிலான மூலோபாய தொடர்புகள் குறித்தும் எதிர்கால நகர்வுகள் தொடர்பாகவும் பேச்சுவார்த்தைகள் அமைந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

இந்தியாவுக்கும் ஐரோப்பிய ஒன்றியத்துக்கும் இடையே ஒரு சுதந்திர வர்த்தக உடன்படிக்கையின் அவசியம் பற்றி உணரப்பட்டுள்ள போதிலும் பல வருடங்களாக இது தொடர்பில் சாதகமான முயற்சிகள் மேற்கொள்ளப்படவில்லை.

இந்த உடன்படிக்கை தொடர்பில் கடந்த ஜூன் மாதம் இரு தரப்புக்கும் இடையே மூன்றாம் கட்ட பேச்சுவார்த்தை டில்லியில் நடைபெற்றது. நான்காம் கட்ட பேச்சுகள் எதிர்வரும் மார்ச் மாதம் ஐரோப்பிய தலைநகரமொன்றில் நடைபெறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதுவரை நடைபெற்றுள்ள பேச்சுவார்த்தைகள் ஆக்கபூர்வமானதாக அமைந்திருந்தன என்று குறிப்பிடும் யூனியனின் இந்தியத் தூதுவர், இதில் சிக்கல்கள் இருப்பதாகவும் ஆனால் அவற்றைக் களைந்து இரு தரப்பும் இலக்கை அடைவதில் ஆர்வமாக உள்ளன என்றும் தெரிவித்துள்ளார்.

உலக அரங்கில் இந்தியாவின் குரல் அழுத்தமானது. ஆனால் இன்றைய உலக நடவடிக்கைகள் வழமையானதாக இல்லை. உக்ரைன் மீதான ரஷ்ய படையெடுப்பு சர்வதேச சட்டங்களை மீறுவதாக உள்ளது. எனவே ரஷ்யாவைத் தனிமைப்படுத்தி அதன் மீது தடைகளை விதிப்பதன் மூலம் ரஷ்யாவின் போரிடும் வலிமையை குறைப்பதற்கு ஐரோப்பிய ஒன்றியம் முயற்சித்து வருகிறது என்று எஸ்டுடோ மேலும் தெரிவித்துள்ளார்.

மலையக சுகாதார சேவைகள் முடக்கம்; நோயாளர்கள் பெரும் பாதிப்பு

ஹற்றன் விசேட நிருபர்

நாடு தழுவிய ரீதியில் வைத்தியர்கள் ஆரம்பித்துள்ள தொழிற்சங்க போராட்டம் காரணமாக மலையகத்தில் பெருந்தோட்ட மற்றும் நகர்புற மக்கள் பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளதாக பொது மக்கள் தெரிவிக்கின்றனர்.

நாட்டு மக்கள் பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் பாரிய சிரமங்களுடனேயே வாழ்ந்து வருகின்றனர். இந்நிலையில் வைத்தியர்களின் வேலை நிறுத்தம் காரணமாக சாதாரண பொது மக்கள் நெருக்கடியான நிலைக்கு தள்ளப்பட்டுள்ளதாக பலரும் சுட்டிக்காட்டுகின்றனர்.

நேற்று டிக்கோயா கிளங்கன் ஆதார வைத்தியசாலைக்கு வெளி நோயாளர் பிரிவில் சிகிச்சைக்காக தூர பிரதேசங்களிலிருந்து வருகை தந்த பலர் வைத்தியர்களின் வேலை நிறுத்தப் போராட்டம் காரணமாக ஏமாற்றத்துடன் வீடு திரும்பினர்.

பலர் தனியார் வைத்தியசாலைகளில் மருந்து பெறுவதற்கு பணம் இல்லாது தவிப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. இதே வேளை வைத்தியசாலையில் கிளினிக்,வெளிநோயாளர் பிரிவு உள்ளிட்டவை நேற்று வெறிச்சோடி காணப்பட்டன.அத்தியாவசிய சேவைகள் மற்றும் அவசர சிகிச்சை பிரிவு உள்ளிட்டவை வழமை போல் இயங்கியதை காணக்கூடியதாக இருந்தன.

இந்திய ஜனாதிபதியின் பாராளுமன்ற உரை முக்கியமானது

அனைவரும் தெரிந்துகொள்ள வேண்டும் என்கிறார் ஜெய்சங்கர்

இந்தியப் பாராளுமன்றத்தில் வரவு செலவு நிதியறிக்கை சமர்ப்பிக்கப்படுவதற்கு முன்னர் இந்திய ஜனாதிபதி திரவுபதி முர்மு பாராளுமன்றத்தில் ஆற்றிய உரையை அனைத்து இந்தியர்களும் கவனமாகப் படிக்க வேண்டும் என்றும் இந்தியாவின் இன்றைய வளர்ச்சி, உலகில் அதன் வகிபாகம் மற்றும் எதிர்காலம் பற்றி அவர் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளார் என்றும் இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கர் தன் ட்விட்டர் பக்கத்தில் தெரிவித்துள்ளார்.

உலக விவகாரங்களில் தீர்வுகளை முன்வைக்கும் நாடாக இந்திய தலை நிமிர்ந்துள்ளதாகவும் மக்களின் அடிப்படைத் தேவைகளை பூர்த்தி செய்யும், நவீன அடிப்படை கட்டமைப்புகளை உருவாக்கும், டிஜிட்டல் வலைப் பின்னலை அமைக்கும் நாடாக இந்தியா விளங்குவதாக அவர் தன் பக்கத்தில் எழுதியுள்ளார்.

2047ம் ஆண்டில் இந்தியா சுதந்திரம் பெற்று நூறு வருடங்களை எட்டும் போது அது எவ்வாறான நாடாக விளங்கும் என்பதை இந்திய ஜனாதிபதி தன் உரையில் கோடிட்டு காட்டியுள்ளார். சுயசார்புத்தன்மை, வறுமை நிலையைக் குறைப்பது, இளைஞர் யுகத்தைத் தோற்றுவிப்பது, பன்முகத் தன்மையை உறுதிப்படுத்துவது என ஏற்கனவே இந்தியா முன்னேற்றப்பாதையில் சென்று கொண்டிருக்கிறது என்று குறிப்பிட்டுள்ள அவர், ஷங்காய் கோர்பரேஷன் அமைப்பின் தலைமையையும் ஜி20 அமைப்பின் தலைமையையும் இந்தியா ஏற்றிருப்பது, குவாட் அமைப்பில் அங்கத்துவம் வகிப்பது என்பன உலக அரங்கில் அதன் நிலையை உயர்த்தியுள்ளது என்றும் தெரிவித்துள்ளார்.

வரிவிதிப்புக்கு எதிர்ப்பு தெரிவித்து ஹற்றனில் வங்கி ஊழியர்கள், வைத்தியர்கள் ஆர்ப்பாட்டம்

ஹற்றன் விசேட நிருபர்

வரிவிதிப்பு சட்டமூலத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து ஹட்டனில் வங்கி ஊழியர்கள் மற்றும் வைத்தியர்கள் நேற்று (08) ஹட்டன் மக்கள் வங்கிக்கு முன்னால் உள்ள ஹட்டன் கொழும்பு பிரதான வீதியில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

வரிவிதிப்பு சட்டமூலத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து நேற்று நாடு முழுவதிலும் உள்ள அரச மற்றும் தனியார் வங்கி ஊழியர்கள் வங்கிகளை மூடி ஆர்ப்பாட்டத்திலும் வேலை நிறுத்த போராட்டத்திலும் ஈடுபட்டனர்.

ஹட்டன் நகரில் உள்ள தனியார் மற்றும் அரச வங்கி ஊழியர்கள் 'வரி பாரம் வானளவு ஊழியர்கள் நடு வீதியில்' 'புத்தி ஜீவிகள் நாட்டுக்கு வேண்டாமா?' போன்ற வாசகங்கள் எழுதிய பதாதைகளை ஏந்திய வண்ணம் கோசமிட்டவாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

குறித்த ஆர்ப்பாட்டத்தில் இலங்கை வங்கி, மக்கள் வங்கி, ஹட்டன் நெசனல் வங்கி உள்ளிட்ட பல வங்கிகளை சேர்ந்த சுமார் நூற்றுக்கும் மேற்பட்ட ஊழியர்கள் மற்றும் வைத்தியர்கள் இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டனர்.

தினகரன் விளம்பரம்
0112429367
விற்பனை பிரிவு
0112429444,
0112429378
ஆசிரியபீடம்
editor.tkn@lakehouse.lk

தினகரன்
THINAKARAN
தினகரன்

2023 பெப்ரவரி 9 வியாழக்கிழமை

தொழுகை நேரம்

சுபஹ்	05.11
லுஹர்	12.26
அஸர்	03.48
மஃரிப்	06.21
இஷா	07.33

இன்றைய சுபதினம்

சுபகிருது வருடம் தை 26

ராகுகாலம் : பகல் : 1.30 - 3.00வரை
சுபநேரம் : காலை : 10.30 - 12.00வரை

யோகம்: சித்தயோகம்

திதி: சஷ்டி

நில நடுக்கத்தால் பாதிக்கப்பட்ட துருக்கி, சிரிய மக்களுக்கு ஜம்இய்யத்துல் உலமா அனுதாபம்

துருக்கி மற்றும் சிரியாவின் எல்லைப் பகுதிகளில் கடந்த 06ஆம் திகதி அடுத்தடுத்து நிகழ்ந்த நில நடுக்கத்தினால் ஏற்பட்ட உயிர்ச்சேதங்கள் மற்றும் பேரழிவுகளுக்காக அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா தனது ஆழ்ந்த கவலையையும் வருத்தத்தையும் தெரிவித்துக் கொள்வதாக ஜம்இய்யாவின் தலைவர் அஷ்ஷெய்க் ரிஸ்வி முப்தி மற்றும் பொதுச்செயலாளர் அஷ்ஷெய்க் அர்க்கம் நூராமித் ஆகியோர் வெளியிட்டுள்ள அனுதாபச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தொடர்ந்து அச்செய்தியில், இவ்வனர்த்தத்தினால் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிக்கும் அதேவேளை, பாதிக்கப்பட்ட மக்கள் கூடிய விரைவில் இயல்பு வாழ்க்கைக்குத் திரும்ப வேண்டும் என்றும் அதற்கான தைரியத்தையும் மனவலிமையையும் அல்லாஹுத்தஆலா அவர்களுக்கு வழங்க வேண்டும் என்றும் வல்ல அல்லாஹ்விடம் பிரார்த்தனை செய்கிறோம்.

அல்லாஹுத்தஆலா துருக்கி வாழ் மக்களின் உயிர்களையும் உடைமைகளையும் பாதுகாத்து சந்தோஷத்தையும்

06

நடைமுறையிலுள்ள வரிக் கொள்கை

வெகு விரைவில் சீர்திருத்தப்படும்

அமைச்சர் பந்துல குணவர்தன

லோரன்ஸ் செல்வநாயகம்

நட்டமீட்டும் அரச நிறுவனங்களின் சுமையை நாட்டு மக்கள் சுமக்க நேர்ந்துள்ள நிலையில் அவற்றை மறுசீரமைப்பதைத் தவிர மாற்றுவழி கிடையாது என ஊடகத்துறை மற்றும் போக்குவரத்து அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

நடைமுறையில் உள்ள வரிக் கொள்கை வெகுவிரைவில் மறுசீரமைக்கப்படும் என தெரிவித்த அமைச்சர், மிக மோசமான பொருளாதார நெருக்கடி காரணமாகவே

06

சோற்று பொதியினுள் கழிவு எலும்பு துண்டுகள்

அதிர்ச்சியடைந்தவர் பொலிஸில் முறைப்பாடு

கோழிக்கறியுடன் கூடிய சோற்றுப் பொதியில் சாப்பிட்டு அகற்றப்பட்ட கோழி எலும்புகள் இருந்ததாக நபர் ஒருவர் முறைப்பாடு செய்துள்ளார்.

இச் சம்பவம் வாத்துவ பொதுபிட்டிய பிரதேசத்தில் இடம் பெற்றுள்ளது. இந்த முறைப்பாட்டின் அடிப்படையில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக

06

மலையக பிரதிநிதிகளுடன் அரசாங்கம் பேச்சுவார்த்தை

ஜனாதிபதியின் உரைக்கு மனோ எம்.பி வரவேற்பு

மலையக மக்களின் பல்வேறு பட்ட பிரச்சினைகள் தொடர்பில் மலையக மக்கள் பிரதிநிதிகளுடன் பேச்சுக்ககளை நடத்த விரும்புவதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கூறி இருப்பதை நாம் எதிரணியில் இருந்தபடி வரவேற்கிறோம். நீண்டகாலமாக, இந்திய வம்சாவளி மலையக மக்களின் அரசியல், சமூக, பொருளாதார பிரச்சினைகள் பற்றி நமது மக்கள் பிரதிநிதிகளுடன் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தனியாக பேச வேண்டும் என நான் வலியுறுத்தி வந்துள்ளேன். அதன்மூலம் இந்நாட்டின் முழுமையான குடிமக்களாக மலையக தமிழ் மக்களும் வாழும் நிலை ஏற்பட வேண்டும் என நாம், தமிழ் முற்போக்கு கூட்டணியின் சார்பில் எதிர்பார்க்கிறோம்.

இது இன்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தரப்பில் இருந்து வெளிப்பட்டு இருப்பது பற்றி மகிழ்ச்சியடைகிறோம். இனி இதை உரையுடன் நிறுத்தி விடாமல், ஜனாதிபதி நடைமுறையில் செய்து காட்டவேண்டும் என தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

மனோ கணேசன் எம்பி மேலும் கூறியதாவது,

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் கொள்கை பிரகடன உரை தினத்தன்று நாம், தமிழ் முற்போக்கு கூட்டணி சார்பில் சபையில் பிரசன்னமாகி இருந்தோம். எம்முடன் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் மற்றும் தமிழ் தேசிய கூட்டமைப்பு ஆகிய எதிரணி கட்சிகளின் எம்பீக்களும் சபையில் பிரசன்னமாகி இருந்தனர்.

06

இனப்பிரச்சினைக்கான தீர்வு

பெரும்பான்மை சிங்கள மக்களின் கைகளிலேயே தங்கியுள்ளது

அவர்களின் ஆதரவுடனேயே அது சாத்தியப்படும்

லோரன்ஸ் செல்வநாயகம்

இனப் பிரச்சினைக்கான தீர்வு பெரும்பான்மை சிங்கள மக்களின் ஆதரவுடனேயே மேற்கொள்ளப்பட வேண்டும். அவ்வாறில்லாவிட்டால் அது சாத்தியமடையாது என பாராளுமன்ற உறுப்பினர் வீ. இராதாகிருஷ்ணன் தெரிவித்தார். தமிழ், முஸ்லிம் மக்களுடன் மாத்திரம் பேச்சுவார்த்தை நடத்தாது சிங்கள பெரும்பான்மை மக்களின் ஆதரவையும் பெற்றுக் கொண்டுதான் அதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். சிங்கள பெரும்பான்மை மக்கள் கையிலேயே அதற்கான தீர்வு உள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று இடம் பெற்ற ஜனாதிபதியின் கொள்கை விளக்க உரை தொடர்பில் பாராளுமன்ற கட்டிடத்தில் வைத்து கருத்து தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்:

நாட்டின் பல்வேறு திட்டங்கள் தொடர்பில் ஜனாதிபதியின் கொள்கை விளக்க உரை அமைந்திருந்தது. நாட்டின் தற்போதைய நெருக்கடியான நிலையில் பொருளாதாரத்தை எவ்வாறு மீள கட்டியெழுப்ப முடியும் என்றும் அவர் தெரிவித்திருந்தார். அனைவரும் இணைந்து

06

க.பொ.த சா/த பரீட்சையில் 9A சித்திபெற்ற மேல் மாகாண மாணவ, மாணவிகள் கௌரவிப்பு

பிரதம அதிதியாக ஜனாதிபதி சட்டத்தரணி பாயிஸ் முஸ்தபா பங்கேற்பு

மொறட்டுவை மத்திய விசேட நிருபர்

கல்வித்துறையில் மாணவர்களை ஊக்குவிக்கும் நோக்கில் திறமைச் சித்திபெற்ற மாணவர்களை பரிசு வழங்கி கௌரவிக்கும் பாராட்டு விழா எதிர்வரும் 12 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 08.30 மணிக்கு கஹட்டோவிட்டவில் உள்ள முஸ்லிம் லேடீஸ் ஸ்டடி சேர்க்கிள் கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

மேல் மாகாணத்தில் கடந்த 2022 ஆம் ஆண்டு நடைபெற்ற க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் 9 A பெற்று சித்தியடைந்த மேல் மாகாணத்தை சேர்ந்த மாணவ, மாணவிகளே இவ்வைபவத்தில் பரிசு வழங்கி கௌரவிக்கப்படவுள்ளனர்.

இந்நிகழ்வு கொழும்பு முஸ்லிம் கல்வி முன்னேற்ற சங்கம் மற்றும் கஹட்டோவிட்ட முஸ்லிம் லேடீஸ் ஸ்டடி சேர்க்கிள் ஆகியன இணைந்து நடாத்தவுள்ளன.

தேசிய ரீதியில் கடந்த

06

முன்னாள் ஜனாதிபதி நியமித்த ஆணைக்குழு;

நடவடிக்கைகளை தொடராமலிருக்க உச்ச நீதிமன்றத்திடம் தெரிவிப்பு

லோரன்ஸ் செல்வநாயகம்

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நியமித்த அரசியல் பழிவாங்கல் தொடர்பாக ஆராயும் ஆணைக்குழு வழங்கியுள்ள பரிந்துரை தொடர்பில் தொடர் நடவடிக்கைகளை மேற்கொள்ளாமல் இருப்பதற்கு அமைச்சரவை தீர்மானித்துள்ளதாக சட்டமா அதிபர் நேற்று உச்ச நீதிமன்றத்திற்கு அறிவித்துள்ளார்.

அதேவேளை, மேற்படி ஆணைக்குழு வழங்கியுள்ள பரிந்துரைகளை செல்லுபடியற்றதாக்க கோரி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் ஜே.வி.பியின் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர்

06

13வது அரசியலமைப்பு திருத்தம் தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கான தீர்வாகாது

சி.வி. விக்னேஸ்வரன் எம்.பி தெரிவிப்பு

லோரன்ஸ் செல்வநாயகம்

13வது அரசியலமைப்பு திருத்தம் தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கான தீர்வாகாது என பாராளுமன்ற உறுப்பினர் சி.வி. விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

ஒற்றையாட்சிக்குள் அனைத்து சந்தர்ப்பங்களிலும் பெரும்பான்மை சிங்கள மக்கள் கருத்துக்களை மட்டுமே அரசாங்கம் நிறைவேற்றி வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

ஊடகவியலாளர் எழுப்பிய கேள்விகளுக்கு பதிலளிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், நான் முதலமைச்சராக பதவி வகித்த காலத்தில் அனைத்தையும் புரிந்துகொண்டேன். தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு ஏன் தீர்வுகாண முடியாது? மத்திய அரசு ஏன் எமக்காக

06

"வடக்கில் இருந்து கிழக்கு நோக்கி" பேரணி வேலன் சுவாமிக்கு அழைப்பாணை

"வடக்கில் இருந்து கிழக்கு நோக்கி "பேரணியில் கலந்து கொண்டமை, சட்டவிரோதமான பேரணியில் கலந்து கொண்டவர்கள் என குற்றம் சாட்டி வேலன் சுவாமிக்கு யாழ். பொலிஸார் அழைப்பாணை வழங்கியுள்ளனர்.

கடந்த சனிக்கிழமை சுதந்திர தினத்தன்று, யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் இருந்து கிழக்கு நோக்கிய பேரணி இடம்பெற்றது.

குறித்த பேரணியில் கலந்து கொண்டமை சட்டவிரோதமானது என குறிப்பிட்டு நேற்றைய தினம் புதன்கிழமை சிவகுரு ஆதீனத்தில் வைத்து வேலன் சுவாமிகளிடம் சிவில் உடையில் சென்றவர்கள் தம்மை பொலிஸார் என அடையாளப்படுத்தி அழைப்பாணையை வழங்கியுள்ளனர். இதேவேளை குறித்த அழைப்பாணையில், சிவஞானம் சிறிதரன் உள்ளிட்ட 7 பேருக்கு எதிராக , சட்டவிரோத பேரணியில் கலந்து கொண்டவர்கள் என குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

2015 இல. 05 தேசிய ஒளடத ஒழுங்குபடுத்தல் அதிகார சபை

சட்டத்தின் (131) பிரிவின் கீழ் மற்றும் கௌரவ நீதிமன்றத்தின் கட்டளைப்பிரகாரம் இலங்கை மக்களிடம் மன்னிப்புக் கோரல்

நில்மினி, யட்டுவ 05, பத்ததேகம, வெலிகமவில் வசிக்கும் எல்லேகொட கமகே தொன் எடிடிக்மன் ஆனந்த ஆகிய நான், பாவனைக்காக பாதுகாப்பற்றதாக தீர்மானிக்கப்பட்ட Tramadol Hcl எனும் மருந்துகளை என்னிடம் வைத்திருந்த குற்றத்திற்கு வழக்கு இலக்கம் 76752 இன் கீழ் தொடுக்கப்பட்ட வழக்கில் நான் குற்றவாளியாக்கப்பட்டு மாத்தறை நீதவான் நீதிமன்றத்தில் ரூ. 75000/- தண்டத்தொகைக்கு ஆளானேன் என்பதை மக்களுக்கு இத்தால் அறிவித்துக் கொள்கிறேன். இக் குற்றம் என்னால் மீண்டும் இழைக்கப்படமாட்டாது என தெரிவித்துக் கொள்வ துடன் மேற்கொண்ட குற்றம் சம்பந்தமாக சகல இலங்கை மக்களிடமும் மன்னிப்புக் கோருகிறேன்.

ரயிலுடன் கார் மோதி விபத்து; சாரதி பலி

வெலிகம கம்புறுகமுவவில் சம்பவம்

வெலிகம தினகரன் நிருபர்

வெலிகம – கம்புறுகமுவ – பொரல்ல வீதியில் அமைந்துள்ள ரயில் கடவையில் (06) ரயிலுடன் கார் ஒன்று மோதியதில் 34 வயதுடைய சாரதி பலியானார்.

கம்புறுகமுவ பிரதேசத்தைச் சேர்ந்த புபுது பிரியங்கர எனும் ஒரு பிள்ளையின் தந்தையே இவ்வாறு உயிரிழந்தவர் ஆவார்.

மாத்தறையிலிருந்து கண்டி நோக்கி பயணித்துக்கொண்டிருந்த கடுகதி ரயில் வண்டியில் மோதுண்டு சுமார் 50 மீட்டர் தூரத்துக்கு கார் தூக்கிவீசி

06

வழக்குப்பொருட்கள் காணாமல் போனமை தொடர்பில் கைதானவருக்கு 16 வரை விளக்கமறியல்

லோரன்ஸ் செல்வநாயகம்

நீதிமன்றத்தின் களஞ்சிய சாலையில் வைக்கப்பட்டிருந்த வழக்குப் பொருட்கள் காணாமல் போனமை தொடர்பில் கைது செய்யப்பட்டுள்ள அந்த அறையின் பொறுப்பாளரை எதிர்வரும் 16ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு மஜிஸ்திரேட் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கொழும்பு பிரதம மஜிஸ்திரேட் நீதிமன்றத்தில் பிரதான வழக்குப் பொருட்கள் களஞ்சியசாலை அமைந்துள்ள அறையிலிருந்து 60 இலட்சத்திற்கும் அதிகமான பெறுமதியுடைய நகைகள் காணாமல்போயுள்ளன. அச் சம்பவம் தொடர்பில் குற்றத்தடுப்பு விசாரணைத் திணைக்களத்தினால் குறித்த அறைக்குப் பொறுப்பான நபர் கைதுசெய்யப்பட்டிருந்தார்.

நேற்றைய தினம் அவரை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தியிருந்த போதே கொழும்பு பிரதம மஜிஸ்திரேட் நீதிமன்ற நீதவான் பிரசன்ன அல்விஸ் மேற்படி உத்தரவைப் பிறப்பித்துள்ளார்.

நீதிமன்ற எழுதுவினைஞரான மொஹமட் நஜீப் மொஹமட் நத்பி என்பவருக்கே நீதிமன்றம் மேற்படி உத்தரவைப் பிறப்பித்துள்ளது.

கொழும்புத் தமிழ்ச் சங்கம் நடத்தும்

தமிழ்ப் பட்டயக் கற்கைநெறியின் 2021 - 2022 சான்றிதழ் வழங்கும் வைபவம், தமிழ்நிதி வழங்கல்

கொழும்புத் தமிழ்ச் சங்கம் நடத்தும் தமிழ்ப் பட்டயக் கற்கை நெறி 2021 2022 சான்றிதழ் வழங்கு வைபவம் மற்றும் தமிழ்நிதி வழங்குதல் நிகழ்வு கொழும்புத் தமிழ்ச் சங்க சங்கரப்பிள்ளை மண்டபத்தில் எதிர்வரும் சனிக்கிழமை (11) காலை 10.30 மணிக்கு கொழும்புத் தமிழ்ச் சங்க புலமைக்குழுத் தலைவர் பேராசிரியர் சபா ஜெயராசா தலைமையில் நடைபெறவுள்ளது.

பிரதம விருந்தினராக ஜனாதிபதி சட்டத்தரணி கலாநிதி க. கனக ஈஸ்வரன் கலந்து கொள்வார். மூத்த எழுத்தாளர் திருமதி அன்னலட்சுமி இராஜதுரை தமிழ்நிதி விருதினைப் பெற்றுக்கொள்வார்.

தொடக்கவுரையினை கொழும்புத் தமிழ்ச் சங்க தலைவர் சட்டத்தரணி நடராஜர் காண்டீபன்,

06

ஜாதிக லோதரய்கி மண்டலய
தேசிய லொத்தர் சபை
National Lotteries Board
செவ்வாய்க்கிழமை 2023.02.07
உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk

மஹஜன சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் 5024
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 25,272,363.00
ஆங்கில எழுத்து S
வெற்றி இலக்கங்கள் 3 9 6 4 1 2

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3266
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 77,417,865.60
ஆங்கில எழுத்து K
வெற்றி இலக்கங்கள் 03 54 55 71

ராசி சுப பலன்
சீட்டிழுப்பு இலக்கம் 333
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 2,592,282.60
வெற்றி இலக்கினம் துலாம்
வெற்றி இலக்கங்கள் 01 46 51 55
விசேட இலக்கினம் துலாம்

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் 1479
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 10,274,523.60
வெற்றி இலக்கினம் கும்பம்
வெற்றி இலக்கங்கள் 1 4 2 9 2 6

தன நிதானய
சீட்டிழுப்பு இலக்கம் 1054
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 82,463,234.80
ஆங்கில எழுத்து Y
வெற்றி இலக்கங்கள் 29 36 51 66

மெகா பவர்
சீட்டிழுப்பு இலக்கம் 1372
அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 298,484,126.00
ஆங்கில எழுத்து D
சுப்பர் இலக்கம் 26
வெற்றி இலக்கங்கள் 03 13 32 41
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

தினகரன்
THINAKARAN
35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321
சுபகிருது வருடம் தை மாதம் 26ஆம் நாள் வியாழக்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1444 ரஜப் பிறை 17

குறள் தரும் சிந்தனை

கழாஅக்கால் பள்ளியுள் வைத்தற்றால் சான்றோர்
குழாஅத்துப் பேதை புகல்

அறிஞர்கள் கூடியுள்ள மன்றத்தில் ஒரு முட்டாள் நுழைவது என்பது, அசுத்தத்தை மிதித்த காலைக் கழுவாமலே படுக்கையில் வைப்பதைப் போன்றது.

நாட்டின் நலன்களுக்கு முன்னுரிமை அளிக்கப்பட வேண்டிய காலம்

பொருளாதார நெருக்கடியில் சிக்குண்டுள்ள நாடு மீட்டெடுக்கப்பட வேண்டும். அதுவே நாட்டின் அனைத்துத் தரப்பினரதும் எதிர்பார்ப்பாக உள்ளது. இப்பொருளாதார நெருக்கடியில் இருந்து மீட்சி பெற்றால்தான் வளமான பொருளாதார வாழ்வை மக்கள் பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருக்கும்.

அதனை அடிப்படையாகக் கொண்டுதான் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. என்றாலும் இது இலகுவான பணி அல்ல. அப்படியிருந்தும் நாட்டின் பொருளாதார மீட்சியை இலக்காகக் கொண்ட வேலைத்திட்டங்களை அவர் துணிச்சலுடன் முன்னெடுத்து வருகிறார்.

அதன் பயனாகவே கடந்த வருடம் (2022) ஏப்ரல் முதல் ஜூலை வரை நிலவிய தீவிர பொருளாதார நெருக்கடி கட்டம் கட்டமாக தணிந்து வருகின்றது. அதனை மக்கள் தெளிவாக உணர்ந்துள்ளனர்.

இம்மீட்சியின் அடிப்படையில் நாட்டு மக்களுக்கு நிவாரணங்கள் பெற்றுக் கொடுக்கும் வேலைத்திட்டங்களும் அவ்வப்போது முன்னெடுக்கப்படுகின்றன. அதன் பிரதிபலன்களும் மக்களை சென்றடைந்த வண்ணமுள்ளன.

நாடு முகம்கொடுத்துள்ள பொருளாதார நெருக்கடி கட்டம் கட்டமாக நீங்கி வருகின்ற அதேநேரம், பொருளாதாரமும் ஓரளவு ஸ்திர நிலையை அடைந்துள்ளது. ஆனாலும் பொருளாதார நெருக்கடியில் இருந்து நாடு முழுமையாக மீட்சி பெற்றுவிடவில்லை என்பது மறைக்க முடியாத உண்மை.

அதனால் இந்நெருக்கடியில் இருந்து நாட்டை மீட்டெடுக்க முன்னெடுக்கப்படும் நடவடிக்கைகளில் ஒன்றாக வரிதிருத்தத்தை அரசாங்கம் முன்னெடுத்துள்ளது. இருந்த போதிலும், இத்திருத்தத்திற்கு எதிர்ப்புகளும் ஆட்சேபனைகளும் தெரிவிக்கப்படுகின்றன. தொழிற்சங்க நடவடிக்கைகளும் வேலைநிறுத்தங்களும் முன்னெடுக்கப்படுகின்றன. ஆனால் இவ்வரித் திருத்தமானது அரசாங்கம் விருப்பத்துடன் மேற்கொண்டுள்ள ஒரு காரியமல்ல. மாறாக நாட்டைக் கட்டியெழுப்புவதற்கான நடவடிக்கைகளில் ஒன்றாகவே வரித்திருத்தம் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

இவ்வாறான சூழலில் 9 ஆவது பாராளுமன்றத்தின் நான்காவது கூட்டத் தொடரை நேற்று ஆரம்பித்து வைத்து அக்கிராசன உரை நிகழ்த்திய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, 'வரித்திருத்தத்திற்கு எதிராக முன்னெடுக்கப்படும் நடவடிக்கைகளை அடிப்படையாகக் கொண்டு உழைக்கும் போதே வரி செலுத்தும் முறைமையை நீக்கினால், நாடு 100 பில்லியன் ரூபா வருமான இழப்புக்கு முகம்கொடுக்கும். அத்தோடு வரி செலுத்தும் எல்லையை இரண்டு இலட்சம் ரூபா வரை அதிகரித்தால் 63 பில்லியன் ரூபா இழப்பையும் சந்திக்க நேரிடும். இதன்படி மொத்தம் 163 பில்லியன் ரூபா இழப்பு ஏற்படும். அவ்வாறான பாரிய தொகையை இழக்கும் நிலையில் நாம் இல்லை' என்று குறிப்பிட்டுள்ளார்.

அதுதான் உண்மை. நாட்டைப் பொருளாதார நெருக்கடியில் இருந்து மீட்டெடுப்பதற்கே முன்னுரிமை அளிக்க வேண்டும். அதன் நிமித்தம் எல்லாத் தரப்பினரும் பங்களிப்புக்களை நல்க வேண்டும். இது அற்ப அரசியல் இலாபம் தேடக்கூடிய விடயமல்ல. மாறாக மக்களின் அன்றாட வாழ்வுடன் சம்பந்தப்பட்டதொரு விவகாரம் இது.

நாட்டுக்கு ஒரு வரிக்கொள்கை அவசியம் என்று ஏற்கனவே பலர் குறிப்பிட்டுள்ளனர். ஆனால் நாட்டை மீட்டெடுக்கும் நோக்கில் மேற்கொள்ளப்பட்டுள்ள வரி திருத்தத்தை அவ்வாறானவர்களும் விமர்சிப்பதுதான் வேடிக்கையானது.

அதேநேரம் பொருளாதார நெருக்கடியில் இருந்து நாட்டை மீட்டெடுப்பதற்காக அரசாங்கம் முன்னெடுக்கும் நடவடிக்கைகளுக்கு முட்டுக்கட்டை போடும் வகையிலேயே இவ்வாறான விமர்சனங்களும் முயற்சிகளும் முன்னெடுக்கப்படுகின்றன. அதனை அடிப்படையாகக் கொண்டுதான், 'அதிகாரம் கிடைக்கப்பெற்றால் வரி குறைக்கப்படும். சம்பளம் அதிகரிக்கப்படும்' என்று சிலர் குறிப்பிடுகின்றனர்.

நாடு தற்போது இருக்கும் நிலையில் வரிக்குறைப்பை மேற்கொள்ள முடியுமா? சம்பள உயர்வைத் தான் வழங்க முடியுமா? என்பதை மக்கள் அறியாதவர்கள் அல்லர். 2019 ஆண்டின் இறுதிப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட வரித் திருத்தத்தின் ஊடாக 10 வரிகள் முற்றாக நீக்கப்பட்டு, 05 வரிகள் நிவாரணம் வழங்கும் வகையில் திருத்தம் செய்யப்பட்டன. இதன் விளைவாக நாடு பெருந்தொகை வருமானத்தை இழந்தது. அவ்வாறான நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டாமென பொருளாதார நிபுணர்கள் உட்பட பல தரப்பினரும் அன்றே எடுத்துக் கூறினர்.

அந்நடவடிக்கையின் பிரதிபலனாக முன்னொரு போதும் முகம் கொடுக்காத பொருளாதார நெருக்கடிக்கு நாடு உள்ளானது. நாட்டின் தற்போதைய பொருளாதார நிலை, இந்நிலைக்கு காரணமாக அமைந்த விடயங்கள் என்பவற்றை அறியாதவர்கள்தான் இவ்வாறான கதைகளைக் கூறுகின்றனர். ஆனால் இவர்களின் கதைகளை நம்பும் நிலையில் மக்கள் இல்லை. அத்தோடு இவ்வாறானவர்களின் பசப்பு வார்த்தைகளை நம்பி மீண்டும் பொருளாதார நெருக்கடிக்குள் சிக்கவும் அவர்கள் தயாரில்லை. இது மறுக்கவோ மறைக்கவோ முடியாத உண்மையாகும்.

editor.tkn@lakehouse.lk

வடக்கு, கிழக்கு யுத்தத்தை விட பாரதூரமான பொருளாதார போரை எதிர்கொண்டுள்ளோம்

பாராளுமன்றத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்று அக்கிராசன உரை

கடந்த சுதந்திர தினக் கொண்டாட்டத்தின் போது பாடசாலை மாணவ மாணவிகள் தேசிய கீதம் மற்றும் ஜயமங்கள கீதம் இசைத்த போது, அவர்களது எதிர்காலத்தைப் பாதுகாத்தல் சம்பந்தமாக நான் சிந்தித்தேன். இந்த மாணவ மாணவிகளின் மனங்களில் அவர்களது எதிர்காலம் பற்றி நூற்றுக்கு நூறு வீதம் நம்பிக்கை காணப்படுகின்றதா?

சுதந்திர தின நிகழ்வுக்காக இலங்கைக்கு வந்த பொதுநலவாய அமைப்பின் பொதுச் செயலாளர் திருமதி பெட்ரீசியா ஸ்கொட்லன்ட் எமது நாட்டின் இளைஞர் குழுக்களுடன் கலந்துரையாடினார். அதன் போது பெரும்பாலான இளைஞர் யுவதிகள், நீண்ட காலமாக இடம் பெற்று வந்த விடயங்கள் காரணமாக நாட்டின் எதிர்காலம் தொடர்பான நம்பிக்கையினை இழந்துள்ளதாக சுட்டிக் காட்டியுள்ளார்கள். இந்த இளைஞர் யுவதிகளின் மனங்களில் எதிர்காலம் பற்றி நூற்றுக்கு நூறு வீதம் நம்பிக்கை காணப்படுகின்றதா?

சுதந்திர தினத்துக்குப் பிந்திய தின ஞாயிறு சன்டே டைம்ஸ் பத்திரிகையில் ஒரு விசேட சிறப்பிதழ் வெளியிடப்பட்டது.

மதீசா உடவத்த இவ்வாறு கூறுகின்றார்.

While leaving the country is a constant resonating thought, there is still a smallest spark inside me that's holding me close to home. I intend not let it die. I have not given up on my Sri Lanka yet.

"நாட்டை விட்டுச் செல்லும் எண்ணம் என் மனதில் அடிக்கடி உதித்த போதும் எதிர்பார்ப்பின் சியதோர் ஒளிவிளக்கு இன்னமும் என் மனதில் ஒளிர்விடுகிறது. அது இப்பூமிக்கு என்னை சமீபமாக்குகிறது. நான் இன்னமும் இலங்கையை கைவிடவில்லை."

கிளிபேர்ட் பெர்னாந்து இவ்வாறு கருத்து தெரிவிக்கின்றார்.

I won't migrate but I sincerely hope here will be change in Sri Lanka. All our attitudes need to change, better discipline is needed, pepole need to obey rules and show more empathy towards each other – Clifford Fernando

"நாட்டை விட்டு வெளியேறுவதற்கு நான் எண்ணாத போதும் இலங்கையில மாற்றம் நிகழும் என நான் எதிர்பார்க்கின்றேன். நம் அனைவரதும் மனோபாவங்கள் மாற்றமடைதல் வேண்டும். நாம் ஒழுக்கமுடையவர்களாக இருக்க வேண்டும். சட்டத்துக்கு கட்டுப்படுதல் வேண்டும். மற்றவர்கள் மீது அனுதாபம் காட்டுதல் வேண்டும்."

சிலானி விஜேசிங்க இவ்வாறு கூறுகின்றார்.

I dont want to leave my country – I want to help it out of the situation it is in currently. I also dont want the people leaving at a time the country needs them the most,only to come back when higs are better. – Cilani Wijesinghe

"நான் எனது நாட்டை விட்டுச் செல்ல மாட்டேன். தற்போது நாடு அடைந்துள்ள நிலைமையிலிருந்து மீண்டும் கட்டியெழுப்புவதற்கான தேவை எனக்குள்ளது. இந்த நெருக்கடியான வேளையில், நாட்டுக்கு மனிதவளம் அத்தியாவசியமான வேளையில் நாட்டை விட்டுச் சென்று நிலைமை சீரான பின்னர் மீண்டும் வருபவர்கள் எனக்குத் தேவையில்லை."

இக்கருத்துக்களை வாசிக்கின்ற போது அண்மையில் அநுராதபுரத்தில் என்னைச் சந்திப்பதற்கு வந்த இரட்டைச் சகோதரிகள் எனது ஞாபகத்துக்கு வருகின்றனர். பல்லேகம ஹேமரதன தேரர் அவர்களுக்கு நியமனப் பத்திரம் வழங்கும் நிகழ்வின் இறுதியில் இந்த இரண்டு சிறுமிகளும் என்னைச் சந்தித்தார்கள். அவர்கள் குருநாகல் மலியதேவ பெண்கள் கல்லூரியில் தரம் 5 இல் கல்வி கற்கின்றார்கள். அவர்களின் பெயர் நமதி பெரேரா மற்றும் செனுதி பெரேரா. அவர்கள் பாடல் ஒன்றைப் பாடுகிறார்கள். அப்பாடலின் இறுவட்டு ஒன்றை எனக்குத் தந்தார்கள். பாடலின் தலைப்பு – நாட்டை விட்டுச் செல்ல மாட்டேன்.

எனது உரையின் பின்னர் அப்பாடலை ஒளிபரப்புமாறு நான் தொலைக்காட்சி ஊடகங்களிடம் கேட்டுக் கொள்கின்றேன்.

இந்த மாணவ மாணவிகள், இந்த இளைஞர் யுவதிகள் எமது நாட்டின் எதிர்கால சந்ததியினர் ஆவார்கள். நாட்டை விட்டுச் செல்லாது நாட்டை மீண்டும் கட்டியெழுப்புவதற்கு பிரார்த்தனை செய்யும் எதிர்கால சந்ததியினர் ஆவார்கள். அவர்களுக்கு சுதந்திரமாக வாழக்கூடிய ஒரு நாட்டை உருவாக்குவது எமது அனைவரதும் பொறுப்பாகும். இந்தச் சபையில் உள்ள உங்களுடைய பொறுப்பும் அதுவாகும். அனைத்து இலங்கையர்களதும் பொறுப்பு அதுவாகும்.

கடந்த பாராளுமன்ற கூட்டத்தொடரை ஆரம்பித்து வைத்து, நான் கருத்துக்களை முன்வைத்த சந்தர்ப்பத்தில் நாடு இருந்த நிலைமை பற்றி உங்களுக்கு நினைவிருக்குமென நான் நம்புகிறேன். கடந்த வரவு செலவுத்திட்ட முன்மொழிவினை சமர்ப்பித்த வேளை நாடு இருந்த நிலைமையும், அதேபோல் ஏழு எட்டு மாதங்களுக்கு முன்பு நாடு இருந்த நிலைமையும் உங்களுக்கு நினைவிருக்கும்.

பாடசாலைகள் மூடப்பட்டிருந்தன. பரீட்சைகள் நடாத்த முடியாதிருந்தது. உரம் இன்றி விவசாயம் மற்றும் பெருந்தோட்டக் கைத்தொழில் வீழ்ச்சியடைந்து காணப்பட்டன. விவசாயிகள் நிர்க்கதியாகி இருந்தார்கள். சுற்றுலாக் கைத்தொழில் வீழ்ச்சியுற்றுக் காணப்பட்டது. பத்து பன்னிரண்டு மணித்தியாலங்கள் மின்சாரம் துண்டிக்கப்பட்டு காணப்பட்டது. எரிவாயு அறவே இல்லாமல் இருந்தது. நகர்ப்புற வீடுகளில் குடியிருப்பவர்கள் உணவு சமைக்க முடியாத நிலையில் இருந்தார்கள். மண்ணெண்ணெய், பெட்ரோல், டீசல் வரிசைகளில் நாள் கணக்கில் அலைக்கழிய நேரிட்டது. களைப்புற்ற மக்கள் தமது உயிர்களை வரிசைகளில் நின்ற நிலையில் இழந்தார்கள். அழுத்தத்தை பொறுத்துக்கொள்ள இயலாமல் மக்கள் வீதிக்கு இறங்கினார்கள்.

ஆனாலும் இன்று நிலைமை மாற்றமடைந்துள்ளது. கடந்த காலங்களில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் காரணமாக இத்தகைய அழுத்தங்களை மெது மெதுவாக குறைப்பதற்கு எம்மால் முடிந்துள்ளது. பொருளாதாரம் தற்போது ஓரளவு ஸ்திரத்தன்மையினை அடைந்துள்ளது. மக்கள் ஓரளவு ஆறுதல் அடைந்துள்ளார்கள். அபாயகரமான தொங்கு பாலத்தில் இலங்கைத் தாயை வெகுதூரம் பாதுகாப்பாக கொண்டு செல்வதற்கு எம்மால் முடிந்துள்ளது. நாம் அவ்வாறு பயணித்த பாதை இலகுவானது அல்ல. ஆனாலும் பயணம் இன்னமும் முடிவடையவில்லை.

யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட வடக்கு, கிழக்கு அபிவிருத்தியில் கூடுதல் கவனம் செலுத்தப்படும்

வீழ்வதற்கு நெருங்கியிருந்து அரச நிதி முறைமையைப் பாதுகாப்பதற்கு நாம் அர்ப்பணித்தோம். அரச செலவினங்களை மட்டுப்படுத்தினோம். வரி வருமானத்தை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தோம்.

கடந்த காலத்தில் எடுக்கப்பட்ட சில தீர்மானங்கள் காரணமாக வரி வருமானம் வீழ்ச்சியடைந்ததனை நாம் அறிவோம். 2019 டிசம்பர் 31 ஆம் திகதியளவில் தொழில்முயற்சிகள், கம்பனிகள் மற்றும் தனிநபர்கள் 16 இலட்சம் பேர்கள் வரி செலுத்தினார்கள். 2021 ஆம் ஆண்டு டிசம்பர் மாதமளவில் வரி செலுத்தும் எண்ணிக்கையினர் 5 இலட்சம் பேர் வரை வரை வீழ்ச்சியடைந்தது. அரசின் வரி வருமானம் படுமோசமாக வீழ்ச்சியடைந்தது.

இதன் காரணமாக நாட்டின் பொருளாதாரத்திற்கு விளையும் அழிவினைப் புரிந்து கொண்ட பெரும்பாலான நிறுவனங்கள் மற்றும் அமைப்புகள் மீண்டும் 2019 ஆம் ஆண்டு காணப்பட்ட வரி முறைக்குச் செல்லுமாறு கேட்டுக் கொண்டார்கள். ஸ்ரீலங்கா நிர்வாக சேவை சங்கம் 2022 ஏப்ரல் மாதம் பொருளாதார மற்றும் சமூக மறுமலர்ச்சிக்கான துரித முன்மொழிவுத்திட்டம் ஒன்றை முன்வைத்தது.

முன்மொழிவுத்திட்டத்தின் பிரிவு 3.3 இன் கீழ் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

ஸ்ரீலங்கா நிர்வாக சேவை சங்கமானது சர்வதேச நாணய நிதியத்துடன் கலந்துரையாடல் ஆரம்பிக்கப்படுவதற்கு முன்னதாகவே இந்த முன்மொழிவினை சமர்ப்பித்தது. தற்போது நாம் இந்த முன்மொழிவுகளை நடைமுறைப்படுத்துகின்றோம்.

ஆனாலும் இவ்வாறான ஒரு வரிக்கொள்கை தேவை எனத் தெரிவித்தவர்கள் இன்று வரிக் கொள்கையினை விமர்சிக்கின்றார்கள். வரி அறவிடுவதற்கான புதியதொரு கொள்கையினை அறிமுகப்படுத்தல் அரசியல் ரீதியாக பிரபல்யம் மிக்கதொரு தீர்மானம் அல்ல. நினைவிற் கொள்ளுங்கள். எனக்குத் தேவை பிரபல்யமடைவதற்கு அல்ல. எனக்குத் தேவை இந்த நாடு அடைந்துள்ள நெருக்கடி நிலையிலிருந்து மீளக்கட்டியெழுப்புவதற்கு ஆகும். ஆம். நான் நாட்டுக்கான பிரபல்யமற்ற தீர்மானங்களை எடுப்பேன். அத்தகைய தீர்மானங்களின் முக்கியத்துவத்தை இன்னும் இரண்டு மூன்று ஆண்டுகளில் பெரும்பாலானோர் புரிந்து கொள்வார்கள்.

வரி செலுத்த வேண்டிய வருமான எல்லையினை ஒரு இலட்சம் ரூபாவிலிருந்து இரண்டு இலட்சம் ரூபாய் வரை அதிகரிக்க வேண்டுமென சிலர் கூறுகின்றார்கள். உழைக்கும் போதே வரி செலுத்தும் முறையை நீக்க வேண்டுமென மற்றும் சிலர் கூறுகிறார்கள். நாம் விருப்பத்துடன் இந்த வரிகளை விதிக்கவில்லை. ஆனாலும் எமக்கு விருப்பமானவற்றை செய்தவுடன் நாட்டைக் கட்டியெழுப்ப முடியாது. விரும்பாவிட்டாலும் சரியானதைச் செய்ய வேண்டும்.

உழைக்கும் போதே செலுத்தும் வரியை நீக்கினால் நாடு 100 பில்லியன் ரூபாவை இழக்கும். வரி எல்லையை இரண்டு இலட்சம் வரை அதிகரித்தால் நாடு 63 பில்லியன் ரூபாவை இழக்கும். இழக்கப்படும் மொத்த தொகை 163 பில்லியன் ரூபாவாகும். இவ்வளவு பாரியதொரு தொகையை இழக்கும் நிலையில் நாம் இல்லை.

உலகின் ஏனைய நாடுகளில் கூடுதலான அளவு வரி அறவிடப்படுவது வரி செலுத்த வேண்டிய நபர்களிடம் ஆகும். இந்தியா – நேரடி வரி 67 சதவீதம். மறைமுக வரி 33 சதவீதம். 2021 இல் பங்களாதேஷ் நேரடி வரி 68 சதவீதம். மறைமுக வரி 32 சதவீதம். நேபாளம் நேரடி வரி 69 சதவீதம். மறைமுக வரி 31 சதவீதம். 2021 ல் தாய்லாந்து நேரடி வரி 63 சதவீதம். மறைமுக வரி 37 சதவீதம். 2020 ல் மலேசியா நேரடி வரி 66 சதவீதம். மறைமுக வரி 34 சதவீதம். 2021 ல் இந்தோனேசியா நேரடி வரி 60 சதவீதம். மறைமுக வரி 40 சதவீதம்.

ஆனாலும் எமது நாட்டில் நிலைமை அதற்கு மாற்றமானது ஆகும். 2021 இல் எமது நாட்டின் நேரடி வரி 21 சதவீதம். மறைமுக வரி 79 சதவீதம்.

எமது நாட்டில் நிவாரண உதவிகள் வழங்கும் முறை உருச்சிதைவுற்றுக் காணப்படுகிறது. அதிக வருமானம் உழைக்கும் நபர்கள் கூட நிவாரண உதவிகளைப் பெறுகின்றார்கள். நாம் இந்த நிலைமையினை மாற்றுவதற்கு நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றோம். உண்மையான வறுமை சமூகத்தை நாம் அடையாளம் காண்கின்றோம். நிவாரண வங்கிக் கணக்கின் ஊடாக அவர்களுக்கு நேரடியாக பணம் செலுத்தும் வேலைத்திட்டம் ஒன்றை நாம் தயாரித்து வருகின்றோம்.

முஸ்லிம் மக்கள் பல்வேறு பிரச்சினைகளை எதிர்கொள்வதனை நாம் அறிவோம். அது தொடர்பாகவும் நாம் முழு அவதானம் செலுத்துகின்றோம்

ஆனாலும் சில குழுக்கள் இந்த பயணத்திற்கு முட்டுக்கட்டை போடுவதற்கு முயற்சி செய்கிறார்கள். அவர்களுக்கு அதிகாரம் கிடைத்தால் வரி குறைக்கப்படும் சம்பளம் அதிகரிக்கப்படும் போன்ற கற்பனைக் கதைகளைக் கூறுகின்றார்கள். பல்வேறு முட்டுக்கட்டை போடும் செயற்பாடுகளை ஏற்பாடு செய்வதற்கு முயற்சி செய்கின்றார்கள்.

நான் ஒரு போதும் செய்ய முடியாதவற்றைக் கூற மாட்டேன். அதிகாரத்துக்காக பொய் கூற மாட்டேன். வரவு செலவுத்திட்ட உரையின் போதும் பாராளுமன்றத்தை திறந்துவைக்கும் போதும் நான் கூறிய அனைத்தையும் நடைமுறைப்படுத்தி வருகின்றேன். அதன் மூலம் பொருளாதாரத்தில் ஓரளவு ஸ்திரத்தன்மையை ஏற்படுத்துவதற்கு எம்மால் முடிந்துள்ளது.

பெருந்தோட்ட மக்கள் தொடர்பாகவும் நாம் விசேட கவனம் செலுத்துவோம்

மறைப் பொருளாதாரத்தில் இருந்து நேர்கணிய பொருளாதாரத்தை நோக்கி நாம் தற்போது பயணம் செய்து வருகின்றோம். 2023 ஆம் ஆண்டு இறுதியளவில் நேர்கணிய பொருளாதார வளர்ச்சியை அடைந்து கொள்வதற்கு நாம் எதிர்பார்க்கின்றோம்.

நான் ஜனாதிபதியாக ஆரம்பத்தில் பாராளுமன்றத்தில் உரையாற்றிய போது நாட்டின் பணவீக்கம் 70% ஆகும். எமது செயற்பாடுகள் காரணமாக 20203 சனவரி மாதமளவில் அதனை 54% சதவீதமாக குறைப்பதற்கு எம்மால் முடிந்தது. 2023 ஆம் ஆண்டு சனவரி மாதமளவில் அதனை 54 சதவீதம் குறைப்பதற்கு எம்மால் முடிந்தது. அதனை தனி இலக்கத்திற்கு கொண்டு வருவதற்கு நாம் பாடுபடுகின்றோம்.

2022 ஆம் ஆண்டளவில் ஏற்றுமதி வருமானத்தை 13 பில்லியன் அமெரிக்க டொலர்கள் வரை அதிகரிப்பதற்கு எம்மால் முடிந்தது. அதற்காக உள்நாட்டு தொழில்முயற்சியாளர்கள் பெருமளவு பாடுபட்டார்கள். அதே போல் இறக்குமதி செலவினத்தை 18 பில்லியன் டொலர்கள் வரை மட்டுப்படுத்த எம்மால் முடிந்தது. வெளிநாடுகளில் தொழில் புரியும் நபர்கள் இந்த இக்கட்டான நிலையில் தாய் நாட்டுக்கு உயர்ந்தபட்ச ஒத்துழைப்பினை வழங்குகிறார்கள். 2022 ஆம் ஆண்டு இறுதியளவில் 4 பில்லியன் டொலர் வெளிநாட்டு அந்நிய செலாவணியை அவர்கள் எமக்கு வழங்கினார்கள்.

பெரும்பாலும் பூச்சியத்துக்கு வீழ்ந்த எமது அந்நிய செலாவணி ஒதுக்கினை 500 மில்லியன் அமெரிக்க டொலர்கள் வரை அதிகரிப்பதற்கு எம்மால் தற்பொழுது முடிந்துள்ளது. சுற்றுலாக் கைத்தொழிலை மீண்டும் உயிர்ப்பிப்பதற்கு எம்மால் முடிந்துள்ளது. வீதிகள் முழுவதும் குறுகிய அரசியல் ரீதியான ஆர்ப்பாட்டங்களை மேற்கொண்ட தடைகளுக்கு மத்தியில் சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வந்தார்கள். உலகின் சிறந்த 10 சுற்றுலா இடங்களில் இலங்கையும் பெயரிடப்பட்டது. இந்த சனவரி மாதத்தில் ஒரு இலட்சத்துக்கும் அதிகமான சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வந்துள்ளார்கள். அது ஒரு சாதனையான எண்ணிக்கையினர் ஆகும்.

இவ்வாறு அனைத்து துறைகளிலும் நாம் முன்னேற்றம் கண்டு வருகின்றோம்.

கிரேக்கம் சில காலங்களுக்கு முன்னர் எம்மைப் போன்றதொரு பொருளாதார நெருக்கடியைச் சந்தித்தது. வங்கரோத்து நிலை அடைந்தது. நெருக்கடியிலிருந்து மீளுவதற்காக அரச ஊழியர்களின் சம்பளத்தை 50 சதவீதமாக குறைத்து வங்கரோத்து நிலையிலிருந்து மீண்டு மீண்டும் கடன்களைச் செலுத்தும் பலத்தினை ஏற்படுத்துவதற்கு அவர்களுக்கு 13 ஆண்டுகள் சென்றது. அக்கால எல்லைக்குள் மூன்று தடவைகள் ஐ.எம்.எப் அமைப்பின் உதவி ஒத்தாசைகள் பெறப்பட்டன.

ஆனாலும் நாம் பயணிக்கும் இந்த திட்டத்தின் பிரகாரம் முன்னோக்கிச் சென்றால் 2026 ஆம் ஆண்டளவில் வங்குரோத்து நிலையிலிருந்து எமக்கு மீளுவதற்கு முடியும். நான் தொடர்ந்தும் கேட்டுக் கொண்டவாறு நாட்டைக் கட்டியெழுப்பும் போராட்டத்துக்கு இந்த பாராளுமன்றத்தின் அனைத்து கட்சிகளும் ஒன்று சேர்ந்தால், எமக்கு அதற்கு முன்னர் இந்த நெருக்கடியில் இருந்து மீளுவதற்கு சந்தர்ப்பம் கிடைக்கும்.

தற்பொழுது நாம் கடன் மறுசீரமைப்புக்காக எமக்கு கடன் வழங்கிய தரப்பினர்களுடன் கலந்துரையாடி வருகின்றோம். நாம் சர்வதேச நாணய நிதியத்துடன் கலந்துரையாடல்களின் இறுதிக் கட்டத்திற்கு வந்துள்ளோம். கடந்த செப்டம்பர் மாதமளளவில் அடிப்படை இணக்கப்பாட்டுக்கு வருவதற்கு எம்மால் முடிந்தது. கடன் பேண்தகு தன்மையினை ஏற்படுத்தும் வேலைத்திட்டம் மாத்திரமே தற்போது எஞ்சியுள்ளது.

அதற்கு ஏற்புடைய வகையில் பரிஸ் சமூகத்துடன் நாம் இணக்கப்பாட்டுக்கு வந்தோம். பரிஸ் மாநாட்டில் அங்கத்துவம் வகிக்காத இந்தியா மற்றும் சீனாவுடன் தொடர்ந்தும் கலந்துரையாடினோம். இந்தியா எமது கடன் மறுசீரமைப்பை மேற்கொள்வதற்கு சம்மதம் தெரிவித்துள்ளது.

2020 ஆம் ஆண்டு நாம் ஐ.எம்.எப் அமைப்பில் இருந்து விலகினோம். அவ்வாறான தொலைநோக்கற்ற தீர்மானங்கள் தற்போதைய நிலைமைக்கு காரணமாய் அமைந்துள்ளது. பங்களாதேஷ் தொடர்ந்தும் ஐஎம்எப் அமைப்புடன் இணைந்திருந்த காரணத்தால் அவர்களால் அந்த அமைப்பில் இருந்து வேகமாக நிவாரணங்களை பெற முடிந்தது.

தற்போது மக்கள் படும் துயரம் அன்றைய விடக் குறைவானது ஆகும். நாம் பயணிக்கும் இந்த மார்க்கம் சரியானதென்பது உறுதிசெய்யப்பட்டுள்ளது.

சுற்றுலாக் கைத்தொழில் மீண்டும் உயிர்ப்பிக்கப்படுகிறது. வீழ்ச்சியடைந்த விவசாய மற்றும் பெருந்தோட்டத் துறை மீண்டும் எழுச்சி பெற்றுள்ளது. பெரும்போக அறுவடை அதிகரிக்குமென எதிர்கூறப்பட்டுள்ளது. இம்முறை அறுவடைகளை கொள்வனவு செய்வதற்கு தேவையான நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. 20 பில்லியன் ரூபா பெறுமதியான நெல் அறுவடைகளை அரிசியாக மாற்றி குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு இலவசமாக வழங்கும் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

குறுகிய அரசியல் நோக்கங்கள் இல்லாத நாட்டை நேசிக்கும் பெரும்பான்மை மக்களது தீர்மானம் இதேபோன்று முன்னோக்கி செல்வதென்பதை நாம் அறிவோம். இன்று இலங்கை பொருளாதார ரீதியாக ஒரு கவலைக்கிடமான நோயாளியாக உள்ளது. உடனடியாக நோயை இனம் கண்டு அதற்குத் தேவையான சிகிச்சைகளை மேற்கொள்ள வேண்டியுள்ளது. ஆனாலும் சிலர் இதுவரை சிகிச்சை வழங்கிய வைத்தியர்களின் குறைகளை கூறி வருகின்றார்கள். அவர்களுக்குத் தண்டனை வழங்குவதற்கு முன்னுரிமை வழங்க வேண்டுமென அவர்கள் கூறுகின்றார்கள்.

(05ஆம் பக்கம் பார்க்க)

இந்த யுத்தத்தில் அனைத்து இனங்களும் ஒன்றாக இணைந்து போராட வேண்டியுள்ளது. பிரச்சினைகளுக்கு தீர்வு காணாமல் வழிவிடுவோமாயின் இப்பொருளாதார யுத்தத்தில் நாம் தோல்வியடைவோம்!

எமது எதிர்கால சந்ததியினருக்கு சுதந்திரமாக வாழக்கூடிய ஒரு நாட்டை உருவாக்குவது நம் அனைவரதும் பொறுப்பு

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பாராளுமன்றத்தில் நேற்று அக்கிராசன உரை

(04ஆம் பக்கத் தொடர்)

ஆனாலும் ஆரம்பத்தில் நோயாளியை குணப்படுத்துவதற்கு நான் முயற்சி செய்து வருகின்றேன். நோயாளியை குணப்படுத்திய பின்னர் எமக்கு ஏனைய நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும். ஆனாலும் நாம் நோயாளியை குணப்படுத்துவதற்கு முன்னுரிமை வழங்குதல் வேண்டும். நான் அதனையே தற்போது மேற்கொள்கின்றேன்.

ஆனாலும் நோயாளியை கவலைக்கிடமான நிலையில் இருந்து மீட்டெடுத்தவுடன் நாம் மற்றுமொரு நடவடிக்கையினை மேற்கொள்வோம். மீண்டும் இவ்வாறான ஒரு நெருக்கடி ஏற்படக்கூடிய அனைத்து வழிகளையும் தடைசெய்தல். இந்த நோக்கத்துக்காக நாம் ஊழல்களைத் தடுக்கும் சட்டத்தைக் கொண்டுவருவோம். ஐஎம்எப் அமைப்புடன் ஏற்படுத்திய இணக்கப்பாட்டுக்கு அமைய உலக வங்கி மற்றும் ஐக்கிய நாடுகள் அமைப்புடன் இணைந்து 'திருடப்பட்ட சொத்துக்களை மீண்டும் கண்டறியும் முயற்சியை' இச் சட்டத்தில் உள்ளடக்குவதற்கு நாம் நடவடிக்கை மேற்கொள்வோம்.

ஐ.எம்.எப் அமைப்பின் இணக்கப்பாடு கிடைக்கப்பெற்ற பின்னர் எமக்கு பொருளாதாரத்தை ஓரளவு ஸ்திரத் தன்மைக்கு கொண்டு வர முடியும். ஆயினும் நோயை முற்று முழுதாக குணப்படுத்த வேண்டுமாயின் எமக்கு முன்னோக்கிய சில நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியுள்ளது.

ஐஎம்எம் அமைப்பின் உறுதிப்பாடு கிடைக்கப்பெற்றவுடன் உலக வங்கி, ஆசியா அபிவிருத்தி வங்கி போன்ற ஏனைய சர்வதேச நிறுவனங்களிடம் கடனுதவிகள் பெறல் தொடர்பில் எதிர்பார்ப்பு ஏற்படுதிக் கொள்ள முடியும். அதன் போது முதலீட்டாளர்களின் நம்பிக்கை உறுதி செய்யப்படும்.

அதேபோல் எமது நாட்டுக்கு தேவையான பொருளாதார மறுசீரமைப்பு பணிகளை மேற்கொள்ளுதல் வேண்டும். நீண்டகாலமாக குறுகிய அரசியல் தேவைப்பாடுகளுக்காக பொருளாதார மறுசீரமைப்புக்களை நாம் தாமதப்படுத்தினோம்.

நாம் உடனடியாக பொருளாதார மறுசீரமைப்புகளை மேற்கொள்ள வேண்டும். அவ்வாறான நடவடிக்கைகளை மேற்கொண்ட தாய்லாந்து மற்றும் வியட்நாம் போன்ற நாடுகள் இன்று நாளுக்கு நாள் முன்னோக்கி செல்கின்றன. அவ்வாறு இல்லாதுவிடின் எமக்கு பின்னோக்கிச் செல்ல நேரிடும்.

அண்மையில் வங்கி கடன்களை அறவிடுவதற்காக சலுகைக் காலம் வழங்கப்பட்டதால் வங்கி முறைமை பலவீனமடைந்து காணப்பட்டது. தற்போது அந்த சலுகை காலம் முடிவடைந்துள்ளது, அதனால் வங்கிகள் மீண்டும் பலமடைந்துள்ளன.

அதே போல் இடர்கள் காரணமாக பலவீனமுற்ற தொழில்முயற்சிகள் தொடர்பில் நாம் கவனம் செலுத்தியுள்ளோம். பொருளாதார வளர்ச்சியுடன் அவர்களுக்கு மீண்டும் எழுந்து நிற்பதற்கு தேவையான வசதிகளை வழங்குவதற்கு நாம் நடவடிக்கை எடுப்போம்.

நாம் இன்று ஒரு பொருளாதார யுத்தத்தை எதிர்நோக்கி உள்ளோம். இந்த யுத்தம் வடக்கு, கிழக்கு யுத்தத்தை விட ஒரு தீர்க்கமான யுத்தமாகும். வடக்கு, கிழக்கு மோதலில் இனங்கள் பிளவுபட்டன. ஆயினும் இந்த யுத்தத்தில் அனைத்து இனங்களும் ஒன்றாக இணைந்து போராட வேண்டியுள்ளது. பிரச்சனைகளுக்கு தீர்வு காணாமல் வழி விடுவோமாயின் இப்பொருளாதார யுத்தத்தில் நாம் தோல்வியடைவோம்.

ஆர். சம்பந்தன் அவர்களும் நானும் 1977 ஆம் ஆண்டு பாராளுமன்றத்திற்கு தெரிவு செய்யப்பட்டோம். நாம் இருவருக்கும் பொதுவான ஒரு கனவு உண்டு. நாம் இருவரும் பாராளுமன்றத்தில் இருக்கின்ற போதே இலங்கையின் இனப்பிரச்சினைக்கு நிலைபேறான ஒரு தீர்வை வழங்குதல் ஆகும். அக்கனவு பற்றி அன்று முதல் இன்று வரை நாம் கலந்துரையாடுகின்றோம். முயற்சி செய்கின்றோம். முன்னைய அனைத்து சந்தர்ப்பங்களிலும் அந்த முயற்சி வெற்றியளிக்கவில்லை. ஆனாலும் இம்முறை எவ்வாறாயினும் அதனை வெற்றியடையச் செய்வதற்கு நாம் எதிர்பார்க்கின்றோம். அதற்காக உங்கள் அனைவரது ஒத்துழைப்பினையும் நாம் எதிர்பார்க்கின்றோம்.

வடக்கு, கிழக்கு யுத்தம் முழு நாட்டையும் பாதித்தது. பல பிரதேசங்களுக்கு பலத்த சேதம் ஏற்பட்டது. முழுமையான வடக்கு மாகாணமும் கிழக்கு மற்றும் வடமத்திய மாகாணங்களின் பல பிரதேசங்கள் யுத்தம் காரணமாக பாரிய துன்பங்களை அனுபவித்தன. இப்பிரதேசங்களின் அபிவிருத்தி தொடர்பாக கூடுதலான கவனம் செலுத்தப்பட்டு செயற்படுவதற்கு நாம் நடவடிக்கை மேற்கொள்வோம். அப்பிரதேசங்களுக்கான விசேட திட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்துவோம்.

வடக்கில் காணி தொடர்பாக தீர்க்கப்படாத மேலும் பிரச்சினைகள் உள்ளதனை நாம் அறிவோம். பலாலி முகாமுக்காக கையேற்கப்பட்டுள்ள 100 ஏக்கர் காணிகள் அண்மையில் விடுவிக்கப்பட்டன. மேலும் பல ஏக்கர் காணிகள் தொடர்பாக தீர்மானம் எடுக்க வேண்டியுள்ளது. அது தொடர்பாக இராணுவம் மற்றும் ஏனைய தரப்பினர்களுடன் கலந்துரையாடப்படுகிறது. ஏனைய பாதுகாப்பு முகாம்களை அண்மித்த காணிகள் தொடர்பிலும் கலந்துரையாடல்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

பிரதிப் பொலிஸ்மா அதிபர் பிரிவு எல்லைகள் தற்பொழுது மாகாண எல்லைகளின் பிரகாரம் காணப்படுவதில்லை. இதன் காரணமாக பிரயோக ரீதியான பல்வேறு சிக்கல்கள் உருவாகியுள்ளன. ஆகவே மாகாணங்களின் பிரகாரம் பிரதிப் பொலிஸ்மா அதிபர் பிரிவு எல்லைகளை நிர்ணயிப்பதற்கு நாம் எதிர்பார்த்துள்ளோம்.பொலிஸ் அதிகாரங்கள் தொடர்பில் எந்தவித மாற்றங்களும் இடம் பெறமாட்டாது.

காணாமல் போன நபர்கள் தொடர்பாக கண்டறிவதற்கான முறைமையினை நாம் முறைமைப்படுத்தி துரிதப்படுத்துவோம். பயங்கரவாத செயற்பாடுகளுடன் தொடர்புடைய சந்தேகத்தின் பெயரில் சிறைவைக்கப்பட்டுள்ள நபர்கள் பற்றியும் நாம் கவனம் செலுத்தியுள்ளோம். எந்தவொரு வழக்கு விசாரணையும் இன்றி பல ஆண்டுகளாக அவர்கள் சிறைவைக்கப்பட்டுள்ளார்கள். படிப்படியாக இந்த சிறைக் கைதிகளை விடுவிப்பதற்கு நாம் நடவடிக்கை மேற்கொள்வோம்.

மத்திய அரசாங்கத்தின் சில நடவடிக்கைகள் காரணமாக கல்வி மற்றும் சுகாதாரத் துறைகளில் மாகாண சபைகளின் அதிகாரங்கள் குறைவடைந்துள்ளதாக குற்றம் சாட்டப்படுகிறது. இதன் காரணமாக மாகாண அதிகாரங்களை நடைமுறைப்படுத்துவது தொடர்பில் நாம் புதிய சட்டங்களைக் கொண்டு வருவதற்கு எதிர்பார்க்கின்றோம்.சுகாதார துறை தொடர்பாகவும் இதே போல் நடவடிக்கை எடுக்கப்படும்.

அதிகாரப் பகிர்வு செயன்முறையினை முறையாக மற்றும் உரியவாறு நடைமுறைப்படுத்துவதற்காக பின்வரும் சட்டங்களுக்கான திருத்த வரைவுகள் தயாரிக்கப்படும். 1992 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க அதிகாரப் பகிர்வு (பிரதேச செயலாளர்கள்) சட்டம், 1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபைகள் (இடைநேர் விளைவு ஏற்பாடுகள் சட்டம் மற்றும் 1990 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க மாகாண சபைகள் (திருத்த) சட்டம்

மாகாண சபை மற்றும் மத்திய அரசாங்கத்துக்கு இடையில் ஒருங்கிணைப்பு பணிகளை முறைமைப்படுத்துவதற்காக நவீன முறையில் மாவட்ட அபிவிருத்தி சபை முறைமையினை தாபிப்பதற்கு நாம் எதிர்பார்க்கின்றோம்.

இந்த அனைத்து சட்டங்கள் மற்றும் வரைவுகளை நாம் பாராளுமன்றத்தின் தேசிய சபைக்கு சமர்ப்பிப்போம். அது தொடர்பாக கலந்துரையாடி இறுதித் தீர்மானம் எடுக்கும் பொறுப்பு தேசிய சபைக்கு வழங்கப்படும்.

மனித உரிமை மீறல்கள், சர்வதேச மனித உரிமை சட்டத்தை பாரதூரமான முறையில் மீறுதல் போன்ற விடயங்கள் தொடர்பாக ஆராய்வதற்காக உயர்நீதிமன்ற நீதியரசர் ஏ. எச். எம். டீ. நவாஸ் தலைமையில் நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக் குழு அறிக்கை தற்போது கிடைத்துள்ளது. அதன் பரிந்துரைகள் பற்றி நாம் கவனம் செலுத்துவோம்.

வரிக்கொள்கையொன்று தேவையென தெரிவித்தவர்கள் இன்று வரிக்கொள்கையை விமர்சிக்கின்றார்கள். நாம் விருப்பத்துடன் இந்த வரிகளை விதிக்கவில்லை. ஆனாலும் எமக்கு விருப்பமானவற்றை செய்வதால் நாட்டைக் கட்டியெழுப்ப முடியாது. விரும்பாவிட்டாலும் சரியானதைச் செய்ய வேண்டும்

யுத்தம் காரணமாக மிகவும் பாதிக்கப்பட்ட வடக்கின் அபிவிருத்திக்காக புறம்பான ஒரு திட்டத்தை நடைமுறைப்படுத்துவோம். மல்வத்துஓயா அபிவிருத்தி திட்டம் ஆரம்பிக்கப்படும். கிழக்கு மாகாண நதிகள் மற்றும் நீரை முகாமை செய்தல், வடமாரச்சி குளம் மற்றும் களப்பு புனரமைப்பு, குடிநீர் மற்றும் விவசாய நடவடிக்கைகளுக்காக அதன் மூலம் நீரை வழங்குவதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

மீள்புதுப்பிக்கத்தக்க எரிசக்தி உற்பத்தி மூலம் இப்பிரதேசங்களின் மின்சாரத் தேவைப்பாட்டை நிறைவு செய்வதற்காக பயன்படுத்தப்படும். சூரிய சக்தி மற்றும் பசுமை ஹைட்ரஜன் சக்தி இதற்காக பயன்படுத்தப்படும்.

சுற்றுலாக் கைத்தொழிலுக்காக கூடுதல் வய்ப்பு வழங்கப்படும். முலீட்டு வலயங்கள் அமைக்கப்படும். விவசாய நடவடிக்கைகளை நவீனமயப்படுத்துவதற்குத் தேவையான தொழில்நுட்பம் மற்றும் வசதிகள் வழங்கப்படும்.

காங்கேசன்துறை துறைமுகம் நவீனமயப்படுத்தப்படும். விரிவாக்கப்படும். திருகோணமலையை நவீன சர்வதேச நகரமாக அபிவிருத்தி செய்யப்படும். மோதல்களுக்கு அகப்பட்டு பொருளாதார மற்றும் சமூக ரீதியில் பின்னடைந்த கிழக்கு மற்றும் வடக்கு மாகாணங்களுக்காக விசேட அபிவிருத்தி திட்டம் ஒன்று நடைமுறைப்படுத்தப்படும்.

பெருந்தோட்ட மக்கள் தொடர்பாகவும் நாம் விசேட கவனம் செலுத்துவோம். இலங்கையின் பெருந்தோட்ட கைத்தொழிலை கட்டியெழுப்புவதற்காக அவர்கள் இற்றைக்கு 200 ஆண்டுகளுக்கு முன்னர் இலங்கைக்கு வரவழைக்கப்பட்டார்கள்.

பெருந்தோட்டத் துறைக்காக பாரியளவு சேவையாற்றிய திரு சௌமியமூர்த்தி தொண்டமான் அவர்களும் நானும் ஒன்றாக அமைச்சரவைக்கு நியமிக்கப்பட்டோம். நாம் இருவரும் பெருந்தோட்ட மக்களின் நலனுக்காக ஒன்றாக இணைந்து செயற்பட்டோம். தற்போது பெருந்தோட்ட மக்களின் சட்ட ரீதியான அனைத்து உரிமைகளையும் நாம் வழங்கியுள்ளோம். ஆனாலும் பொருளாதார மற்றும் சமூக உரிமைகள் தொடர்பாக பல்வேறு சிக்கல்கள் இன்னும் எஞ்சியுள்ளன. இந்த பிரச்சினைகளை தீர்ப்பதற்காக நாம் பெருந்தொட்ட மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் பாராளுமன்ற உறுப்பினர்களுடன் கலந்துரையாடி நடவடிக்கை மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கின்றோம். 200 வருடங்களாக இலங்கையின் பொருளாதாரத்தை வளம்பெறச் செய்வதற்கு பாடுபடும் அவர்கள் நூற்றுக்கு நூறு வீதம் இலங்கை மக்களின் ஒரு பிரிவினராக மாற்றப்பட வேண்டும்.

நான் பாராளுமன்றத்திற்கு தெரிவுசெய்யப்பட்ட சந்தர்ப்பத்தில் எனது அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சராக திரு ஏ சீ எஸ் ஹமீட் தெரிவு செயற்பட்டார். இலங்கை முஸ்லிம்கள் எதிர்நோக்கும் விசேடமான நிலைமை பற்றி அவர் எனக்கு விளக்கம் அளித்துள்ளார். அடிக்கடி முஸ்லிம் மக்கள் பல்வேறு பிரச்சனைகளை எதிர்கொள்வதனை நாம் அறிவோம். அது தொடர்பாகவும் நாம் முழு அவதானம் செலுத்துகின்றோம்.

சிங்கள சமூகமும் அவர்களுக்கென மட்டுப்படுத்தப்பட்ட பல பிரச்சினைகளை எதிர்நோக்குகின்றார்கள். அது பற்றியும் நாம் கவனம் செலுத்துகின்றோம்.

இவ்வாறான அனைத்து விடயங்கள் பற்றியும் கவனம் செலுத்தி ஒற்றையாட்சி அரசில் உயர்ந்தபட்ச அதிகாரத்தைப் பகிர்வதற்கு நாம் எதிர்பார்க்கின்றோம். ஆனாலும் நாம் பல்வேறு சந்தர்ப்பங்களில் வலியுறுத்திய ஒரு விடயத்தினை மீண்டும் இங்கே குறிப்பிட விரும்புகின்றேன். நாட்டைப் பிரிப்பதற்கு அல்லது பிரிப்பதற்கு துணை போகும் எந்தவொரு நடவடிக்கையினையும் நாம் மேற்கொள்ள மாட்டோம்.

எனக்கு இந்த பாராளுமன்றத்தில் குழுவொன்று கிடையாது. நான் பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சிக்கு ஒரேயொரு பாராளுமன்ற உறுப்பினர் காணப்படுகின்றார். ஆனாலும் நான் ஜனாதிபதி என்ற ரீதியில் அந்த கட்சியை பிரதிநிதித்துவப்படுத்துவதில்லை. நான் ஒட்டுமொத்த நாட்டு மக்களையும் பிரதிநிதித்துவப்படுத்துகின்றேன். இங்கு கட்சி அரசியல் எனக்கு இல்லை.

ஆகவே இந்த அனைத்து முன்மொழிவுகளையும் நான் பாராளுமன்றத்தின் தேசிய சபை ஊடாகவே நடைமுறைப்படுத்துவேன். நான் முன்னைய பல சந்தர்ப்பங்களில் வலியுறுத்தியவாறு புதிதாக சிந்தித்து புதியதொரு பயணத்தை மேற்கொள்வதற்கு ரிய காலம் தற்போது வந்துள்ளது.

மாற்றத்தை எம்மில் இருந்து ஆரம்பிக்க வேண்டும். நாம் எம்மில் இருந்து. நாம் அனைவரும் மாற்றமடைதல் வேண்டும். இந்த மாற்றம் நல்ல மாற்றமாக அமைதல் வேண்டும். அரசியல் வாதிகள் என்ற ரீதியில் நாம் நல்ல முறையில் மாற்றமடைதல் வேண்டும். அரசியல் கட்சிகள் மிகவும் நல்ல முறையில் மாற்றமடைதல் வேண்டும். பாராளுமன்றம் மிகவும் நல்ல முறையில் மாற்றமடைதல் வேண்டும். நிறைவேற்றுத் துறை மிகவும் நல்ல முறையில் மாற்றமடைதல் வேண்டும். நீதித் துறை மிகவும் நல்ல முறையில் மாற்றமடைதல் வேண்டும். அரச சேவை மிகவும் நல்ல முறையில் மாற்றமடைதல் வேண்டும்.

இந்த மாற்றத்துக்காக நாம் தற்போது பாராளுமன்ற மேற்பார்வை செயற்குழுவை முறையினை தாபித்துள்ளோம். ஆயினும் இன்னமும் மேற்பார்வை செயற்குழுக்கு பிரதிநிதிகள் நியமிக்கப்படவில்லை. அதனைத் துரிதமாக மேற்கொள்ளுமாறு நான் பாராளுமன்றத்தை வினவுகின்றேன். மேற்பார்வை செயற்குழுக்கள் மூலம் உயர்ந்தபட்ச பயனை அடைந்துகொள்வதற்கான மனமாற்றத்தை ஏற்படுத்துவது இந்த சபையில் உள்ள உங்கள் அனைவரதும் பொறுப்பாகும்.

நாம் அத்துடன் நின்று விடப் போவதில்லை. பாராளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் சகல பாராளுமன்ற உறுப்பினர்களையும் அரசாங்கத்தின் செயலூக்கமான பங்காளர்களாக மாற்றுவதற்கு நாம் நடவடிக்கை மேற்கொள்வோம்.

இன்று இலங்கையில் நடைமுறைப்படுத்தப்படும் அரசியல் கட்சிகள் தொடர்பில் மிகுந்த கவனம் செலுத்துதல் வேண்டும். அரசியல் கட்சிகள் என்பதை விட தேர்தலுக்காகவே உருவாக்கப்பட்ட அரசியல் இயக்கங்கள் இன்று பாராளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துகிறது. இவற்றுள் பெரும்பாலானவை பணத்துக்காக விலைபோன அரசியல் கட்சிகள் ஆகும். புறக்கோட்டை நடைபாதை வியாபாரம் போன்று கட்சிகளையும் அதன் சின்னங்களையும் விற்பனை செய்கிறார்கள். ஒருசில விலை போகின்றன. இலங்கையின் அரசியல் கட்சிகள் மற்றும் அவை செயற்பட வேண்டிய முறை பற்றிக் கண்டறிந்து அறிக்கை சமர்ப்பிப்பதற்காக ஜனாதிபதி ஆணைக்குழுவொன்றை நியமிப்பதற்கு நான் நடவடிக்கை எடுப்பேன்.

நான் ஒருபோதும் செய்ய முடியாதவற்றைக் கூற மாட்டேன். அதிகாரத்துக்காக பொய் கூற மாட்டேன். வரவு செலவுத்திட்ட உரையின் போதும் பாராளுமன்றத்தை திறந்துவைக்கும் போதும் நான் கூறிய அனைத்தையும் நடைமுறைப்படுத்தி வருகின்றேன். அதன் மூலம் பொருளாதாரத்தில் ஓரளவு ஸ்திரத்தன்மையை ஏற்படுத்துவதற்கு எம்மால் முடிந்துள்ளது

எதிர்காலத்தை மிகவும் சிறந்ததாக மாற்றியமைப்பதற்காக புதிய நிறுவனங்கள், புதிய சட்டவிதிகள் மற்றும் பல புதிய கருத்திட்டங்களை அறிமுகப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

வரலாறு தொடர்பான நிறுவனம், பொருளாதார விஞ்ஞானம் மற்றும் வியாபார நிறுவனங்கள், மகளிர் மட்டும் ஆண் பெண் பாலினம் தொடர்பான நிறுவனங்களை நாம் புதிதாக தாபிப்போம். அதேபோல் நான்கு புதிய பல்கலைக்கழகங்கள் தாபிக்கப்படும். அரச மற்றும் அரச கொள்கைகள் தொடர்பான பல்கலைக்கழகம், விவசாய தொழில் நுட்ப பல்கலைக்கழகம், காலநிலை மாற்றம் தொடர்பான பல்கலைக்கழகம் மற்றும் விளையாட்டுத் துறை பல்கலைக்கழகம்.

புதிய சட்ட விதிகள் மற்றும் சட்டங்கள் பலவற்றை அறிமுகப்படுத்துவதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

- பெண்கள் தொடர்பான தேசிய ஆணைக்குழுச் சட்டம்
- ஆண் பெண் பாலின சமத்துவ சட்டம்
- பெண்களை வலுவூட்டும் சட்டம்
- சிறுவர் பாதுகாப்பு சட்டம்
- இளைஞர் பாராளுமன்ற மறுசீரமைப்புச் சட்டம்
- போதைப்பொருள் தடுப்பு கட்டளையிடும் தலைமையக சட்டம்
- உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு
- பயங்கரவாத தடுப்பு மற்றும் தேசிய பாதுகாப்புச் சட்டம்
- தற்போது நடைமுறைப்படுத்தப்படும் பிரசித்த நாட்டிய கட்டுப்பாட்டுச் சட்டம் இல்லாதொழிக்கப்படும்.

அரசியலமைப்பில் உள்ள கருத்து தெரிவிக்கும் உரிமையினை அடிப்படையாகக் கொண்டு கலைப் படைப்புக்களை வகைப்படுத்தும் சட்டம் தயாரிக்கப்படும்.

எமது நாடு காலநிலை மாற்றங்களுக்கு உட்படும் வலயத்தில் அமைந்துள்ளது. ஆகவே தான் நாம் காலநிலை மாற்றங்கள் தொடர்பில் விசேட கவனம் செலுத்த வேண்டும். அது தொடர்பில் உரிய முறையில் நடவடிக்கை மேற்கொண்டால் எமக்கு பசுமை ஒதுக்கீடுகளைப் பெற்றுக்கொள்ளும் வாய்ப்பு காணப்படுகிறது.

அவை அனைத்தையும் கவனத்திற் கொண்டு நாம் இந்த சட்டங்களை அறிமுகப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுப்போம்.

- காலநலை மாற்றச் சட்டம்
- சமூக நீதிக்காக ஆணைக்குழுச் சட்டம்
- மீள் காடு வளர்ப்பு மற்றும் தாவர பாதுகாப்புச் சட்டம்
- உயிரோட்ட முறைமை சட்டம் – மகாவலி கங்கை, சிங்கராஜ வனம், சிவனொலிபாத பிரதேசம் மற்றும், வனச் சிகரம், ஹோட்டன் சமவெளி, நக்கில்ஸ், ஆதமின் பாலம் ஆகியன இச்சட்டத்தின் கீழ் கொண்டு வரப்படும்.
- கடல் வள ஆராய்ச்சி மற்றும் முகாமைத்துவ சட்டம்.
- முத்துராஜவெல பாதுகாப்புச் சட்டம்.

பொருளாதாரம் தொடர்பாகவும் புதிய சட்டங்களை அறிமுகப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகிறது. அரச செலவு முகாமைத்துவத்துக்காக ஸீரோ பட்ஜட் அல்லது பூச்சியத்தை அடிப்படையாக கொண்ட வரவு செலவுச் செயன்முறை ஒன்று அறிமுகப்படுத்தப்படும்.

- வருமான அதிகாரச் சட்டம்
- வெளிநாட்டு கடன் முகாமைத்துவச் சட்டம்
- உணவுப் பாதுகாப்புச் சட்டம்
- அரச சொத்து முகாமைத்துவச் சட்டம்
- பொருளாதார ஸ்திரத்தன்மை சட்டம்
- தேசிய ஓய்வூதிய பங்களிப்புச் சட்டம்
- புதிய மதுவரிச் சட்டம்
- அந்நிய செலாவணிச் சட்ட திருத்தம்
- புன்வத் சட்டம்
- வெளிநாட்டு வியாபார மற்றும் முதலீட்டு சட்டம்
- டிஜிட்டல் தொழில்நுட்ப சட்டம்
- கறுவா அபிவிருத்தி திணைக்களச் சட்டம்
- பரஸ்பர இணக்கப்பாட்டின் கீழான விவாகரத்துச் சட்டம்

இவ்வாறான பொருளாதார சமூக மற்றும் அரசியல் மறுசீரமைப்புக்களை வெற்றியடையச் செய்ய வேண்டுமாயின் சரியான விடையங்களின் அடிப்படையில் மக்களுக்கு அறிவூட்டுதல் ஓர் அத்தியாவசியமான விடயமாக காணப்படுகிறது. சமூகத்தை அறிவூட்டும் பிரதான வகிபாகம் ஊடகத்துக்கு உரியதாகும்

அதற்காக ஊடகவியலாளர்களுக்கு தேசிய மற்றும் சர்வதேச தரத்தில் பயிற்சி வழங்கப்படல் வேண்டும். 1993 இல் நான் பிரதமர் என்ற ரீதியில் ஊடக பயிற்சி நிறுவனம் ஒன்றை தாபித்தல் தொடர்பில் பரிந்துரை பெற்றுக்கொள்வதற்காக கலாநிதி காமினி கொரயா அவர்களின் தலைமையில் குழுவொன்றை நியமித்தேன். அந்த நிறுவனத்தை தாபிப்பதற்காக அமைச்சரவை அனுமதி கிடைக்கப் பெற்ற போதும் 1994 பொதுத் தேர்தல் காரணமாக அது நடைமுறைப்படுத்தப்படவில்லை. அதன் காரணமாக ஊடகவியலாளர்களுக்கு சர்வதேச தரத்தில் பயிற்சி வழங்குவதற்காக ஊடக நிறுவனம் முதல் பல்கலைக்கழகம் வரையிலான நிறுவன முறைமை ஒன்றை தாபிப்பதற்கு நாம் எதிர்பார்க்கின்றோம்.

ஊடக மறுசீரமைப்பு எமது நாட்டுக்கு தேவையாக உள்ளது. இதன் போது சம்பிரதாய ஊடகம் மற்றும் சமூக ஊடகம் ஆகிய இரண்டு துறைகள் பற்றியும் நாம் கவனம் செலுத்துதல் வேண்டும். ஆகவே தான் ஊடகங்கள் தொடர்பிலும் தேசிய கொள்கை ஒன்று தயாரிக்கப்பட வேண்டியுள்ளது.

இணையத்தில் பொய்யான செய்திகள், வெறுப்பூட்டும் வெளியீடுகள், பிழையான தகவல்கள், சிறுவர் மற்றும் பெண்கள் துன்புறுத்தல்கள், தொந்தரவுகள் மாத்திரமன்றி மோசடிகள் மற்றும் ஊழல்களையும் நாம் அனுபவித்து வருகின்றோம். இது தொடர்பாக சமூக ஊடக வலையக் கம்பனிகள் உள்ளடங்களாக தெட்டத் தெளிவான ஒழுங்குபடுத்தல் முறைமை ஒன்று தேவைப்படுவதாக நாம் கருதுகின்றோம்.

நாம் இங்கு கவனம் செலுத்த வேண்டிய முக்கியமான ஒரு விடயம் யாதெனில், கொள்கை தொடர்பான இணக்கப்பாட்டை ஏற்படுத்துவது ஆகும்.

அரசாங்கங்கள் மாறுகின்ற போது மாற்றமடையாத தேசிய கொள்கை. அமைச்சர்கள் மாற்றமடையும் போது மாற்றமடையாத தேசிய கொள்கை. உலகத்தின் அபிவிருத்தியடைந்த அனைத்து நாடுகளும் நிலையான கொள்கைகளின் ஊடாக முன்னோக்கிச் சென்ற நாடுகளாக காணப்படுகிறது. காலத்துக்கு ஏற்றவாறு கொள்கைகள் இற்றைப்படுத்தப்படுகின்றன. ஆனாலும் அரசாங்கங்கள் மாற்றமடைகின்ற போது கொள்கைகள் தலைகீழாக மாற்றப்பட மாட்டாது.

இது முறைமை மாற்றத்துக்கான ஆரம்பம் மாத்திரம் ஆகும். மேலும் பல மாற்றங்களை நாம் ஏற்படுத்த வேண்டியுள்ளது. இலங்கையர்களின், விசேடமாக இளைஞர் யுவதிகளின் கருத்துக்கு அமைய அந்த மாற்றங்களை நடைமுறைப்படுத்துவதற்கு நாம் எதிர்பார்க்கின்றோம்.

ஆகவே எதிர்வரும் 25 ஆண்டுகளுக்குள் நாம் பின்பற்ற வேண்டிய கொள்கைகள் மற்றும் வழிமுறைகள் தொடர்பான முன்மொழிவுகளை முன்வைக்குமாறு நான் உங்கள் அனைவரிடமும் கேட்டுக் கொள்கின்றேன். அந்த கோரிக்கையினை இந்த சபையில் உள்ள உங்களிடம் மாத்திரம் நான் முன்வைக்கவில்லை. ஒட்டுமொத்த இலங்கையர்களிடத்திலும் முன்வைக்கின்றேன். நீங்கள் இலங்கையில் இருந்தாலும், வெளிநாடுகளில் இருந்தாலும் உங்களது கருத்துக்களை முன்வைக்கவும். நாட்டை மீண்டும் கட்டியெழுப்பும் கூட்டு முயற்சியுடன் ஒன்றிணையுங்கள்.

(11ஆம் பக்கம் பார்க்க)

பொருளாதாரம் தற்போது ஓரளவு ஸ்திரத்தன்மையை அடைந்துள்ளது. மக்கள் ஓரளவு ஆறுதல் அடைந்துள்ளார்கள். அபாயகரமான தொங்குபாலத்தில் இலங்கைத் தாயை வெகுதூரம் பாதுகாப்பாக கொண்டு செல்வதற்கு எம்மால் முடிந்துள்ளது. நாம் அவ்வாறு பயணித்த பாதை இலகுவானது அல்ல. ஆனாலும் பயணம் இன்னமும் முடிவடையவில்லை

அனைத்து குற்றச்சாட்டுக்களிலிருந்தும் உஸ்தாத் ஹஜ்ஜுல் அக்பர் விடுதலை

ஸ்ரீலங்கா ஜமாஅத்தே இஸ்லாமி அமைப்பின் முன்னாள் தலைவர் உஸ்தாத் ரஷீத் ஹஜ்ஜுல் அக்பருக்கு எதிராக சுமத்தப்பட்ட அனைத்து குற்றச்சாட்டுக்களிலிருந்தும் கொழும்பு நீதவானால் நேற்று (08) விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

அவர் தாக்கல் செய்த அடிப்படை உரிமை மீறல் மனு அண்மையில் உச்ச நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது, அவர் மீதான சகல குற்றச்சாட்டுகளையும் வாபஸ் பெறுமாறு பொலிஸ் பயங்கரவாத புலனாய்வுப் பிரிவினருக்கு பணிப்புரை விடுத்துள்ளதாக சட்டமா அதிபர் திணைக்களம் நீதிமன்றத்திற்கு அறிவித்தது. அதன்படி அவர் நேற்று நீதவானால் விடுதலை செய்யப்பட்டார்.

நில நடுக்கத்தால்... (03ஆம் பக்கத் தொடர்)

முழுமையான சுதந்திரத்தையும் அம்மக்களுக்கு வழங்கவேண்டும் என்றும் உளமாரப் பிரார்த்தனை செய்கிறோம்.

மேலும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு மனிதாபிமான அடிப்படையில் உதவிபுரிய முன்வருமாறும் அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா வேண்டிக் கொள்வதாகவும் அச்செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வெகு விரைவில்... (03 ஆம் பக்கத் தொடர்)

இத்தக வரிக் கொள்கையை நடைமுறைப்படுத்த நேரிட்டது என்றும் அமைச்சர் தெரிவித்தார். பாராளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற ஜனாதிபதியின் அக்கிராசன உரை தொடர்பில் கருத்து தெரிவிக்கையிலேயே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார். அது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், அரச நிறுவனங்கள் அனைத்தையும் மறுசீரமைக்கும் நோக்கம் அரசாங்கத்திற்கு கிடையாது. எனினும் தற்போதைய பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் சில கடுமையான தீர்மானங்களை மேற்கொள்ள வேண்டியுள்ளது. செலவினங்களை குறைக்கும் வகையிலேயே நாடளாவிய ரீதியில் உள்ள 55 அபிவிருத்தி திட்ட அலுவலகங்களை மூடுவதற்கும்,33 அபிவிருத்தி அலுவலகங்களின் செயற்பாடுகளை இடைநிறுத்தவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. நட்டமடையும் அரச நிறுவனங்களை மறுசீரமைக்காவிடின் அதன் சுமையை நாட்டு மக்களே சுமக்க நேரிடும். பொருளாதார மீட்சியை இலக்காகக் கொண்டே புதிய வரிகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.வரி திருத்தங்கள் ஒரு தரப்பினருக்கு பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது என்பதை ஏற்றுக்கொள்கிறோம்.வரிக் கொள்கை வெகுவிரைவில் மறுசீரமைக்கப்படும். போராட்டத்தில் ஈடுபடும் உரிமை அனைத்து தரப்பினருக்கும் உள்ளது எனினும்,போராட்டங்கள் ஏனையவர்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தாத வகையில் அமைவது அவசியம். அந்த வகையில் தொழிற்சங்க துறையினருடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட தீர்மானிக்கப்பட்டுள்ளது என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

சோற்று பொதியினுள் ... (03 ஆம் பக்கத் தொடர்)

களுத்துறை தெற்கு பொலிஸார் தெரிவித்துள்ளனர். முறைப்பாட்டாளர் தனது மகளின் வேண்டுகோளுக்கு இணங்க, களுத்துறை நகரின் மையப்பகுதியில் உள்ள பிரதான உணவகம் ஒன்றில் நேற்றிரவு கோழியுடன் கூடிய சோற்றுப் பொதியை 950 ரூபாவிற்கு கொள்வனவு செய்துள்ளார். குறித்த பொதியை வீட்டிற்கு சென்று திறந்து பார்த்த போது சாப்பிட்டு அகற்றப்பட்ட கோழி எலும்புகள் காணப்பட்டமையினால் அன்றிரவே உணவக நிர்வாகத்திடம் காண்பித்ததாகவும் அவர்கள் மற்றொரு பார்சலை வழங்க சம்மதித்ததாகவும் பொலிஸார் கூறியுள்ளனர். இந்நிலையில், தலைமையக பொலிஸ் பரிசோதகர் ருவன் விஜேசிங்கவின் பணிப்புரையின் பிரகாரம் பிரதம பொலிஸ் பரிசோதகர் தென்னகோன் தலைமையில் விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன.

மலையக பிரதிநிதிகளுடன்... (03 ஆம் பக்கத் தொடர்)

ஜனாதிபதியின் உரையை நேரடியாக எதிர்கொள்ளவே நாம் பாராளுமன்றத்துக்கு சென்றிருந்தோம். ஐக்கிய மக்கள் சக்தி எம்பிக்கள் சபையில் பிரசன்னமாகி இருக்கவில்லை. பாராளுமன்றத்துக்கு செல்லாமல் உரையை பகிஷ்கரிப்பது என்ற ஐக்கிய மக்கள் சக்தியின் முடிவு எம்முடன் சேர்ந்து எடுக்கப்படவில்லை. ஆகவே அதுபற்றி எமக்கு தெரியாது. எதிர்வரும் தினங்களில் ஜனாதிபதியின் முழுமையான உரை தொடர்பாக எமது கருத்துகளை நாம் பாராளுமன்றத்தில் வெளியிடுவோம் எனவும் தெரிவித்துள்ளார்.

பெரும்பான்மை சிங்கள... (03 ஆம் பக்கத் தொடர்)

செயல்படுவதற்கான சந்தர்ப்பம் உருவாக்கப்பட வேண்டும் என்பதையும் அவர் வலியுறுத்தினார். மலையக மக்கள் தொடர்பில் அவர் பல விடயங்களை குறிப்பிட்டார். அவற்றை நடைமுறைப்படுத்தினால் நாம் அதனை வரவேற்போம். அதேவேளை, ஐக்கிய மக்கள் சக்தி ஜனாதிபதியின் கொள்கை விளக்க உரையை புறக்கணித்தாலும் அதனோடு இணைந்து இருந்த கட்சிகள் என்ற வகையில் நாம் அதில் பங்கெடுத்துக் கொண்டோம். ஐக்கிய மக்கள் சக்தி இதில் கலந்து கொள்ளாது. எனினும் அதனோடு இணைந்த ஏனைய கட்சிகள் இந்த அமர்வில் கலந்து கொள்வதில் ஆட்சேபனை கிடையாது என எமக்கு தெரிவிக்கப்பட்டது. அதற்கிணங்கவே நாம் கலந்து கொண்டோம். மாகாண சபை தேர்தல் நடத்தப்பட வேண்டும். அதே வேளை, 13வது அரசியலமைப்பு திருத்தம் முழுமையாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்பதே எமது நிலைப்பாடு. அதற்காக ஜனாதிபதி வடக்கு, கிழக்கு உட்பட அனைத்து தமிழ் தரப்பினரோடும் பேச்சுவார்த்தை நடத்தி அத்துடன் சிங்கள மக்களின் இணக்கப்பாட்டையும் அதற்காகப் பெற்றுக் கொள்வது அவசியமாகும். சிங்கள மக்களின் ஒத்துழைப்புடனேயே இதனை நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் இல்லாவிட்டால் ஒருபோதும் அது சாத்தியப்படாது. இலங்கையில் உள்ள நான்கு சமூகத்தை சேர்ந்த மக்களுடன் மலையக மக்களும் சேர்த்துக் கொள்ளப்பட வேண்டும் என்ற ஜனாதிபதியின் கருத்து வரவேற்கத்தக்கது அந்த வகையில் எம்மை மலையக மக்கள் என அழைப்பதையே நாம் விரும்புகின்றோம்.

க.பொ.த சா/த பரீட்சையில்... (03 ஆம் பக்கத் தொடர்)

பத்து ஆண்டுகாலமாக நடாத்தப்பட்டுவந்த இப்பரிசு வழங்கும் இந்நிகழ்வு இம்முறை மேல் மாகாணத்திற்கு மட்டுப்படுத்தப்பட்டதாக இத்திட்டத்தின் ஸ்தாபகரும், சங்கத்தின் தலைவருமான முன்னாள் இலங்கை வானொலி முஸ்லிம் சேவை பணிப்பாளர் எம்.இசட். அஹமத் முனவ்வர் தெரிவித்தார். நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி காரணமாக இவ்வாறு மேல் மாகாணத்தில் உள்ள கொழும்பு , களுத்துறை, கம்பஹா மாவட்ட மாணவர்களுக்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டதாகவும் முனவ்வர் மேலும் தெரிவித்தார்.

இவ் விழாவில் பிரதம அதிதியாக தென்கிழக்குப் பல்கலைக்கழக வேந்தர் ஜனாதிபதி சட்டத்தரணி பாயிஸ் முஸ்தபாவும், டாக்டர் ஷாபி சிஹாப்தீன் கௌரவ அதிதியாகவும் , அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமாவின் செயலாளர் அஷ்ஷெய்க் அல்ஹாபிழ் அர்கம் நூராமித் சிறப்புப் பேச்சாளராகவும் தொழிலதிபர் எம்.வை.எம்.பிஸ்ருல் முபீல், கொழும்பு ஸாஹிராக் கல்லூரி அதிபர் ஏ.ஆர்.எம். றிஸ்வி மரிக்கார் ஆகியோர் விசேட அதிதிகளாகவும் தொழிலதிபர் எம்.வை.எம்.முகர்ரம், பேராசிரியர் எம்.ஜே.எம்.ராசி, அபிவிருத்திக்கும் பயிற்சிக்குமான இலங்கை நிறுவனத்தின் செயலாளர் அஷ்ஷெய் எஸ்.எல். நௌபர், தொழிலதிபர் ஆர். பாலசுப்ரமணியம், மூஷான் இன்டர்நேஷனல் தவிசாளர் முஸ்லிம் ஸலாஹுத்தீன் ஆகியோர் சிறப்பு அதிதிகளாகவும் மற்றும் சமூகத்தின் கொடை வள்ளல்கள், தனவந்தர்களும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

கம்பஹா, கொழும்பு , களுத்துறை போன்ற மேல் மாகாண மாவட்டங்களில் இருந்து சுமார் 125 மாணவ மாணவியர்கள் இதற்காக விண்ணப்பித்திருக்கிறார்கள். அவர்களுக்கான அழைப்பிதழ் கடிதங்களும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

நடவடிக்கைகளை... (03 ஆம் பக்கத் தொடர்)

அநுரகுமார திசாநாயக்க உள்ளிட்டோர் தாக்கல் செய்துள்ள மனுவை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட சந்தர்ப்பத்திலேயே சட்டமா அதிபர் சஞ்சய் ராஜரட்ணம் உச்ச நீதிமன்றத்திற்கு அறிவித்துள்ளார்.

13வது அரசியலமைப்பு... (03 ஆம் பக்கத் தொடர்)

செயற்பட முடியாதுள்ளது என்பதையும் நான் அறிந்துகொண்டுள்ளேன். இத்தகைய சூழ்நிலையில சமஷ்டி முறைமையை நாம் கோருகிறோம். தற்போதுள்ள நிலைமையில் 13வது அரசியலமைப்பு திருத்தத்தை முழுமையாக நிறைவேற்றினால் சிறந்தது என்பதே எனது நிலைப்பாடு. 13வது திருத்தத்தை முழுமையாக நிறைவேற்றுவதாக அரசாங்கம் உறுதியளித்துள்ளதா என அவரிடம் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த அவர், அவர்கள் உறுதியளித்தது உண்மையே. எனினும் அது நடைமுறைப்படுத்தப்படுமா என்பதே கேள்வி. எனினும் இனியும் என்ன நடக்குமென்பது எமக்குத் தெரியாது.

ரயிலுடன் கார் மோதி... (03 ஆம் பக்கத் தொடர்)

எறியப்பட்டது. பலத்த காயங்களுக்குள்ளான சாரதி பிரதேசவாசிகளின் உதவியுடன் மாத்தறை அரசினர் வைத்தியசாலையில் அனுமதித்த பின்னர் உயிரிழந்தார்.

தமிழ்ப் பட்டயக் கற்கைநெறி... (03 ஆம் பக்கத் தொடர்)

அறிமுகவுரையினை கொழும்புத் தமிழ்ச் சங்க துணைத் தலைவர் திரு. மா. கணபதிப்பிள்ளை , கௌரவிப்புரையினை கொழும்புத் தமிழ்ச் சங்க துணைக்காப்பாளர் கலாநிதி க. இரகுபரனும் நிகழ்த்துவர். அடுத்து கௌரவிப்பும், சான்றிதழ் வழங்குதலும், கலை நிகழ்ச்சிகளும், நூல் வெளியீடும் இடம்பெறும். நன்றியுரையை கொழும்புத் தமிழ்ச் சங்க பொதுச் செயலாளர் திரு. ஆழ்வாப்பிள்ளை கந்தசாமி நிகழ்த்துவார்.

ஒற்றையாட்சிக்குள் அதிகபட்ச...

சந்தர்ப்பங்களிலும் வெற்றியளிக்கவில்லை. எனினும் இம்முறை எவ்வாறாயினும் அதனை வெற்றியடையச் செய்வதற்கு நாம் எதிர்பார்க்கின்றோம்.

அதற்காக அனைவரதும் ஒத்துழைப்பினை எதிர்பார்ப்பதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார். 9 ஆவது பாராளுமன்றத்தின் 4 வது கூட்டத்தொடரை நேற்ற ஆரம்பித்து வைத்து நாட்டின் அடுத்த 25 வருடங்களுக்கான அரசின் கொள்கைப் பிரகடன உரையை நிகழ்த்தும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அது தொடர்பில் மேலும் தெரிவித்த ஜனாதிபதி:

சம்பந்தனும் நானும் 1977 ஆம் ஆண்டு பாராளுமன்றத்திற்கு தெரிவு செய்யப்பட்டோம். நாம் இருவருக்கும் பொதுவான ஒரு கனவு உண்டு. நாம் இருவரும் பாராளுமன்றத்தில் இருக்கின்ற போதே இலங்கையின் இனப் பிரச்சினைக்கு நிலைபேறான ஒரு தீர்வை வழங்குதல் ஆகும். அக்கனவு பற்றி அன்று முதல் இன்று வரை நாம் கலந்துரையாடுகின்றோம். முயற்சி செய்கின்றோம். முன்னைய அனைத்து சந்தர்ப்பங்களிலும் அந்த முயற்சி வெற்றியளிக்கவில்லை. ஆனாலும் இம்முறை எவ்வாறாயினும் அதனை வெற்றியடையச் செய்வதற்கு நாம் எதிர்பார்க்கின்றோம். அதற்காக உங்கள் அனைவரது ஒத்துழைப்பினையும் நாம் எதிர்பார்க்கின்றோம்.

வடக்கு, கிழக்கு யுத்தம் முழு நாட்டையும் பாதித்தது. பல பிரதேசங்களுக்கு பலத்த சேதம் ஏற்பட்டது. முழுமையான வடக்கு மாகாணமும் கிழக்கு மற்றும் வடமத்திய மாகாணங்களின் பல பிரதேசங்கள் யுத்தம் காரணமாக பாரிய துன்பங்களை அனுபவித்தன. இப்பிரதேசங்களின் அபிவிருத்தி தொடர்பாக கூடுதலான கவனம் செலுத்தப்பட்டு செயற்படுவதற்கு நாம் நடவடிக்கை மேற்கொள்வோம். அப்பிரதேசங்களுக்கான விசேட திட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்துவோம்.

வடக்கில் காணி தொடர்பாக தீர்க்கப்படாத மேலும் பிரச்சினைகள் உள்ளதனை நாம் அறிவோம். பலாலி முகாமுக்காக கையேற்கப்பட்டுள்ள 100 ஏக்கர் காணிகள் அண்மையில் விடுவிக்கப்பட்டன. மேலும் 3300 ஏக்கர் காணிகள் தொடர்பாக தீர்மானம் எடுக்க வேண்டியுள்ளது. அது தொடர்பாக இராணுவம் மற்றும் ஏனைய தரப்பினர்களுடன் கலந்துரையாடப்படுகிறது. ஏனைய பாதுகாப்பு முகாம்களை அண்மித்த காணிகள் தொடர்பிலும் கலந்துரையாடல்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

வடக்கு கிழக்கில் மாத்திரமன்றி நாட்டின் ஏனைய மாகாணங்களிலும் காணிகள் தொடர்பில் பாரதூரமான பிரச்சனை காணப்படுகிறது. இதற்கு சில ஆண்டுகளுக்கு முன்னர் வர்த்தமானி அறிவித்தல் மூலம் காடுகள் பற்றி தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது. அச் சந்தர்ப்பத்தில் விமானப்படம் அடிப்படையாக கொள்ளப்பட்டது. யுத்தம் மற்றும் ஏனைய காரணங்களால் காடுகளாக்கப்பட்ட கிராமங்களின் பல காணிகள் வனப்பிரதேசங்களாக வர்த்தமானியில் பெயரிடப்பட்டன. தற்போது யுத்தம் முடிவடைந்துள்ளது. ஆனாலும் தமக்கு உரித்தான பல காணித் துண்டுகள் வனப்பிரதேசங்களாக வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ளதால் மக்களுக்கு பாரியளவில் அநீதி இழைக்கப்பட்டுள்ளன. மொனராகலை தொடக்கம் யாழ்ப்பாணம் வரை மக்கள் இப்பிரச்சினையை எதிர்கொண்டுள்ளார்கள்.1985 ஆம் ஆண்டின் வரைபடத்தின் பிரகாரம் காடுகள் மற்றும் காணிகளை மீண்டும் வர்த்தமானியில் வெளியிட்டு இந்த அநீதியை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். காணாமல் போன நபர்கள் தொடர்பாக கண்டறிவதற்கான முறைமையினை நாம் முறைமைப்படுத்தி துரிதப்படுத்துவோம். பயங்கரவாத செயற்பாடுகளுடன் தொடர்புடைய சந்தேகத்தின் பெயரில் சிறைவைக்கப்பட்டுள்ள நபர்கள் பற்றியும் நாம் கவனம் செலுத்தியுள்ளோம். எந்தவொரு வழக்கு விசாரணையும் இன்றி பல ஆண்டுகளாக அவர்கள் சிறை வைக்கப்பட்டுள்ளார்கள். படிப்படியாக இந்த சிறைக் கைதிகளை விடுவிப்பதற்கு நாம் நடவடிக்கை மேற்கொள்வோம். தேசிய காணி சபை ஒன்றை தாபிப்பதற்கான வரைவு தயாரிக்கப்படும். தேசிய காணிக்கொள்கை வரைவு தயாரிக்கப்படும்.

மத்திய அரசாங்கத்தின் சில நடவடிக்கைகள் காரணமாக கல்வி மற்றும் சுகாதாரத் துறைகளில் மாகாண சபைகளின் அதிகாரங்கள் குறைவடைந்துள்ளதாக குற்றம் சாட்டப்படுகிறது. இதன் காரணமாக மாகாண அதிகாரங்களை நடைமுறைப்படுத்துவது தொடர்பில் நாம் புதிய சட்டங்களைக் கொண்டு வருவதற்கு எதிர்பார்க்கின்றோம்.சுகாதார துறை தொடர்பாகவும் இதே போல் நடவடிக்கை எடுக்கப்படும்.

அதிகாரப் பகிர்வு செயன்முறையினை முறையாக மற்றும் உரியவாறு நடைமுறைப்படுத்துவதற்காக பின்வரும் சட்டங்களுக்கான திருத்த வரைவுகள் தயாரிக்கப்படும். 1992 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க அதிகாரப் பகிர்வு (பிரதேச செயலாளர்கள்) சட்டம், 1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபைகள் (இடைநேர் விளைவு ஏற்பாடுகள் சட்டம் மற்றும் 1990 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க மாகாண சபைகள் (திருத்த) சட்டம்

மாகாண சபை மற்றும் மத்திய அரசாங்கத்துக்கு இடையில் ஒருங்கிணைப்பு பணிகளை முறைமைப்படுத்துவதற்காக நவீன முறையில் மாவட்ட அபிவிருத்தி சபை முறைமையினை தாபிப்பதற்கு நாம் எதிர்பார்க்கின்றோம்.இவ் அனைத்து சட்டங்கள் மற்றும் வரைவுகளை நாம் பாராளுமன்றத்தின் தேசிய சபைக்கு சமர்ப்பிப்போம். அது தொடர்பாக கலந்துரையாடி இறுதித் தீர்மானம் எடுக்கும் பொறுப்பு தேசிய சபைக்கு வழங்கப்படும்.

பிரதிப் பொலிஸ்மா அதிபர் பிரிவு எல்லைகள் தற்பொழுது மாகாண எல்லைகளின் பிரகாரம் காணப்படுவதில்லை. இதன் காரணமாக பிரயோக ரீதியான பல்வேறு சிக்கல்கள் உருவாகியுள்ளன. ஆகவே மாகாணங்களின் பிரகாரம் பிரதிப் பொலிஸ்மா அதிபர் பிரிவு எல்லைகளை நிர்ணயிப்பதற்கு நாம் எதிர்பார்த்துள்ளோம்.பொலிஸ் அதிகாரங்கள் தொடர்பில் எந்தவித மாற்றங்களும் இடம் பெறமாட்டாது.

மனித உரிமை மீறல்கள், சர்வதேச மனித உரிமை சட்டத்தை பாரதூரமான முறையில் மீறுதல் போன்ற விடயங்கள் தொடர்பாக ஆராய்வதற்காக உயர்நீதிமன்ற நீதியரசர் ஏ எச் எம் டீ நவாஸ் தலைமையில் நியமிக்கப்பட்ட சனாதிபதி ஆணைக்குழு அறிக்கை தற்போது கிடைத்துள்ளது. அதன் பரிந்துரைகள் பற்றி நாம் கவனம் செலுத்துவோம்.

யுத்தம் காரணமாக மிகவும் பாதிக்கப்பட்ட வடக்கின் அபிவிருத்திக்காக புறம்பான ஒரு திட்டத்தை நடைமுறைப்படுத்துவோம். மல்வத்துஓயா அபிவிருத்தி திட்டம் ஆரம்பிக்கப்படும். கிழக்கு மாகாண நதிகள் மற்றும் நீரை முகாமை செய்தல், வடமாரச்சி குளம் மற்றும் களப்பு புனரமைப்பு, குடிநீர் மற்றும் விவசாய நடவடிக்கைகளுக்காக அதன் மூலம் நீரை வழங்குவதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

காங்கேசன்துறை துறைமுகம் நவீனமயப்படுத்தப்படும். விரிவாக்கப்படும். திருகோணமலையை நவீன சர்வதேச நகரமாக அபிவிருத்தி செய்யப்படும். மோதல்களுக்கு அகப்பட்டு பொருளாதார மற்றும் சமூக ரீதியில் பின்னடைந்த கிழக்கு மற்றும் வடக்கு மாகாணங்களுக்காக விசேட அபிவிருத்தி திட்டம் ஒன்று நடைமுறைப்படுத்தப்படும். பெருந்தோட்ட மக்கள் தொடர்பாகவும் நாம் விசேட கவனம் செலுத்துவோம். இலங்கையின் பெருந்தோட்ட கைத்தொழிலை கட்டியெழுப்புவதற்காக அவர்கள் இற்றைக்கு 200 ஆண்டுகளுக்கு முன்னர் இலங்கைக்கு வரவழைக்கப்பட்டார்கள்.

பெருந்தோட்டத் துறைக்காக பாரியளவு சேவையாற்றிய சௌமியமூர்த்தி தொண்டமானும் நானும் ஒன்றாக அமைச்சரவைக்கு நியமிக்கப்பட்டோம். நாம் இருவரும் பெருந்தோட்ட மக்களின் நலனுக்காக ஒன்றாக இணைந்து செயற்பட்டோம். தற்போது பெருந்தோட்ட மக்களின் சட்ட ரீதியான அனைத்து உரிமைகளையும் நாம் வழங்கியுள்ளோம். ஆனாலும் பொருளாதார மற்றும் சமூக உரிமைகள் தொடர்பாக பல்வேறு சிக்கல்கள் இன்னும் எஞ்சியுள்ளன. இந்த பிரச்சினைகளை தீர்ப்பதற்காக நாம் பெருந்தொட்ட மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் பாராளுமன்ற உறுப்பினர்களுடன் கலந்துரையாடி நடவடிக்கை மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கின்றோம். 200 வருடங்களாக இலங்கையின் பொருளாதாரத்தை வளம்பெறச் செய்வதற்கு பாடுபடும் அவர்கள் நூற்றுக்கு நூறு வீதம் இலங்கை மக்களின் ஒரு பிரிவினராக மாற்றப்பட வேண்டும்.

நான் பாராளுமன்றத்திற்கு தெரிவுசெய்யப்பட்ட சந்தர்ப்பத்தில் எனது அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சராக ஏ சீ எஸ் ஹமீட் தெரிவு செயற்பட்டார். இலங்கை முஸ்லிம்கள் எதிர்நோக்கும் விசேடமான நிலைமை பற்றி அவர் எனக்கு விளக்கம் அளித்துள்ளார். அடிக்கடி முஸ்லிம் மக்கள் பல்வேறு பிரச்சனைகளை எதிர்கொள்வதனை நாம் அறிவோம். அது தொடர்பாகவும் நாம் முழு அவதானம் செலுத்துகின்றோம்.

சிங்கள சமூகமும் அவர்களுக்கென மட்டுப்படுத்தப்பட்ட பல பிரச்சினைகளை எதிர்நோக்குகின்றார்கள். அது பற்றியும் நாம் கவனம் செலுத்துகின்றோம். அப் பிரச்சினைகள் தொடர்பாக விரிவான ஒரு கலந்துரையாடல் தேவைப்படுகிறது. விசேடமாக சாதி வேறுபாடுகள் காரணமாக சமூகத்தில் ஓரம் காட்டப்பட்டள்ள சமூகங்கள் தொடர்பில் முழு அவதானம் செலுத்துவதற்கு நாம் எதிர்பார்க்கின்றோம் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

ஜனாதிபதியின் உரை புறக்கணிப்பில்...

புறக்கணிப்பிலும் எதிர்க்கட்சிகளிடையே பிளவுகள் காணப்பட்டன. 9 ஆவது பாராளுமன்றத்தின் 4 ஆவது கூட்டத்தொடரை நேற்று காலை 10.00 மணிக்கு உத்தியோகபூர்வமாக ஆரம்பித்துவைத்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, நாட்டின் அடுத்த 25 வருடங்களுக்கான அரசின் கொள்கைத் திட்டங்கள் தொடர்பில் சபையில் உரையாற்றினார். அவரது உரை சுமார் 55 நிமிடங்கள் இடம்பெற்றன.

ஜனாதிபதி சபைக்கு வருவதற்கு முன்னரே சபைக்குள் வந்த பொதுஜன பெரமுனவின் சுயாதீன எதிரணி எம்.பி.க்களான டளஸ் அழகப்பெரும , விமல் வீரவன்ச , வாசுதேவ நாணயக்கார தலைமையிலான அணியினர் ஜனாதிபதி சபைக்குள் வந்து அக்கிராசனத்தில் அமர சென்றபோது ஜனாதிபதியின் கொள்கைப்பிரகடன உரையை புறக்கணிப்பதாக கோஷமிட்டதுடன் சபையிலிருந்தும் வெளிநடப்பு செய்தனர். அவர்கள் கோஷமிட்டபோது பதிலுக்கு அவர்களுக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் ஆளும் கட்சியினரும் கூச்சலிட்டனர். இதேவேளை இலங்கை தமிழரசுக்கட்சி எம்.பி.க்களான எம்.ஏ.சுமந்திரன், எஸ்.ஸ்ரீதரன், சார்ள்ஸ் நிர்மலநாதன், இரா. சாணக்கியன், த.கலையரசன் ரெலோ எம்.பி.யான செல்வம் அடைக்கலநாதன், புளொட் எம்.பி. யான தர்மலிங்கம் சித்தார்த்தன், தமிழ் மக்கள் தேசிய கூட்டணியின் எம்.பி.யான சி.வி. விக்னேஸ்வரன் ஆகியோர் சபை அமர்வில் பங்கேற்றனர். எனினும் தமிழ் தேசிய மக்கள் முன்னணி எம்.பி.க்களான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், செல்வராஜா கஜேந்திரன் ஆகியோர் ஜனாதிபதியின் உரையை புறக்கணித்திருந்தனர்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் கொள்கைப்பிரகடன உரையை புறக்கணிப்பதாக சஜித் பிரேமதாச தலைமையிலான பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி ஏற்கனவே அறிவித்ததுபோல நேற்று சபை அமர்விலும் பங்கேற்கவில்லை. எனினும் ஐக்கிய மக்கள் சக்தியின் பங்காளிக் கட்சிகளான தமிழ் முற்போக்கு கூட்டணி , ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் ஆகிய கட்சிகள் சபை அமர்வில் பங்கேற்றன.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீமைத் தவிர ஏனைய எம்.பி.க்களான ஹரிஸ் , பைசல் ஹாசிம் , தௌபீக் ஆகியோர் சபை அமர்வில் பங்கேற்றனர்.

அத்துடன் தமிழ் முற்போக்கு கூட்டணி சார்பில் பழனி திகாம்பரம், வீ.இராதாகிருஷ்ணன், உதயகுமார் ஆகியோர் பங்கேற்ற நிலையில் ஜனாதிபதியின் உரை ஆரம்பித்து 15 நிமிடங்களின் பின்னர் அதன் தலைவரான மனோ கணேசனும் பங்கேற்றமை குறிப்பிடத்தக்கது.

அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவர் முன்னாள் அமைச்சர் ரிஷாத் பதியுதீனும் சபை அமர்வில் கலந்து கொண்டார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி சபை அமர்வினை வெளிநடப்பு செய்தபோதும் அதன் எம்.பி.க்களான துமிந்த திசாநாயக்க, ஜோன் செனவிரத்ன, அங்கஜன் இராமநாதன் ஆகியோர் தொடர்ந்தும் சபை அமர்வில் பங்கேற்றனர்.

இதேவேளை அநுரகுமார திசாநாயக்க தலைமையிலான ஜே .வி.பி.யும் ஜனாதிபதியின் கொள்கைப் பிரகடன உரையை புறக்கணித்தது.

ஆளும் கட்சியில் அமைச்சர்களான ஹரின் பெர்னாண்டோ ,மனுஷ நாணயக்கார ஆகியோர் தவிர்ந்த ஏனைய பெரும்பாலான அமைச்சர்கள் மற்றும் இராஜாங்க அமைச்சர்கள், எம்.பி.க்களும் சபை அமர்வில் பங்கேற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

ஜனாதிபதியின் திட்டங்களை...

பாராளுமன்றத்தில் நேற்று ஜனாதிபதி ஆற்றிய கொள்கை விளக்க உரை தொடர்பில் கருத்து தெரிவிக்கும் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார். அது தொடர்பில் மேலும் தெரிவித்த அவர், ஜனாதிபதி தெரிவிப்பது போல் ஒற்றையாட்சி முறையில் அதிகாரப் பகிர்வை வெற்றிகரமாக மேற்கொள்ள முடியும் என்பதே எனது கருத்து. எனினும் தமிழ் மக்கள் ஒற்றையாட்சியை பேயைப் போலவும் சிங்கள மக்கள் சமஷ்டியை பிசாசைப் போலவும் பார்க்கிறார்கள்.

அந்த வகையில் பாராளுமன்றத்தில் ஜனாதிபதியினால் முன்வைக்கப்பட்டுள்ள கொள்கைத் திட்டத்தை முழுமையாக செயற்படுத்தினால் நாட்டின் அடிப்படை பிரச்சினைகளுக்கு தீர்வு காண முடியும். அதேவேளை, ஒற்றையாட்சி முறைக்குள் அதிகாரப் பகிர்வை சாத்தியப்படுத்த முடியும். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் கொள்கை விளக்க உரை வரவேற்கத்தக்கது. நாட்டில் வாழும் அனைத்து இன மக்களின் அடிப்படை பிரச்சினைகள் மற்றும் அதற்கான தீர்வு தொடர்பில் ஜனாதிபதி இதில் விசேட கவனம் செலுத்தியுள்ளார். முன் வைத்துள்ள கொள்கை திட்டத்தை முழுமையாக பின்பற்றினால் பொருளாதார நெருக்கடிக்கு குறுகிய காலத்தில் தீர்வு காண முடியும்.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் சமூக கட்டமைப்பில் காணப்படும் பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் விசேட பொறிமுறைகள் இந்த கொள்கைத் திட்டத்தில் முன்வைக்கப்பட்டுள்ளது. ஒற்றையாட்சியா அல்லது சமஷ்டியா என்பது தற்போதைய பிரச்சினையல்ல, நாட்டின் தற்போதைய பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு காண்பதையே பிரதான இலக்காகக் கொள்ள வேண்டும். இணக்கப்பாட்டுடனான பேச்சுவார்த்தையின் ஊடாகவே தீர்வு காண முடியும் என்பதே எனது நம்பிக்கை என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

அத்தியாவசிய செலவினங்களுக்கு...

செயலாளருக்குப் பணிப்புரை விடுத்துள்ளார். முன்னர் மேற்கொள்ளப்பட்டது போன்று அரசாங்க நடவடிக்கைகளுக்கான நிதி விடுவிப்பு, மக்களுக்கு அத்தியாவசிய சேவைகளை வழங்குவதில் பாதகமான தாக்கத்தை ஏற்படுத்துவதுடன் நாட்டின் பொருளாதாரத்தை மீட்டெடுப்பதற்கும் தடையாக இருப்பதாகவும் ஜனாதிபதி சுட்டிக்காட்டியுள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அண்மையில் அமைச்சரவைக்கு இது குறித்து அறிவித்தார். இதன்படி, சம்பளம் வழங்குதல், கடன் சேவைகள், ஓய்வூதியம், வைத்தியசாலை மருத்துவ சேவைகள், மாதாந்த சமுர

கைத்தொழில்

- சபா. ஸ்ரீ

முதலாவது பிளாஸ்டிக் கைத்தொழில் கம்பனியின் ஆரம்பம்;

தொழிலதிபர் தேசமானிய டி. எம் எஸ். நவாஸின் வர்த்தக வளர்ச்சியும் போக்கும்...

தொழிலதிபர் தேசமானிய டி. எம். எஸ். நவாஸின் வர்த்தக வளர்ச்சியானது ஒரு கடின உழைப்பினைக் கொண்டதாக அமைந்துள்ளது. அவருடைய முகாமைத்துவ ஒழுங்கு, தனித்துவமான தந்திரோபாயங்கள், அர்ப்பணிப்பு, தியாகங்கள் என்பவை அவரிடம் இயல்பாகவே காணப்பட்டது. அவரிடம் தந்திரோபாயத் திட்டமிடல்கள் சமூகச் சூழலில் துல்லியமாகக் காணலாம். நவாஸ் ஹாஜியார் எய்துகிற எல்லா நலன்களும் அவரைப் போலவே சில்லறை வியாபாரிகளுக்கும் மகிழ்ச்சி தருவனவாகும். வியாபார வாழ்க்கையில் இனிய பண்புகளோடு அவர் ஆற்றிய பயன்மிக்க பணிகள் அவர்களுடைய உள்ளத்தில் அழியா இடம்பிடித்துள்ளன. பொதுச் சந்தையில் வியாபாரத்தையே தொழிலாகக் கொண்டு ஈடுபடும் சிறிய வியாபாரிகளின் மீது நவாஸ் அதிகம் கவனம் செலுத்தி புதிய உத்வேகத்தோடு செயற்படுத்திக் காட்டிய விதம் அலாதியானது. என்றும் அவர்களது மனதை விட்டு அகலாது. தினசரி கடைக்கு வரும் வியாபாரி ஒருவர் கடைக்கு சமுகமளிக்கவில்லை என்றால் அவர் வீடு தேடிச் சென்று அவருடன் சுகம் விசாரித்து அவருடன் சகோதர வாஞ்ஜையோடு உறவாடி வியாபார சங்கிலித் தொடர்பை ஏற்படுத்துவதில் தொழிலதிபர் நவாஸ் ஹாஜியார் காட்டிய சிரத்தையும் அத்தகையதே.

கே:–உங்களுடைய வர்த்தகப் பிரவேசம் பல்வேறு பரிமாணங்களைக் கொண்டது எனக் கூறலாம். எனினும் நீங்கள் ஆரம்ப கால கட்டத்தில் வியாபாரத்தை எவ்வாறு படிப்படியாக விருத்தி செய்தீர்கள்?

ப:– எந்த வியாபாரத் துறையிலும் நிலையான அபிவிருத்தியை அடிப்படையாகக் கொண்ட அபிவிருத்தி நடவடிக்கைகளையே மேற்கொள்ளப்படல் வேண்டும். அந்தவகையில் படிப்படியாக அபிவிருத்தியடைந்து வருகின்ற கடை என்ற வகையில் வியாபார வளர்ச்சிக்கு ஆளணியின் தேவையும் இன்றியமையாததாகயிருந்தது.

இவ்வாறு முன்னேற்றம் கண்டு வரும் போது எனது பெரியம்மாவின் மகன், சாச்சியின் மகன் என் தம்பி நிசையீர் ஆகியோர் வந்து இணைந்து கொண்டனர். இக்கால கட்டத்தில் கடை மெதுவாக நகர்ந்து செல்லும் போது தந்தை 'ஹோட்டலை மூடுவோம்' என்று கூறினார். புத்தளம் வீதி சந்தியை இணைக்கும் *பசார்* பிரதான வீதியிலுள்ள சந்திக்கு அண்மையில் தான் கடை அமைந்திருந்தது.

ஹோட்டலை மூடியதுடன் கடையின் ஒரு பக்கத்தை உடைத்தவுடன் கடைக்கு மேலதிகமாக இடம் கிடைத்தது. அப்போது பொருட்களை வைப்பதற்கு இடம் போதுமானளவு இருந்தது.

அப்பொழுது நான் முதலாவது சீட்டுப் பிடித்தேன். அச்சீட்டின் மொத்த தொகை ரூபா 7000 வாகும்.சீட்டின் முழுத் தொகையையும் பிடிப்பதற்கு எனக்கு வசதியில்லை. நான் அரைத் தொகைக்குத்தான் பிடித்தேன். அது ரூபா 3500 வாகும். அதனை எடுத்துக் கொண்டு நான் முதலாவதாக கொழும்புக்கு பயணம் சென்றேன்.

கே:–அப்படியானால் இதற்கு முன்னர் நீங்கள் கொழும்பு செல்லவில்லையா?

ப:–இல்லை. எனக்கு கொழும்பு செல்லத் தெரியாது. எனது மச்சான் ஒருவர் அழைத்துச் சென்றார். அப்பொழுது கொழும்பு பழைய சோனகர் தெருவில் எனது சாச்சாவினுடைய கடை இருந்தது. முதலில் அங்கு சென்று, கொண்டு வந்த 3500 ரூபாவை வைத்து விட்டு அதில் கொஞ்சம் பணத்தை எடுத்துக் கொண்டு கடைக்குச் சென்றேன். அக்கால கட்டத்தில் தையல் நூலுக்கு சரியான தட்டுப்பாடு இருந்தது. அப்பொழுது வெளிநாடுகளில் இருந்து பொருட்கள் இறக்குமதி செய்யப்படுவதில்லை. நூல் கட்டாயம் வாங்க வேண்டும் என்று சம்மான்கோட்டைப் பள்ளிக்கு முன்னால் டோன் ஸ்டோர்ஸ் என்ற கடை இருந்தது. இலங்கை முழுவதும் ஏக விநியோகஸ்தர் அவர்கள் தான். அங்கு சென்று நூல்களைப் பெற்றுக் கொள்வேன்.

முதல் தடவை மச்சானின் வழிகாட்டலுடன் பொருட்களை வாங்கி வந்தேன். ஆனால் இரண்டாவது முறை தனியாக சென்றேன்.

வியாபாரம் சற்று கூடுதலாக நடைபெற்றதால் கடையில் இடமும் போதாது. சில வேளை பொருட்களும் காணாமற் போகும். அத்துடன் கடையில் இடப்பற்றாக் குறையும் இருந்தது. வியாபாரத்தை மேலும் விற்பனையை அதிகரித்து கொள்வதற்கு வசதிகளும் வாய்ப்புக்களும் தேவையாக இருந்தன.

கே:–புதிய கடைகள் வாங்கி வியாபாரத்தை விருத்தி செய்தது தொடர்பாக கூறுவீர்களா?

ப:–வியாபாரத் துறை அபிவிருத்தி முயற்சிகளில் உன்னதமான இடத்தினை வகிக்க வேண்டுமாயின் எதிர் வரும் காலங்களிலும் பரந்த மட்டத்தில் முன்னெடுத்துச் *செல்ல வேண்டுமா*யின் நிலையான வளங்களும் செயற்பாடுகளும் பொருத்தமாக அமைய வேண்டும். இதற்கு பொருட்களை வைப்பதற்கான இடவசதிகள், ஆளணிகள் போன்ற அவசியம். எனவே முதலில் கடைகளை வாங்கும் விடயத்தில் கவனம் செலுத்தினேன்.

அடுத்த கடையை ரூபா 9 இலட்*சத்*திற்கு வாங்கினேன். அந்தக் கடை உரிமையாளருக்கு அக்கடை எனக்குத் தேவை என்று நன்கு தெரியும். அதே வேளையில் என் கடைக்கு முன்னாலும் மூன்று மாடிக் கடையொன்று ரூபா 22 இலட்சம் சொல்லிக் கொண்டிருந்தார்கள். அப்பொழுது என்னிடம் பத்து இலட்சம் தான் பணம் இருந்தது. அது ஒரு கலவரக் கால கட்டமாகும். அவர்கள் அந்த கடையை விற்பனை செய்து கொள்ள முடியாமல் 12 இலட்சம் ரூபாவுக்கு எடுக்கும்படி கூறினார்

கள். அது 12 இலட்சம் ஆக வந்தால் முதலில் வாங்கிய கடை 9 இலட்சம் ஆகும். அதற்கு கூடுதல் *பணம் கொடுத்து விட்டேன் என்ற* மன ஆதங்கம் இருந்தது. அந்தக் கடை சிறிய கடை.

ஆனால் முன் கடை மூன்று தட்டு. புதிய கட்டடம். மூன்று மடங்குகள் காணி வசதிகள். எனக்கு சரியான கவலையாக இருந்தது.நானும் சகோதரரும் சேர்ந்து ஒன்பது இலட்சத்துக்கு எடுத்த கடையை விற்பனை செய்ய முயற்சி செய்தேன். எட்டு அல்லது ஏழு இலட்சம் வந்தாலும் கொடுக்கலாம் என்று யோசித்துக் கொண்டிருந்தேன். யாரும் எடுக்க முன்வரவில்லை. அதற்கு ஐந்தரை இலட்சம் தான் அதன் விலை இருந்தது. எனினும் தேவை என்ற அடிப்படையில் எடுத்தேன். ஒன்றுக்கு *ஒன்று கூட விலை* கொடுத்து எடுத்து விட்டேன்.

எனினும் அல்லாஹ் கிருபையுடையவன். இந்தக் கடையை எடுத்தது நஷ்டம் கஷ்டம் எனத் தோன்றினாலும் அதற்குப் பின்னர் பாரிய நன்மைகள் கிடைத்தன. நான் கண் முன் கண்ட அல்லாஹ்வுடைய நல்*லருள்* இதுவே.

பின்பு விற்பனை செய்த முடியாத கடைக்கு பொருட்களை மாற்றினேன். இக்கடை 15 அடி அகலமான கடையாகும். பின்பு 100 அடிக் கடையாக மாற்றம் பெற்றது. ஏனென்றால் இது தான் அல்லாஹ்வின் அருட் கொடை. கடைகள் விற்பனை செய்வது அவற்றை வாங்கக் கூடிய சக்தியை அல்லாஹ் வழங்கியது. ஒரே பக்கத்தில் ஆறுகடைகளை அடுத்தடுத்து வாங்குவதற்கு இலங்கையில் எந்த

வொரு வர்த்தகருக்கும் கிடைத்து இருக்காது என நான் கருதுகின்றேன். இது தான் அல்லாஹ் தந்த பாக்கியம்.

ஏனென்றால் எவ்வளவோ பெரிய இடத்தில் எல்லாப் பொருட்களையும் ஒரே இடத்தில் ஒரே பார்வையில் பொருட்களை வைத்து மொத்த வியாபாரம் பண்ணக் கூடிய கடை இலங்கையில் எந்தவொரு இடத்திலும் இல்லை என்று நான் கருதுகின்றேன்.

கே:–உங்களிடம் தொழில் புரியும் தொழிலாளர்கள் பற்றியும் வியாபாரிகள் பற்றியும் கருத்து என்ன?

ப:–நான் சப்பாத்துப் போட்டால் என் கடையில் வேலை செய்பவன் நல்ல செருப்பு போட வேண்டும். இதுதான் என்னுடைய கொள்கையாகும். அதே போன்று நான் வியாபாரிகளுக்கும் 60 விகிதமான திருப்தியைக் கொடுக்க வேண்டும் எனக்கு 40 விகிதமான திருப்தி இருக்க வேண்டும் எனவும் சொல்லியிருக்கின்றேன்.

இத்தகைய வியாபார நடவடிக்கைகளே முன்னெடுக்கப்படுகின்றன. இதில் *விசேடமாக வியாபாரிகள் மீது கூடுதலாக கவனம் செலுத்த* வேண்டும் என்பதுதான் என்னுடைய கோட்பாடு ஆகும்.

கே:–நீங்கள் ஆரம்பத்தில் கொழும்பு சென்று பொருட்களைக் கொள்முதல் செய்து வியாபாரம் செய்த அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ள முடியுமா?

ப:–ஆம்.; நான் முதலில் கொழும்பில் இருந்துதான் மொத்த வியாபாரத்தை ஆரம்பித்தேன். பொருட்களை என் கரத்தால் லொறிக்கு ஏற்றி கொடுத்து விட்டு வருவேன். சிலவேளை வியாபாரம் செய்வதற்குரிய சாமான்கள் இருக்காது. அவற்றை ஐந்து பொதிகளாகக் கட்டி சிறிய கரத்தையில் எடுத்துக் கொண்டு வந்து கொழும்பிலுள்ள குருநாகல் பஸ் நிலையத்திற்கு வருவேன்.

கொழும்பில் இருந்து குருநாகலுக்கு கடைசி பஸ் இரவு 10.30 மணி ஆகும். நான் அந்த இடத்திற்கு வரும் போது இரவு 10.30 மணி பஸ் சென்று விடும். அதற்குப் பின்பு நள்ளிரவு 12.00 மணிக்கு திருகோணமலை பஸ் இருக்கும். திருகோணமலை பஸ்காரன் குருநாகல் செல்

லவுள்ளவர்களை கடைசி நேரத்தில் ஏற்றுவான். பொதிகளை எல்லாம் பஸ் முன் அடுக்கி வைத்து விட்டு நிற்பேன். சாதாரணமாக நான் கந்தளாய்க்கு டிக்கட்டை எடுத்துக் கொண்டு செல்வதாயின் பஸ்ஸில் அமர்ந்து செல்லலாம். குருநாகல் செல்வதாக இருந்தால் அமர்ந்து செல்வதற்கு அனுமதிக்கமாட்டான். அந்த வகையில் நான் பணத்தை மிச்சம் பிடிப்பதற்காக நின்று கொண்டுவரத்தான் டிக்கட் எடுப்பேன். அப்பொழுது குருநாகல் வருவதற்கு மூன்று மணித்தியாலம் செல்லும். நள்ளிரவு 12, 01 மணி இருக்கும். நித்திரை தூக்கம் ஒருபுறம் மறுபுறம் கால் கடுக்க நிற்க வேண்டும். சரியாக மூன்று மணிக்கு குருநாகல் கடிகாரகோபுரத்திற்கு முன்னால் வந்து நிறுத்துவான். மூன்று மணி. ஆறு பொதிகள். யார் தூக்குவது. நாட்டாமையும் இல்லை. யாருமில்லை. தனியாகத்தான் தூக்க வேண்டும். மழை பெய்தால் நனைந்து கொண்டு எல்லாற்றையும் கடைக்கு கொண்டு வந்து கேட்பார்கள். நான் கடைக்குள்ளே தான் தூங்குவேன். தரையில் படுப்பேன். எந்த நேரத்தில் கடையின் கதவைத் தட்டினாலும் கதவைத் திறந்து சாமான்கள் கொடுப்பேன். நான் வியாபாரத்திற்கு சோம்பேறி பார்க்க மாட்டேன். உடன் எழும்பி அவர்கள் கேட்டதை கொடுப்பேன்.

ஒரு வியாபாரி கடைக்கு வரவில்லை என்றால் என்னுடைய விலா எலும்பு உடைவது போல இருக்கும். ஹெட் டிப்பொலவில் இருந்து வழக்கம் போல மு. ப 10.30 மணிக்கு ஒரு வியாபாரி வர வேண்டும். அந்த வியாபாரி மு. ப 11 மணி வரையிலும் வரவில்லையானால் இன்று இந்த குறித்த வியாபாரி வரவில்லையே என்று மனம் குறுகுறுத்துக் கொண்டிருக்கும்.

குருநாகல் நகரில் மொத்த வியாபாரம் பண்ணக் கூடிய ஓரிரு கடைகளே உள்ளன. அந்த குறித்த நபர் அந்தக் கடைகளுக்கு வந்து போய் உள்ளாரா என்று சென்று பார்த்து விட்டு வரும்படி சொல்வேன். அவ்வாறு இல்லாவிட்டால் அவர் செல்லும் குறித்த பஸ்ஸையும் சென்று பார்த்து வரும்படி கூறுவேன். அந்த நபர் ஊர் பஸ்ஸிலும் கடைக்கும் வரவில்லை என்றால் இன்றைக்கு அந்த நபர் வரவில்லை என்ற தீர்மானத்தை எடுத்துக் கொள்வேன். அப்பொழுதுதான் மனதிற்கு சந்தோசமாக இருக்கும்.

அந்த நபர் பஸ்ஸிலோ அல்லது வேறு கடையிலோ இருப்பானாக இருந்தால் எனக்கு மனம் தாங்க முடியாமல் போய் விடும். அடுத்த நாளைக்கு குறித்த அந்த நபர் வீட்டுக்குத் தேடிச் செல்வேன். என்ன நடந்தது. ஏன் நீ வரவில்லை. என்று கேட்டு அவனோடு உற்ற நண்பனாகப் பழகுவேன். இப்படி கண்ணில் விழுந்த தூசி மாதிரி உருத்திக் கொண்டே இருக்கும்.

நிக்கவெரட்டிய, கல்கமுவ போன்ற தூர இடங்களுக்கு பொதிகள் ஏற்றிச் செல்வதற்கென லொறிகள் இருந்தன. நாங்கள் அந்த லொறியில் சாமான்களை ஏற்றுவதற்கு முன்வருமாறு கோரினாலும் வர முடியாது என்பார்கள். அடுத்த கடைகளில் ஏற்றி விட்டுத் தான் இங்கு வருவோம் என்று கூறுவார்கள். சில நாளைக்கு வருவார்கள். சில வேளை சாமான்கள் நிறைந்தால் வராமல் போய் விடுவார்கள். அப்பொழுது நான் லொறி எங்கு போய் நிற்கின்றதோ அங்கே கொண்டு சென்று கொடுத்து விட்டு வரும்படி பையனிடம் கூறுவேன்.

எங்களையும் கணக்கில் எடுத்து லொறிக்காரன் இயங்குகிறார் என்று வியாபாரிகளும் விளங்க வேண்டும். ஒரு விகிதமாவது எங்களைப் பற்றிலொறிக்காரன் புரிந்து கொள்ள வேண்டும். லொறியை தவறி விட்டால் சாமான்களைப் போட்டுக் கொள்ள முடியாமல் போய்விடும் என்ற சிந்தனை வியாபாரிமார்களுக்கு ஏற்படாதவாறு மனதில் சிறியளவிலான புள்ளி வந்து விடக் கூடாது என்ற வகையில் கவனம் செலுத்தி வியாபாரத்தை மேற்கொண்டு வந்தேன்.

கே:–பிளாஸ்டித் தொழில் பேட்டை ஆரம்பிக்க வேண்டும் என்ற சிந்தனை வருவதற்கான காரணம் என்ன?

ப:–பிளாஸ்டிக் பொருட்களே கடையில் அதிகளவு விற்பனை செய்யப்பட்டது. லொறிக் கணக்கில் வாங்கி விற்பனை செய்வோம். அப்பொழுது நுகர்வோர் மத்தியில் பிளாஸ்டிக் நல்ல கிராக்கி இருந்தது. இலங்கையிலுள்ள அனைத்து பிளாஸ்டிக் கம்பனிகளுடைய பொருட்களையும் வாங்குவோம். இதில் எந்தப் பொருட்களை தினம் தினம் மக்கள் விரும்பி வாங்குகிறார்கள் என்ற வியாபார நுட்பங்களை நான் அறிந்து வைத்திருந்தேன்.

இலங்கையில் பிளாஸ்டிக் தொழில் பேட்டைகள் மூன்று இருந்தன. இந்த தொழிற்சாலைகளைத் தவிர வேறு தொழில் பேட்டை அமைப்பதற்கு இலங்கையில் அனுமதி இல்லை. முன்னாள் ஜனாதிபதி ஆர். பிரேமதாச ஆட்சிக்கு வந்த பின்பு இலங்கையில் கைத்தொழில் பேட்டைகளை தாராளமாக ஆரம்பிக்கலாம் என்ற சட்டம் அமுலுக்கு வந்தது. அந்த சட்டம் அமுல்படுத்தப்பட்டவுடன் முதலாவது பிளாஸ்டிக் கைத்தொழில் கம்பனியை நானே ஆரம்பித்தேன்.

இக்பால் அலி

கிழக்கின் குரல்

மட்டக்களப்பு மாவட்டம்:

உணவுப் பாதுகாப்புத் திட்டம் வெற்றிகரமாக முன்னெடுப்பு

புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்

மட்டக்களப்பு மாவட்டத்தின் உணவுப் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் வகையில் அம்மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட 6 பிரதேச செயலகப் பிரிவுகளில் போதிய வருமானமின்றியுள்ள குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொருட்களை வழங்கும் திட்டம் வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டதாக, மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தில் நேற்று (08) நடைபெற்ற கலந்துரையாடலில் தெரிவிக்கப்பட்டது.

மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் கலாமதி பத்மராஜாவின் தலைமையில் உலக உணவுத் திட்ட அவசரநிலை இணைப்பாளர் ஜோஸ் பன்ட் முஸோங்கா மற்றும் உலக உணவுத் திட்ட அதிகாரி கீரன் பொல் ஆகியோருடன் நடைபெற்ற கலந்துரையாடலின் போதே, இவ்விடயம் தொடர்பாகத் தெரிவிக்கப்பட்டது.

60 நாட்களைக் கொண்டதாக உலர் உணவுப் பொதிகள் வழங்கும் நடவடிக்கையின் போது, பல்வேறு சவால்களையும் பிரச்சினைகளையும் எதிர்நோக்கிய போதிலும், தமது சேவையை வெற்றிகரமாக முன்னெடுக்க முடிந்ததாக, உலக உணவுத் திட்டம் மற்றும் வேல்ட் விஷன் அமைப்பைச் சேர்ந்த உறுப்பினர்கள் தெரிவித்தனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் 6 பிரதேச செயலகப் பிரிவுகளிலும் வறுமைக் கோட்டுக்குக் கீழ் வாழ்கின்ற குடும்பங்களை அடையாளம் கண்டு, உலக உணவுத் திட்டம் மற்றும் வேல்ட் விஷன் ஆகிய அமைப்புகள் உலர் உணவுப் பொதிகளை வழங்கின.

இதில் மாற்றுத்திறனாளிகள் குடும்பங்கள், நாள்பட்ட நோய்களினால் பாதிக்கப்பட்டவர்களைச் சேர்ந்த குடும்பங்கள், பெண் தலைமைத் துவக் குடும்பங்கள், கர்ப்பிணிகள், பாலூட்டும் தாய்மார்கள், சமுர்த்திப் பயனாளிகள், ஐந்துக்கும் மேற்பட்ட அங்கத்தவர்களைக் கொண்ட குடும்பங்கள், குறைந்த பொருளாதார வசதியுடைய குடும்பங்கள் ஆகிய குடும்பங்கள் உலர் உணவுப் பொதிகளை பெற்றுக்கொள்வதற்காக கிராம உத்தியோகத்தர்களினால் அடையாளம் காணப்பட்டிருந்தன.

பெண்ணை தாக்கிய இளைஞர் பொலிஸ் நிலையத்தில் கைது

ரொட்டவெவ குறூப் நிருபர்

திருகோணமலை மாவட்டத்தின் மொரவெவ பொலிஸ் நிலையத்தில் பெண்ணொருவரைத் தாக்கிய குற்றச்சாட்டில் இளைஞரொருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

ரொட்டவெவ பகுதியைச் சேர்ந்த 23 வயதுடைய இளைஞரையே நேற்று முன்தினம் (07) கைது செய்துள்ளதாக, பொலிஸார் தெரிவித்தனர்.

கஞ்சா போதைப்பொருளை தனது கணவர் மறைத்து வைத்திருப்பதாக, மேற்படி இளைஞர் பொலிஸாருக்கு பொய்யான தகவல் வழங்கியதாக, அவ்விளைஞன் மீது அப்பெண் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

இம்முறைப்பாட்டை விசாரணை செய்வதற்காக அவ்விளைஞனை பொலிஸ் நிலையத்துக்கு அழைத்த போதே, அப்பெண்ணை அவ்விளைஞர் தாக்கியுள்ளதாக, பொலிஸார் தெரிவித்தனர்.

திருகோணமலை பிரதேசத்தில் வைத்தியர்கள் பணிப்பகிஷ்கரிப்பு

தம்பலகாமம் குறூப், கிண்ணியா மத்திய நிருபர்கள்

திருகோணமலை மாவட்டத்தின் கிண்ணியா, ஆலங்கேணி, நடு ஊற்று, கச்சக்கொடித்தீவு உள்ளிட்ட வைத்தியசாலைகளின் வைத்தியர்கள் பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து நேற்று(08) பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர்.

இதனால், வைத்தியசாலைகளில் அவசர சேவை பிரிவைத் தவிர, ஏனைய பிரிவுகள் ஸ்தம்பிதமடைந்திருந்தன.

அத்துடன், வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற வந்த நோயாளர்கள் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கியதுடன், பலர் சிகிச்சை பெற முடியாத நிலையில் திரும்பிச் சென்றனர். இதேவேளை, சில வைத்தியசாலைகள் எவருமின்றி வெறிச்சோடிக் காணப்பட்டன.

கல்முனையில் சுகாதாரத்தை பேணாத உணவக உரிமையாளர்களுக்கு எச்சரிக்கை

மாளிகைக்காடு குறூப், ஒலுவில் விசேட நிருபர்கள்

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்துக்குட்பட்ட சில உணவகங்களில் பாவனைக்கு உதவாத உணவுகளையும் அசுத்தமான பாத்திரங்களையும் மீட்டு அழித்துள்ளதாக, அப்பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஐ.எல்.எம்.றிபாஸ் தெரிவித்தார்.

அத்துடன், இது தொடர்பாக அவ்வுணவகங்களின் உரிமையாளர்களை எச்சரித்துள்ளதாகவும், அவர் தெரிவித்தார்.

கல்முனை நகரிலுள்ள உணவகங்களில் கடந்த திங்கட்கிழமை (06) முதல் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களினால் சோதனை மேற்கொள்ளப்பட்டு வரப்படுகின்றது.

இந்நிலையில் சுத்தத்தை பேணுவதுடன், உணவுப் பாதுகாப்பை உத்தரவாதப்படுத்துவதற்காக மேற்படி உணவகங்களின் உரிமையாளர்களுக்கு இரண்டு வாரகால அவகாசம் வழங்கப்படுள்ளதாகவும், அவர் தெரிவித்தார்.

தம்பாலை ஆற்றை பார்வையிடச் சென்ற காத்தான்குடியை சேர்ந்த இருவர் பலி

புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்

மட்டக்களப்பு மாவட்டத்தின் காத்தான்குடி பிரதேசத்தைச் சேர்ந்த தந்தையும் மகளும், பொலன்னறுவை மாவட்டத்திலுள்ள தம்பாலை ஆற்றைப் பார்வையிடுவதற்குச் சென்ற போது, அந்த ஆற்றில் தவறி விழுந்து உயிரிழந்துள்ளனர்.

பொலன்னறுவை மாவட்டத்தின் பதுரிலிலுள்ள பாடசாலையில் பிரதி அதிபராகவும் ஆங்கிலமொழி ஆசிரியராகவும் கடமையாற்றி வந்த காத்தான்குடியை சேர்ந்த 46 வயதுடைய ஷாஜகானும் காத்தான்குடி நூறானிய்யா வித்தியாலயத்தில் 7ஆம் ஆண்டில் கல்வி கற்று வந்த அவரது மகளான 12 வயதுடைய சயான் பர்சத்துமே இவ்வாறு உயிரிழந்துள்ளனர். தம்பாலை ஆற்றைப் பார்வையிடுவதற்கு 5 பேர் நேற்று முன்தினம் (07) சென்றுள்ளனர். இந்நிலையில், அவர்கள் ஆற்றுக்கு அருகில் நின்றுகொண்டு நீரோட்டத்தைப் பார்வையிட்டுக்கொண்டிருந்தனர். இதன் போது, 12 வயதுச் சிறுமி ஆற்றினுள் தவறி விழுந்துள்ளார்.

இதனை அவதானித்த அச்சிறுமியின் தந்தை, தனது மகளைப் காப்பாற்றுவதற்காக ஆற்றில் இறங்கிய போது, அவரும் நீரில் மூழ்கியுள்ளார்.

இந்நிலையில், இச்சிறுமியின் தாயும் ஏனைய பிள்ளைகளும் கூக்குரலிட்டு அழுத போது, ஒன்றுதிரண்ட பொதுமக்கள், அவ்விருவரையும் தேடும் பணியில் ஈடுபட்டனர்.

இதன் பின்னர், தந்தையும் மகளும் சடலங்களாக மீட்கப்பட்டுள்ளதாக, பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்விருவரின் சடலங்களும் பிரேத பரிசோதனைக்காக பொலன்னறுவை வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டது.

இச்சம்பவம் தொடர்பாக பொலன்னறுவை பொலிஸார் விரிவான விசாரணையை மேற்கொண்டு வருகின்றனர்.

மதுபோதையில் சீர்கேடாக நடந்த மூவருக்கு அபராதம்

பாலமுனை தினகரன் நிருபர்

மதுபோதையில் பொதுமக்களுக்கு இடையூறு ஏற்படுத்தும் வகையில் நடந்துகொண்ட மூவருக்கு எதிராக தலா 3,000 ரூபா அபராதத்தை, அக்கரைப்பற்று நீதவான் நீதிமன்ற நீதவான் எம்.எச்.எம்.ஹம்ஸா விதித்துள்ளார்.

அக்கரைப்பற்று பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சாகாம வீதியில் மது போதையில் பொதுமக்களுக்கு இடையூறு ஏற்படுத்தும் வகையில் நடந்துகொண்டமை தொடர்பாக இம்மூவரையும் பொலிஸார் கைது செய்தனர்.

இதனைத் தொடர்ந்து, இவர்களை நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்திய போதே, நீதவான் மேற்படி அபராதத்தை விதித்துள்ளார்.

சிறுவர்களின் பங்களிப்புடன் மரக்கன்றுகள் நடுகை திட்டம்

காரைதீவு குறூப் நிருபர்

களுவாஞ்சிக்குடி பிரதேசத்தில் முன்பள்ளிச் சிறுவர்களின் பங்குபற்றுதலுடன் சுமார் 200 பயன்தரும் மரக்கன்றுகள் நடப்பட்டுள்ளன.

களுவாஞ்சிக்குடி பிரதேச செயலக உத்தியோகத்தர்களின் ஒழுங்கமைப்பின் கீழ் பயன்தரும் மரக்கன்றுகள் நடுகை திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

அந்த வகையில், எருவில் பாரதிபுரம் முன்பள்ளிப் பாடசாலை வளாகத்திலும் களுதாவளை பொருளாதார மத்திய நிலைய வளாகத்திலும் நேற்று முன்தினம் (07) இம்மரக்கன்றுகளை முன்பள்ளிச் சிறுவர்கள் பலர் கலந்துகொண்டு நாட்டி வைத்தனர்.

வாகன விபத்தில் ஒருவர் பலி; லொறியின் சாரதி கைது

அம்பாறை மாவட்டத்தின் அக்கரைப்பற்று பிரதேசத்தில் இடம்பெற்றுள்ள வாகன விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

அக்கரைப்பற்று அம்பாறை வீதியில் ஒரு கிலோமீற்றர் மைல்கல் பிரதேசத்தில் நேற்று முன்தினம் (07) மாலை இவ்விபத்து இடம்பெற்றுள்ளது.

அம்பாறையிலிருந்து அக்கரைப்பற்று பிரதேசத்துக்குப் பயணித்த மோட்டார் சைக்கிளொன்று, வளைவு வீதியூடாக வேகமாகப் பயணித்துக்கொண்டிருக்கையில் அதன் வேகக் கட்டுப்பாட்டை இழந்த நிலையில், வீதியில் எதிர்த்திசையில் பயணித்த லொறியுடன் மோதி விபத்துக்குள்ளானதாக, பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்விபத்தில் படுகாயமடைந்த மோட்டார் சைக்கிளைச் செலுத்திச் சென்றவர், அக்கரைப்பற்று வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுக்கொண்டிருந்த போது, சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளதாகவும், பொலிஸார் தெரிவித்தனர். அக்கரைப்பற்று பிரதேசத்தைச் சேர்ந்த 26 வயதுடையவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இவ்விபத்தைத் தொடர்ந்து லொறியின் சாரதியை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இவ்விபத்துத் தொடர்பாக பொலிஸார் விரிவான விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

அட்டாளைச்சேனையில் இரத்ததான முகாம்

திராய்க்கேணி தினகரன் நிருபர்

அட்டாளைச்சேனை மார்க்ஸ் மேன் விளையாட்டுக்கழகத்தின் ஏற்பாட்டில் மாபெரும் இரத்ததான முகாமொன்று, அட்டாளைச்சேனை அக்/ அரபா வித்தியாலயத்தில் அண்மையில் நடத்தப்பட்டது.

இலங்கையின் 75ஆவது சுதந்திர தினத்தையொட்டியே இந்த இரத்ததான முகாம் நடத்தப்பட்டது.

இந்த இரத்ததான முகாமில் அட்டாளைச்சேனை பிரதேச இளைஞர்கள், சமூக ஆர்வலர்கள், விளையாட்டுக்கழகங்களை பிரதிநிதித்துவப்படுத்தும் வீரர்கள் உட்பட பெருமளவானோர் கலந்துகொண்டு இரத்ததானம் அளித்தனர்.

இதன்போது, அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையின் இரத்த வங்கிப் பிரிவுக்குப் பொறுப்பான மருத்துவ உத்தியோகத்தர், சிரேஷ்ட தாதி உத்தியோகத்தர்கள் கலந்துகொண்டு தமது சேவையை வழங்கினர்.

பொருளாதாரப் பிரச்சினைக்கு ஆய்வு மூலம் தீர்வு வழங்க வேண்டும்

தென்கிழக்கு பல்கலைக்கழக உபவேந்தர் தெரிவிப்பு

கல்முனை மத்திய தினகரன் நிருபர்

நாட்டின் பொருளாதாரப் பிரச்சினைக்கு ஆராய்ச்சியாளர்கள் ஆய்வுகளை நடத்தி தீர்வு வழங்க முன்வர வேண்டுமென, தென்கிழக்கு பல்கலைக்கழக உபவேந்தர், பேராசிரியர் றமீஸ் அபூபக்கர் தெரிவித்தார்.

கிழக்குப் பல்கலைக்கழகத்தின் ஏற்பாட்டில், இலங்கை மன்றத்தினுடைய 11ஆவது ஆய்வரங்கு, நல்லையா கூட்ட மண்டபத்தில் கடந்த வெள்ளிக்கிழமை (03) நடைபெற்றது. இதன்போது, 'இலங்கை பொருளாதாரத்தில் சமகால சர்ச்சைகள் மற்றும் சங்கடங்கள்' எனும் தொனிப்பொருளின் கீழ் இவ்வாய்வரங்கு நடைபெற்றபோதே, அவர் இவ்வாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் உரையாற்றிய போது,

"இலங்கையில் தற்போது நிலவும் பொருளாதாரப் பிரச்சினையினால், எமது நாடு பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றது.

ஆராய்ச்சியாளர்களுக்கு சில பொறுப்புகள் காணப்படுகின்றன.

ஆகையினால், நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு ஆராய்ச்சியாளர்கள் உந்துசக்தியாக இருந்து, பங்களிப்புச் செய்ய வேண்டும்.

இந்நிலையில், ஆராய்ச்சியாளர்கள் ஆய்வுகளை மேற்கொண்டு இந்த நாட்டை முன்நோக்கிக் கொண்டு செல்வதற்கு தம்மாலான பங்களிப்பை வழங்க வேண்டும்" என்றார்.

தங்க ஆபரணத்தை திருடிய சிற்றூழியருக்கு விளக்கமறியல்

ரொட்டவெவ குறூப் நிருபர்

திருகோணமலை பொது வைத்தியசாலையில் சிகிச்சை பெற வந்த நோயாளியொருவரின் தங்கநகையைத் திருடிய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட அவ்வைத்தியசாலை சிற்றூழியரொருவரை எதிர்வரும் 10ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு, திருகோணமலை நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

பொலன்னறுவை மாவட்டத்தைச் சேர்ந்த 4 பிள்ளைகளின் தாயாரான 31 வயதுடையவருக்கே நேற்று முன்தினம் (07) இவ்விளக்கமறியல் உத்தரவு வழங்கப்பட்டுள்ளது.

நோயாளர்களை அனுமதிக்கும் பிரிவில் கடமையாற்றி வந்த அச்சிற்றூழியர், நோயாளியான அப்பெண் அணிந்திருந்த தங்கநகையைக் கழற்றி அவரது பையில் வைக்குமாறு கூறியுள்ளார்.

இதனையடுத்து, அப்பெண்ணும் தான் அணிந்திருந்த நகையைக் கழற்றி தனது பையில் வைத்துள்ளார்.

இதனைத் தொடர்ந்து, தனது நகை காணாமல் போனதை அவதானித்த அப்பெண், தனது தங்கநகையை அச்சிற்றூழியர் திருடியதாக பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

பையில் வைக்கப்பட்ட போதே, அச்சிற்றூழியர் நகையைத் திருடியதாகவும் இது தொடர்பாக அச்சிற்றூழியரிடம் கேட்ட போது, அதைத் தான் எடுக்கவில்லையென அச்சிற்றூழியர் கூறியதாகவும், நகையைப் பறிகொடுத்த பாலையூற்று பகுதியைச் சேர்ந்த அப்பெண் முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், விசாரணை நடத்தி திருடப்பட்ட நகையை மீட்டுள்ளதாகவும், பொலிஸார் தெரிவித்தனர்.

தினகரன்
வடக்கின் உதயம்
Vadakkin Uthayam

வடக்கில் சுகாதார ஊழியர்கள் பணிப்புறக்கணிப்பு; சுகாதார சேவைகள் முடக்கம், நோயாளர்கள் அவதி

வவுனியா விசேட, மன்னார் குறூப், யாழ் நிருபர்கள்

பல்வேறு கோரிக்கைகளை முன் வைத்து நாடாளாவிய ரீதியில் சுகாதார ஊழியர்கள் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டுவருகின்றனர்.

வடக்கில் நேற்று சுகாதார ஊழியர்கள் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டனர்.

வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலை வைத்தியர்கள் நேற்று (08.02.2023) காலை 8.00 மணி தொடக்கம் 24 மணித்தியால பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டமையால் நோயாளர்கள் பெரும் சிரமங்களுக்கு முகங்கொடுத்துள்ளனர்.

சுகாதாரம், மின்சாரம், துறைமுகம், பெற்றோலியம், பல்கலைக்கழக விரிவுரையாளர்களின் சங்கம் உள்ளிட்ட 40 இற்கும் அதிகமான தொழிற் சங்கங்கள் ஒன்றிணைந்து எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டனர். தொழிற்சங்கங்களின் எதிர்ப்பு தினத்திற்கு ஆதரவளித்து 24 மணித்தியால தொழிற்சங்க நடவடிக்கையை முன்னெடுப்பதற்கு அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் நடவடிக்கை மேற்கொண்டிருந்ததுடன் அரச மற்றும் தனியார் வைத்தியசாலைகளில் 24 மணித்தியால பணிப்பகிஷ்கரிப்பு முன்னெடுப்பதாக அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் ஊடகப் பேச்சாளர் சமில் விஜேசிங்க தெரிவித்திருந்தார்.

இந்நிலையிலேயே வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையிலும் அவசர நோயாளர் பிரிவு, நோயாளர் விடுதி, விபத்துப்பிரிவு, சத்திர சிகிச்சை பிரிவு உட்பட்ட சில சேவைகளில் மட்டுப்படுப்பட்ட வைத்தியர்கள் ஈடுபடுவதுடன் வெளி நோயாளர் பிரிவு, கிளினிக் பிரிவு போன்ற ஏனைய சேவைகளிலிருந்து வைத்தியர்கள் முற்றாக 24மணிநேர பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

பணிப்புறக்கணிப்பு போராட்டம் காரணமாக கிளினிக், வெளிநோயாளர் பிரிவு ஆகியவற்றுக்கு வருகை தந்த நோயாளிகள் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகங்கொடுத்திருந்தனர். பணிப்புறக்கணிப்பு காரணமாக மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலைக்கு வரும் நோயாளர்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்தனர். யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலையிலும் வைத்தியர்கள் நேற்றைய பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டனர்.

கல்வியங்காட்டு சந்தை வியாபாரிகள் 13 பேருக்கு எதிராக சட்ட நடவடிக்கை!

யாழ்.விசேட நிருபர்

கல்வியங்காடு மீன் சந்தையில் அங்கீகரிக்கப்படாத, நிறுக்கும் கருவி (தராசை) பயன்படுத்தி வியாபாரத்தில் ஈடுபட்ட 13 வியாபாரிகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

யாழ். மாவட்ட அளவீட்டு அலகுகள், நியமங்கள் மற்றும் சேவைகள் பிரிவின் உத்தியோகத்தர்களால் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை கல்வியங்காடு மீன் சந்தையில் திடீர் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. இதன்போது, வியாபார நிலையங்களில் பயன்படுத்தப்பட்ட நிறுக்கும் கருவிகளை பரிசோதித்த போது, அளவீட்டு அலகுகள், நியமங்கள் மற்றும் சேவைகள் திணைக்களத்தினரால் அங்கீகரிக்கப்படாத, வியாபாரத்திற்கு பயன்படுத்தமுடியாத 13 நிறுக்கும் கருவிகளை வியாபாரிகள் பயன்படுத்தியமை. கண்டறியப்பட்டு அவர்களுக்கு எதிராக சட்ட திணைக்களத்தினரால் நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

உள்ளூராட்சி தேர்தலின் பின்னர் பள்ளிவாசல் புதிய நம்பிக்கையாளர் தெரிவு இடம்பெறும்

முஸ்லிம் சமயப் பண்பாட்டலுவல்கள் திணைக்களம்

(தலைமன்னார் விஷேட நிருபர்)

சகல பள்ளிவாசல்களிலும் நடைபெறவுள்ள புதிய நம்பிக்கையாளர்களை தெரிவு செய்யும் கூட்டம் உள்ளூராட்சி மன்றத்தேர்தலின் பின்னர் நடத்துமாறு முஸ்லிம் சமயப் பண்பாட்டலுவல்கள் திணைக்களம் அறிவுறுத்தல் வழங்கியுள்ளது.

இதுதொடர்பில் பள்ளிவாசல் நம்பிக்கையாளர்கள், நம்பிக்கைப் பொறுப்பாளர்கள், அனைத்து பள்ளிவாசல், தக்கியாக்கள் மற்றும் ஸாவியாக்கள் ஆகியோருக்கு முஸ்லிம் சமயப் பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் ஏ.எம்.பைசல் அறிவுறுத்தல் வழங்கியுள்ளதாக தெரிவித்தார்.

உள்ளூராட்சி மன்றத்தேர்தல் எதிர்வரும் 2023.03.09ம் திகதி நடைபெறவுள்ளதால் அனைத்து பள்ளிவாசல்கள், தக்கியாக்கள் மற்றும் சாவியாக்களில் நடைபெறவுள்ள புதிய நம்பிக்கையாளர்களை தெரிவு செய்வதற்கான (சாதாரண தெரிவு அல்லது இரகசிய வாக்கெடுப்பு) பொதுக்கூட்டங்களை உள்ளூராட்சி மன்றத் தேர்தலின் பின்னர் நடாத்துமாறு தேர்தல் ஆணைக்குழுவினர் தங்களின் 2023.02.06ம் திகதி வெளியிட்டுள்ள சுற்று நிரூபத்தில் அறிவுறுத்தல் வழங்கியுள்ளனர்.

எனவே அனைத்து பள்ளிவாசல், தக்கியாக்கள் மற்றும் ஸாவியாக்களில் நம்பிக்கையாளர் தெரிவுகளை நடாத்துவதை தவிர்த்து கொள்வதுடன் உள்ளூராட்சி மன்றத் தேர்தல் முடிவடைந்த பின்னர் நம்பிக்கையாளர் தெரிவுகளை நடாத்துவதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.

த.தே.ம முன்னணியின் மன்னார் மாவட்ட வேட்பாளர் அறிமுக கூட்டம்

(மன்னார் குறூப் நிருபர்)

மன்னார் மாவட்டத்தில் தமிழ் தேசிய மக்கள் முன்னணி சார்பாக உள்ளூராட்சி மன்ற தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர் அறிமுக கூட்டம் நேற்றுமுன்தினம் மாவட்ட அமைப்பாளர் துரைராஜா யோண்சன் தலைமையில் இடம்பெற்றது.

அறிமுக கூட்டத்தில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திர குமார் பொன்னம்பலம், கட்சியின் செயலாளர் பாராளுமன்ற உறுப்பினர் செல்வராஜா கஜேந்திரன் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர்.

இம்முறை இடம்பெறவுள்ள உள்ளூராட்சி மன்ற தேர்தலில் தமிழ் தேசிய மக்கள் முன்னணி மாவட்டத்திலுள்ள 5 உள்ளூராட்சி மன்றங்களில் மன்னார் நகர சபை, மன்னார் பிரதேச சபை மற்றும் முசலி பிரதேச சபை ஆகிய மூன்று உள்ளூராட்சி மன்றங்களில் சைக்கிள் சின்னத்தில் போட்டியிடுகின்றனர். இந்நிலையில் மூன்று உள்ளூராட்சி மன்றங்களில் போட்டியிடுகின்ற வேட்பாளர்களின் அறிமுக நிகழ்வு இடம்பெற்றது.

இதன்போது தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திர குமார் பொன்னம்பலம், கட்சி செயலாளர் பாராளுமன்ற உறுப்பினர் செல்வராஜா கஜேந்திரன் ஆகியோர் உரை நிகழ்த்தியமை குறிப்பிடத்தக்கது.

தேர்தல் நடவடிக்கைகளுக்கு உள்ளூராட்சி சபை சொத்துக்களை பயன்படுத்த தடை

சாவகச்சேரி விஷேட நிருபர்

தேர்தல் நடவடிக்கைகளுக்கு உள்ளூராட்சி சபை சொத்துக்களை பயன்படுத்தாமல் இருப்பதை உறுதிப்படுத்துமாறு வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் ஊடாக தேர்தல் ஆணைக்குழு உள்ளூராட்சி மன்ற செயலாளர்களுக்கு அறிவுறுத்தல் விடுத்துள்ளது.

சாவகச்சேரி நகரசபையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற மாதாந்த அமர்வின் போதே இவ்விடயம் தொடர்பாக கலந்துரையாடப்பட்டது.

உள்ளூராட்சி ஆணையாளரால் அனுப்பப்பட்டுள்ள இக்கடிதத்தில்;

உள்ளூராட்சி மன்றங்களுடைய வாகனங்களை கட்சி செயற்பாடுகள் மற்றும் பிரசார நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தக் கூடாது.

உள்ளூராட்சி சபைகளுடைய சொத்துக்கள், காணிகள் போன்றவற்றை பிரசார நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தாமல் இருப்பதை சபை செயலாளர்கள் உறுதிப்படுத்த வேண்டும்,

சபை நிதியில் மேற்கொள்ளப்படும் வாழ்வாதார உதவிகள் உள்ளிட்ட உதவித்திட்டங்களைப் பயன்படுத்தி பிரசார நடவடிக்கையில் ஈடுபடுவதை தவிர்க்க வேண்டும் உள்ளிட்ட அறிவுறுத்தல்களை உள்ளூராட்சி ஆணையாளர் உள்ளூராட்சி சபைகளுடைய செயலாளர்களுக்கு அனுப்பி வைத்துள்ளார்.

தேர்தல்கள் ஆணைக்குழுவுடன் அண்மையில் இடம்பெற்ற கலந்துரையாடலின் அடிப்படையில் உள்ளூராட்சி ஆணையாளரால் இவ்வுத்தரவு விடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

கடும் மழையினால் அறுவடை பாதிப்ப;

முல்லைத்தீவு மாவட்டத்தில் 1500 ஏக்கர் நெற்செய்கை பாதிப்பு

(புதுக்குடியிருப்பு விசேட நிருபர்)

முல்லைத்தீவு மாவட்டத்தில் 1500 ஏக்கர் வரையான நெற்செய்கை நிலங்கள் கடும் மழையால் பாதிக்கப்பட்டுள்ளதாக முல்லைத்தீவு மாவட்ட கமநல அபிவிருத்தி உதவி ஆணையாளர் ஆர்.பரணிகரன் தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் கடந்த முதலாம் மற்றும் 2ஆம் திகதிகளில் பெய்த கடும் மழையினால் அறுவடைக்கு தயாரான நிலையில் இருந்த 1518 ஏக்கர் விவசாய செய்கை அழிவடைந்துள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்,

முல்லைத்தீவு மாவட்டத்தில் கடந்த பெரும்போக நெற்செய்கை 22 ஆயிரம் ஹெக்டயரில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. பல சவால்களுக்கு மத்தியில் விவசாயிகள் விவசாய செய்கைகளை மேற்கொண்டுள்ளனர். எரிபந்த நோய்த்தாக்கம் காரணமாக விளைச்சல் ஒரு ஏக்கருக்கு 15 மூட்டைகள் என்ற அளவில் தான் காணப்பட்டது.

இந்நிலையில் இந்த மாத தொடக்கத்தில் பெய்த மழை காரணமாக அறுவடைக்கு தயாரான நிலையிலிருந்த 1518 ஏக்கர் நெற்செய்கை பாதிக்கப்பட்டுள்ளது. ஓட்டுசுட்டானில் 530 ஏக்கரும்,புதுக்குடியிருப்பில் 380 ஏக்கரும் முள்ளியவளையில் 318 ஏக்கரும் உள்ளிட்ட மாவட்டத்தில் கொக்குத்தொடுவாய், ஒலுமடு, குமுழமுனை, உடையார்கட்டு போன்ற இடங்களிலுமாக 1518 ஏக்கர் பாதிக்கப்பட்டுள்ளதாக முதற்கட்ட மதீப்பீட்டு அறிக்கையில் கிடைக்கப்பெற்றுள்ளது.

பாதிப்புக்கள் தொடர்பிலான விபரங்கள் அடுத்த கட்டமாக இழப்பீட்டுக்கான மதிப்பீடுகளை மதிப்பிடும் தலைவரான பிரதேச செயலாளருக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அடுத்த கட்டமாக அழிவுகள் முழுமையாக மதிப்பீடு செய்து அவர்களுக்கான முழுமையான இழப்பீட்டினை பெற்றுக்கொள்வதற்கான காப்புறுதி நடவடிக்கைகளை முன்னெடுக்கவுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் ஒன்றுகூடல் நேற்று காலை இடம்பெற்றது. இந்நிகழ்வில் யாழ். போதனா வைத்தியசாலையின் சமுதாய மருத்துவத்துறையின் வைத்திய பதிவாளர் டாக்டர்; கே. ஏன். பரமேஸ்வரன் 'நேருள மனப்பாங்கு' என்ற பொருளில் கருத்துரை வழங்கினார்.

விவசாய காணிக்குள் யானை புகுந்து அட்டகாசம்

ஓமந்தை விஷேட நிருபர்

வவுனியா அரசமுறிப்பு கிராமத்தில் விவசாய காணிகளுக்குள் நேற்று யானை புகுந்து பயிர்களை நாசம் செய்துள்ளது. நேற்று இரவு குரக்கன், உழுந்து மற்றும் நெல் பயிரிடப்பட்ட காணிக்குள் வந்த யானை அங்கிருந்த பயிர்களை சேதப்படுத்தியதுடன் பயிர்களையும் உண்டுள்ளது. இதனை அவதானித்த விவசாயிகள் யானையை துரத்திய போதிலும் அது அருகிலுள்ள 4 ஏக்கர் தென்னந்தோட்டத்திற்குள் சென்று தென்னங்குருத்துக்களை உட்கொண்டுள்ளதாக தெரிவிக்கின்றனர்.

வரிச்சட்டத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து இலங்கை வங்கி ஊழியர் சங்கத்தினால் நேற்று மதியம் வவுனியா நகரில் கார்கில்ஸ் புட்சிட்டிக்கு முன்பாக கவனயீர்ப்பு போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது. இப்போராட்டம் சுமார் 30 நிமிடங்கள் இடம்பெற்றன.
(படம் வவுனியா விசேட நிருபர்)

நகர்வலம்

பசுமைப் பொருளாதாரத்தை ஏற்படுத்தும் முயற்சிகளுக்கு பான் கீ மூன் ஆதரவு

காடுகள் அழிக்கப்படுவதைத் தடுத்து, பசுமைப் பொருளாதாரத்தை ஏற்படுத்தும் இலங்கையின் முயற்சிகளுக்கு ஆதரவளிக்க உள்ளதாக ஐ,நாவின் முன்னாள் செயலாளர் பான்கீ மூன் தெரிவித்துள்ளதாக, சுற்றாடல் அமைச்சர் நஸீர் அஹமட் தெரிவித்தார்.

இலங்கை வந்துள்ள ஐ,நா முன்னாள் செயலாளர் நாயகமும், உலக பசுமைப் பொருளாதார வளர்ச்சி நிறுவனத்தின் தலைவருமான பான் கீமூனுடன் விஷேட சந்திப்பில் ஈடுபட்ட பின்னர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையிலேயே அமைச்சர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இதுபற்றி அமைச்சர் மேலும் தெரிவித்ததாவது, காடுகளைப் பாதுகாப்பதில் ஏனைய கைத்தொழில் நாடுகளைவிடவும் இலங்கை முன்னணியில் உள்ளது. நாட்டில்,32 வீதமான பசுமைக் காடுகளைப் பாதுகாக்க வேண்டும் என்பதில் ஜனாதிபதி உறுதியுடன் உள்ளார். உயிர்ப் பல்வகைமையைப் பாதுகாக்கும் பிரதான திட்டங்களில் காடுகளைப் பாதுகாப்பது பிரதான பங்கு வகிக்கிறது.இது மட்டுமன்றி, காலநிலையைப் பாதுகாப்பதில் காடுகளின் பங்களிப்புக்கள் இன்றியமையாததாகிவிட்டன. இத்தகைய பெறுமதி மிக்க காடுகள் கைத்தொழில் புரட்சிகளால் அழிக்கப்படுகின்றன.

இதைப்பாதுகாப்பது அவசியம். இதற்கான ஏற்பாடுகளில் சுற்றாடல் அமைச்சு கவனம் செலுத்தி வருகிறது.காடுகளைப் பாதுகாக்கும் செயற்றிட்டங்களை வடிவமைத்து ஒப்படைத்தால், அதற்கான நிதியுதவிகளை,உலக பசுமைப் பொருளாதார வளர்ச்சி நிறுவனம் வழங்கும் என்றும் எமக்கு உறுதியளிக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் சுட்டிக் காட்டினார்.

நாட்டின் 75வது சுதந்திர தின விழாவிற்கு வாரணாசி ராமகிருஷ்ணா மிஷனின் ஸ்ரீ ஸ்வரூபானந்த ஸ்வாமி வாழ்த்துத் தெரிவித்துள்ளார். இதன்பொருட்டு, சென்னையிலுள்ள துணை உயர் ஸ்தானிகர் டாக்டர் டி. வெங்கடேஷ்வரனைச் சந்தித்த அவர், இலங்கையின் எதிர்காலம் செழிப்படைய பிரார்த்திப்பதாகத் தெரிவித்தார்.

வெலிகம அறபா தேசிய பாடசாலை (1997) பழைய மாணவர்களின் ஒன்று கூடல் பலங்கொடை ரிசோட்டில் நடைபெற்றது. இவ்வாறு, 25 வருடங்களின் பின்னர் ஒன்று கூடிய இம்மாணவர்கள், தங்களது கடந்தகால ஞாபகங்களை மீட்டிக் கொண்டனர். மௌலவிமார், பொறியாளர்கள், முன்னணி வர்த்தகர்கள் உள்ளிட்ட இப்பாடசாலையில் பயின்ற பலர் இதில் கல்நது கொண்டனர்.வெலி

கிறிஸ்தவ மத விவகாரத் திணைக்களம் புதிய கட்டடத்துக்கு இடமாற்றம்

தெஹிவளை கல்கிஸை விஷேட நிருபர்

கிறிஸ்தவ மத விவகாரத் திணைக்களம், கொழும்பு 10 டி.பி. ஜாயா மாவத்தையில் உள்ள முஸ்லிம் சமய விவகாரத் திணைக்கள கட்டிடத்திற்கு இடமாற்றப்பட்டுள்ளது. இதையடுத்து இத்திணைக்களத்தின் பணிகள் (06) புதிய கட்டத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டன. இந் நிகழ்வில், பௌத்த மத விவகார மற்றும் மத விவகார கலாசார அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க கலந்து கொண்டார். கிறிஸ்தவ மதத் தலைவர்களின் பிரார்த்தனைகளுடன் பணிகள் ஆரம்பித்து வைக்கப்பட்டன.

இந்நிகழ்வில் கிறிஸ்தவ மத விவகாரப் பணிப்பாளர் மற்றும் அமைச்சின் செயலாளாரும் கலந்து கொண்டனர்.

கிருஷ்ணா ஸ்வீட்ஸ், பாரதிய வித்யா பவன் மற்றும் உறவு சுரங்கம் நடத்திய "தமிழ்36" சங்க இலக்கிய விழாவில், கலைமாமணி முனைவர் வி, ஜி சந்தோசத்திற்கு "தமிழ் 36" விருது வழங்கப்பட்டது. கிருஷ்ணா ஸ்வீட் தலைவர் முரளி, இவ்விருதை அவருக்கு வழங்கினார். விஜிபி உலக தமிழ் சங்கத்தின் நிறுவுநரான சந்தோஸ், உலகெங்கும் திருவள்ளுவர் சிலையை நிறுவி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. இதில், கலந்துகொண்ட முக்கியஸ்தர்களையும் படத்தில் காணலாம்.

மாணவ தலைவர்கள் கௌரவிப்பு

வெலிகம தினகரன் நிருபர்

காலி, நாவின்ன முஸ்லிம் மகா வித்தியாலய நூற்றாண்டு விழாவின் ஒரு நிகழ்வாக, மாணவர் தலைவர்களுக்கு பதக்கம் அணிவிக்கும் வைபவம் கல்லூரி கேட்போர் கூடத்தில் அண்மையில் மிக சிறப்பாக நடைபெற்றது.

கல்லூரி அதிபர் எம்.எஸ்.எம். இம்தியாஸ் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், தென்மாகாண தமிழ் மொழி மூல பாடசாலைகளுக்குப் பொறுப்பான பிரதிக் கல்வி பணிப்பாளர் அஷ்ஷெய்க் எம்.ஏ.எம். மஷாஹிர் (நளீமி), பிரதம அதிதியாக கலந்து கொண்டார்.

விசேட அதிதிகளாக காலி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர்களான திருமதி, ஜுமானா ஸாதிக் மற்றும் அஷ்ஷெய்க் எம்.ஐ.எம். பாறூக் (நளீமி) ஆகியோர் கலந்து கொண்டனர். இவர்கள், வரவேற்று அழைத்து வரப்படுவதையும் பதக்கம் சூட்டப்பட்ட மாணவர்கள் அதிதிகளுடன் வீற்றிருப்பதையும், கலந்து கொண்ட அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்களையும் படங்களில் காணலாம். மாணவர்களது கலை, கலாசார நிகழ்ச்சிகளும் இங்கு இடம்பெற்றன.

மன்ஃசொர்ணபுரி அ.மு.க.பாடசாலையிலிருந்து இம்முறை (2022) தரம் ஐந்து புலமைப்பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களில் பலர், எழுபது புள்ளிகளுக்கு மேல்பெற்று சித்தியடைந்துள்ளனர். இதில், செல்வி காலிப் சாதிக் பாத்திமா ஹனா என்ற மாணவி 153புள்ளிகளைப் பெற்று சித்தி அடைந்துள்ளார். (படமும் தகவலும் எம்.ஐ.ஹன்பல்)

புத்தளம் செய்னப் பெண்கள் கல்லூரிக்கு அலிசப்ரி ரஹீம் எம்பி விஜயம்

புத்தளம் தினகரன் நிருபர்

புத்தளம் செய்னப் பெண்கள் ஆரம்ப பாடசாலை அதிபர் மற்றும் அபிவிருத்தி சங்க உறுப்பினர்களின் அழைப்பினை ஏற்று புத்தளம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அலிசப்ரி ரஹீம் (06) பாடசாலைக்கு விஜயமொன்றை மேற்கொண்டார்.

பாடசாலை அதிபர் எச்.யூ.எம். எஹியா, பிரதி அதிபர், உதவி அதிபர், ஆசிரியர்கள் மற்றும் அபிவிருத்திச் சங்க உறுப்பினர்களுடன் பாடசாலையின் அபிவிருத்தி சம்பந்தமான கலந்துரையாடலிலும் அவர் பங்கேற்றார். இங்கு உரையாற்றிய பாராளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி ரஹீம்,

பாடசாலையில் நிலவும் ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்ய உதவி வழங்கப்படும். பாடசாலை வளங்கள் பற்றாக்குறை சம்பந்தமாக நிர்வாகத்தினர் விடுத்த வேண்டுகோள் கவனத்தில் கொள்ளப்படும். இதன்போது,பாராளுமன்ற உறுப்பினரின் சேவையை பாராட்டி, பாடசாலையின் முன்னாள் அதிபர் திருமதி பெலஜியா அபுல் ஹுதா நினைவுச் சின்னம் வழங்கி கௌரவித்தார்.

உலக சதுப்பு நில தினத்தை முன்னிட்டு அநுராதபுரத்தில் விஷேட வேலைத் திட்டங்கள்

திறப்பனை தினகரன் நிருபர்

உலக சதுப்பு நில தினத்தை முன்னிட்டு அநுராதபுரத்தில் விஷேட வேலைத்திட்டங்கள் (02) முன்னெடுக்கப்பட்டன.

மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் ஏற்பாட்டில் இவ் வேலைத் திட்டம் முன்னெடுக்கப்பட்டது. மாவட்ட மேலதிக செயலாளர் (காணி) திருமதி சந்தியா என்.ஜி.அபேசேகர மற்றும் அநுராதபுரம் சுற்றாடல் தொடர்பான அரச நிறுவனங்களின் அதிகாரிகள் பலரும் இதில் கலந்து கொண்டிருந்தனர். அநுராதபுரம் வலிசிங்க ஹரிச்சந்திர விளையாட்டரங்கில் இந்நிகழ்வு இடம்பெற்றது.மர நடுகை நிகழ்வுடன் ஆரம்பமாகிய இந்நிகழ்வில் கருத்து தெரிவித்த மேலதிக மாவட்ட செயலாளர் திருமதி சந்தியா என்.ஜி.அபேசேகர, குறிப்பிட்டதாவது,!

சுற்றுச் சூழலை நேசிக்கும் பிள்ளைகள் உருவாக வேண்டும். அநுராதபுர மாவட்டம் சுற்றாடல் தொடர்பான பல பிரச்சினைகளை எதிர்நோக்கி வருகின்றது. மனிதனுக்கும் சுற்றுச் சூழலுக்கும் இடையில் சமநிலை இல்லாத நிலையிலேதான் பல பிரச்சினைகள் எழுகின்றன. சுற்றுச் சூழல் தினத்தில் மரக் கன்றுகள் நடப்பட்டாலும், அவற்றை பராமரிக்க எந்த அமைப்பும் முன்வருவதில்லை.

இதற்கான பயனுள்ள பணிகள் இடம்பெற வேண்டும். ஒரு நாடு எதிர் கொள்ளும் உணவுப் பற்றாக் குறையை தீர்ப்பதற்கு பலா மரம் போன்ற மரங்களை நடுவது அவசியம்.

குழந்தைகள் தலைமுறை சுற்றுச் சூழலிலிருந்து வெகு தூரமாகியுள்ள இவ்வேளையில், சுற்றுச் சூழலை ஆதரவு வைத்து மாணவர்கள் நெருக்கமாக இருப்பது மகிழ்ச்சியளிக்கிறது.

இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்ட மாகாண விவசாய செயலாளர் திரு. விஜய வனசிங்க, உரையாற்றியதாவது! 1971 ஆம் ஆண்டு கைச்சாத்திடப்பட்ட மாநாட்டில் ஈர நிலங்களுக்கு முக்கியத்துவம் வழங்கப்பட்டது. 1991 இல் இலங்கை ரெம்சார் உடன் படிக்கையில் கையெழுத்திட்டது. நிலத்தால் சூழப்பட்ட நிலையில் நாங்கள், இருக்கிறோம்.

அநுராதபுரம் மற்றும் பொலன்னறுவையை அடிப்படையாகக் கொண்ட சிறந்த நீர்ப்பாசன முறைமை உள்ளது. பொலன்னறுவையில் 63,000 ஹெக்டேயர்களும், அநுராதபுரத்தில் சுமார் நூற்று முப்பதாயிரம் ஹெக்டேயர் நெல் வயல்களும் உள்ளன. இந்த நிலங்கள் சதுப்பு நிலங்கள் என்று அழைக்கப்படுகின்றன.

"சதுப்பு நிலங்களை மீட்டெடுக்க வேண்டும்" என்பதே இந்த ஆண்டின் தொனிப் பொருளாகும். சதுப்பு நிலங்கள் பெருமளவில் அழிக்கப்படுவதே இதற்குக் காரணம். சதுப்பு நிலங்களுக்கு அச்சுறுத்தல்கள் அதிகரித்து வருகின்றன. மக்கள்தொகை அதிகரிப்பு, மனித செயல்பாடுகள் என்பன ஈரநிலங்களை பெருமளவில் அழித்துள்ளன.

இந்த ஈர நிலங்களின் அருகாமையில் கூட மனித நாகரிகங்கள் இருந்தன. மல்வத்து ஓயாவின் ஈரநிலங்களைச் சுற்றியே எமது ஆரியக் குடியேற்றங்கள் கூட அப்போது உருவாகியிருந்ததாகவும் அவர் குறிப்பிட்டார்.

இந்நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய நீர்ப்பாசனப் பணிப்பாளர் திரு.எச்.டி.மதிவக்க, சதுப்பு நிலங்களைப் பாதுகாப்பதில் நீர்ப்பாசனத் திணைக்களம் ஆற்றிவரும் பங்களிப்பை விளக்கினார். ஆறுகளில் நீர் மாசு படுதலின் அளவைக் கண்டறிந்து, நீர் மாசுபடுவதைத் தடுக்கும் திட்டங்களைத் தொடங்குவது தொடர்பாக பல பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாவும் அவர் கூறினார்.

உள்ளூராட்சிமன்ற உறுப்பினர்கள் ஒன்றுகூடலில் மட்டக்களப்பு மாநகர சபை உறுப்பினர்கள் பங்கேற்பு

மட்டக்களப்பு விசேட நிருபர்

இலங்கை உள்ளூராட்சி மன்றங்களின் சம்மேளனமானது, 14 சபைகளில் 5 செயன்முறைகளை முன்னெடுத்து வருவதாக, உள்ளூராட்சிமன்ற நிறுவனத்தின் சிரேஷ்ட நிகழ்ச்சித்திட்ட முகாமையாளர் பிரதீப் பெருமாள் தெரிவித்தார்.

சமூக மட்டத்தில் புத்திஜீவிகளையும் சமூக ஆர்வலர்களையும் இணைத்து சகவாழ்வை ஏற்படுத்தும் செயற்றிட்டம் மற்றும் பொறிமுறைகளை ஏற்படுத்தியுள்ளதாகவும், அவர் தெரிவித்தார்.

பொதுமக்களின் முறைப்பாடுகளுக்கு பதிலளித்தல், டோக்கன் முறை, செயலி, வட்ஸ்அப், பேஸ்புக் மூலம் தேவைகளை பொதுமக்களிடமிருந்து அறிதல், போக்குவரத்து எரிபொருள் QR Code முறைமை, பிரச்சினைகளை இனங்காண்பதற்கான விஜயம், சகவாழ்வு குழுக்கள் மூலம் முடியாமலுள்ள சேவைகளை இனங்காணல் எனும் சேவைகளை முன்னெடுத்துள்ளதாகவும், அவர் தெரிவித்தார்.

இனங்களிடையே சகவாழ்வு, சமத்துவம் மற்றும் நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் நோக்கில் உள்ளூராட்சிமன்ற உறுப்பினர்களுக்கான ஒன்றுகூடல் நேற்று (08) கொத்மலை பிரதேச சபை மண்டபத்தில் நடைபெற்றது. அரசாங்க உத்தியோகத்தர்கள் மற்றும் பொதுமக்களிடையே சிநேகபூர்வ உறவை ஏற்படுத்தி, வேலைகளை இலகுவாக்கும் நோக்கில் இந்த ஒன்றுகூடல் ஒழுங்கு செய்யப்பட்டது. இதில் மட்டக்களப்பு மாநகர சபை உறுப்பினர்கள், திருக்கோவில், இறக்காமம், மண்முனை தென்எருவில்பற்று பிரதேச சபைகளின் தலைவர்கள் உள்ளிட்டோர் கலந்துகொண்டு தமது செயற்றிட்டங்களை முன்வைத்தனர்.

ஜாயா நகர் கிராம அபிவிருத்தி சங்கத்துக்கு சிறந்த சமூகப் பணிக்கான விருது வழங்கல்

கந்தளாய், மூதூர் தினகரன் நிருபர்கள்

திருகோணமலை மாவட்டத்தின் மூதூர் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட ஜாயா நகர் கிராம அபிவிருத்திச் சங்கம் சிறந்த சமூகப் பணிகளை முன்னெடுத்தமைக்காக விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டுள்ளது.

மூதூர் பிரதேச செயலகத்தில் வைத்து இவ்விருது நேற்று முன்தினம் (07) வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

ஜாயா நகர் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் தலைவர் வி.எம்.எம். ஹஸீன் மற்றும் அதன் செயலாளர் பி.எம்.சக்ரியிடம் இவ்விருது வழங்கி வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் மூதூர் பிரதேச செயலாளர் எம்.பி.எம்.முபாரக், பிரதித் திட்டமிடல் பணிப்பாளர், நிர்வாக கிராம உத்தியோகத்தர், சமுர்த்தி தலைமை முகாமையாளர் மற்றும் அனைத்து உத்தியோகத்தர்கள் கலந்துகொண்டனர்.

வாழைச்சேனை தொழில் பயிற்சி நிலையத்தில் திருகோணமலையைச் சேர்ந்த நால்வர் இணைப்பு

தம்பலகாமம் குறூப் நிருபர்

மட்டக்களப்பு மாவட்டத்தின் வாழைச்சேனை தொழில் பயிற்சி நிலையத்தில் சமூக சேவைகள் திணைக்களம் ஊடாக விசேட தேவையுடையவர்களுக்காக நடத்தப்படும் பயிற்சியில் திருகோணமலை மாவட்டத்தைச் சேர்ந்த விசேட தேவையுடைய நால்வர் இணைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கான வழிகாட்டலை சமூக சேவைகள் திணைக்களத்தின் திருகோணமலை மாவட்ட இணைப்பாளர் த.பிரணவன் வழங்கியுள்ளார். தையல் மற்றும் இலத்திரனியல் பயிற்சிகளை இவர்கள் பெற்றுக்கொள்ளவுள்ளதுடன், இவர்களுக்கு இரண்டு வருடங்கள் தொழில் பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன.

திருகோணமலை மாவட்ட செயலாளர் பி.எச்.என்.ஜயவிக்ரம தலைமையில் இவர்கள் வாழைச்சேனை தொழில் பயிற்சி நிலையத்துக்கு வழியனுப்பி வைக்கப்பட்டனர்.

வெருகல், தம்பலகாமம், கந்தளாய், குச்சவெளி ஆகிய இடங்களைச் சேர்ந்தவர்களே இப்பயிற்சிக்குத் தெரிவாகியுள்ளனர்.

கந்தளாயில் தங்க நகைகளை திருடிய இருவருக்கு விளக்கமறியல்

கந்தளாய் தினகரன் நிருபர்

தங்கநகைகளைத் திருடிய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட இருவரை இம்மாதம் 20ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு, கந்தளாய் நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டது.

திருகோணமலை மாவட்டத்தின் கந்தளாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் 15 பவுண் நிறையுடைய தங்கநகைகளைத் திருடிய குற்றச்சாட்டில் இச்சந்தேக நபர்கள் இருவரும் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டனர்.

கந்தளாய் பகுதியைச் சேர்ந்த 34, 38 வயதுடைய இருவரே பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு, விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

கந்தளாய், வான்எல பகுதியிலுள்ள வீடொன்றினுள் புகுந்து, தங்கநகைகளைத் திருடிய இச்சந்தேக நபர்கள், அவற்றை நகைக் கடையொன்றில் விற்பனை செய்துள்ளனர்.

இது தொடர்பாக பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில், இச்சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டு நேற்று முன்தினம் (07) நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டனர்.

நிந்தவூர் பிரதேசத்தில் பல்வேறு பொதுப்பணிகள் முன்னெடுப்பு

நிந்தவூர் குறூப் நிருபர்

அம்பாறை மாவட்டத்தின் நிந்தவூர் பிரதேசத்தில் பல்வேறுபட்ட பொதுப்பணிகள், அப்பிரதேச இளைஞர் சேவை அதிகாரி எம்.ஐ.எம்.பரீட்டின் வழிகாட்டலின் கீழ் முன்னெடுக்கப்பட்டு வரப்படுகின்றன.

இலங்கையின் 75ஆவது தேசிய சுதந்திர தினத்தையொட்டியே இப்பொதுப்பணிகள் முன்னெடுக்கப்பட்டு வரப்படுகின்றன.

அந்த வகையில் கடந்த சில தினங்களில் வறுமைக் கோட்டுக்குக் கீழ் வாழும் மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

அத்துடன், சிரமதான நிகழ்வுடன் பயன்தரும் மரக்கன்றுகள் நடுகையும் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது நிந்தவூர் பிரதேச கடற்கரையோரம், பள்ளிவாசல்கள் சுத்தம் செய்யப்பட்டதுடன், பாடசாலைகளில் பயன்தரும் மரக்கன்றுகள் நடப்பட்டன. இப்பொதுப்பணிகளில் இராணுவத்தினர், நிந்தவூர் பிரதேச இளைஞர் கழக சம்மேளன உறுப்பினர்கள், சமுர்த்திப் பயனாளிகள், விளையாட்டுக்கழகங்களின் பிரதிநிதிகள், சமூக ஆர்வலர்கள் கலந்துகொண்டனர்.

வாகனங்கள் விற்பனைக்கு

வாகன இல.	வகை	மாதிரி	வருடம்
கார்			
GC -1XXX	MAZDA	FAMILIA	1998
CAK -0XXX	HONDA	DAA-GM4 GRACE	2015
லொறி			
227 -2XXX	TOYOTA	DYNA 150	1992
68 -6XXX	TOYOTA	TOYOACE	1994
LH -8XXX	FOTON	BJ1036V3JB3-R	2008
PV -9XXX	TATA	ACE EX	2013
PY -3XXX	TATA	ACE EX2	2014
PX -5XXX	MAHINDRA	MAXXIMO PLUS	2014
DAA -8XXX	TATA	SUPER ACE	2015
பஸ்			
NC -3XXX	LANKA ASHOK LEYLAND	MITR	2015
முச்சக்கர வண்டிகள்			
GA -0XXX	BAJAJ	BAJAJ AUTO	2000
HN -6XXX	BAJAJ	AUTO RE 2 STROKE	2003
QA -0XXX	BAJAJ	AUTO RE 2 STROKE	2005
QC -9XXX	BAJAJ	AUTO RE 2 STROKE	2005
QD -6XXX	BAJAJ	AUTO RE 2 STROKE	2005
QJ -4XXX	BAJAJ	AUTO RE 2 STROKE	2007
QN -7XXX	BAJAJ	AUTO AR4S	2007
QQ -5XXX	BAJAJ	AUTO AR4S	2008
QS -6XXX	BAJAJ	BAJAJ 4S	2009
QU -3XXX	BAJAJ	BAJAJ 4 S	2009
QV -5XXX	BAJAJ	BAJAJ 4 S	2009
AAB -1XXX	BAJAJ	RE 205	2012
AAU -1XXX	BAJAJ	RE	2014
ABD -4XXX	BAJAJ	RE	2015

வாகன பரிசீலித்தல்களுக்கு:
மெர்கன்டைல் இன்வெஸ்ட்மென்ட்ஸ் அன்ட் பினான்ஸ் பீஎல்சீ
வாகன முற்றம் - இல.176, வாவி வீதி, மஹரகம.
தொ.பேசி : 0112 088 505

வாகன பரிசீலித்தல்களுக்கான திகதிகள்

மேற்குறிப்பிட்ட விலாசத்தில் 2023 பெப்ரவரி 9ஆம், 10ஆம், 13ஆம் மற்றும் 14ஆம் திகதிகளில் மு.ப.9.00 முதல் பி.ப.5.00 வரை பரிசீலிக்க முடியும். (கேள்விகள் ஏற்றுக் கொள்ளப்படுவது 2023 பெப்ரவரி 14ஆம் திகதி பி.ப.5.00 மணியுடன் நிறைவுபெறும்)

மீளப் பெற முடியாத கட்டணமான ரூ.200/-ஐ செலுத்தி கேள்வி படிவங்களை மேற்குறித்த விலாசத்தில் மெர்கன்டைல் இன்வெஸ்ட்மென்ட்ஸ் அன்ட் பினான்ஸ் பீஎல்சீ வாகன முற்றத்தில் இருந்து பெற்றுக்கொள்ளலாம். வெற்றிகரமான கேள்விதாரர் தொலைபேசியூடாக அறிவிக்கப்படுவதுடன் அதனுடன் தொடர்பான வாகனம் அறிவிக்கப்பட்டதிலிருந்து 7 நாட்களுக்குள் அப்புறப்படுத்தப்பட வேண்டும்.
கேள்வியிலிருந்து எந்தவொரு காரணத்தையும் கூறாமல் எந்தவொரு வாகனத்தையும் விலக்கிக் கொள்ள கம்பனிக்கு பூரண உரிமையுண்டு. அத்தோடு வெற்றிகரமான கேள்விதாரர் வாகனத்தை அதன் தற்போதைய நிலையிலேயே பொறுப்பேற்க வேண்டியதோடு, அதனுடன் தொடர்பான அரச வரி மற்றும் வாகன வருமான உத்தரவுப் பத்திரம் போன்றவற்றின் நிலுவைக் கட்டணங்கள் இருப்பின் அவற்றையும் கேள்விதாரரே பொறுப்பேற்க வேண்டும்.

இக் கேள்விகள் தொடர்பான மெர்கன்டைல் இன்வெஸ்ட்மென்ட்ஸ் அன்ட் பினான்ஸ் பீஎல்சீ இன் முடிவுகளே இறுதியானதாகும்.

www.skillsads.com

மெர்கன்டைல் இன்வெஸ்ட்மென்ட்ஸ் அன்ட் பினான்ஸ் பீஎல்சி
தலைமை அலுவலகம்
236, காலி வீதி, கொழும்பு - 03
தொ.பேசி: 2343720 - 7 நீட்சி: 210
Mercantile Investments and Finance PLC

தொடர்பு:
ஜானக்க - 071 1624559 / மொதித - 071 9530350

அஸ்-ஸுஹரா வித்தியாலயத்தில் பயன்தரும் மரக்கன்றுகள் நடுகை

சாய்ந்தமருது விசேட நிருபர்

இலங்கையின் 75ஆவது சுதந்திர தினத்தையொட்டி கல்முனை கமு/கமு/ அஸ்ஸுஹரா வித்தியாலயத்தில் பயன்தரும் மரக்கன்றுகள் நடுகை நேற்று முன்தினம் (07) மேற்கொள்ளப்பட்டது.

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் 'இளைஞர்களின் பங்களிப்புடன் தூய்மை மற்றும் பசுமையான இலங்கை' எனும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ், இம்மரக்கன்றுகள் நடுகை மேற்கொள்ளப்பட்டு வரப்படுகின்றது.

இதில் மேற்படி பாடசாலை அதிபர் எம்.எச்.எஸ்.ஆர்.மஜீதியா, ஆசிரியர்கள், மாணவர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டு மரக்கன்றுகள் நடுகையில் ஈடுபட்டனர்.

எமது எதிர்கால சந்ததியினருக்கு...

(05ஆம் பக்கத் தொடர்)

இன்று இந்த நாட்டில் உள்ள பலருக்கு இன்று நாடு அடைந்துள்ள நீளம் – அகலம் – ஆழம் புரிவதில்லை. அது நாம் அனைவரும் வாழ்நாளில் இவ்வாறான ஓர் அபாயத்தை மற்றும் பாரதூரமான நெருக்கடிக்கு முகம் கொடுக்காமையினால் ஆகும். இந்த நெருக்கடியிலிருந்து விரைவாக மீளுவதற்கு நாம் அனைவரும் ஒன்றாக இணைய வேண்டுனெ நான் மீண்டும் வலியுறுத்துகின்றேன்.

நான் ஏற்கனவே குறிப்பிட்ட அனைத்துக் குழுக்களும் தற்போது தம்மை அர்ப்பணித்துள்ளார்கள். சுமைகளைத் தாங்குகின்றார்கள். இடர்களை எதிர்கொள்கின்றார்கள். ஆகவே நாம் பொருளாதாரத்தை மீண்டும் மேலுயர்த்திய பின்னர் கிடைக்கும் நன்மைகள் அனைத்தையும் அவர்களுக்கு வழங்குதல் வேண்டும். அவர்கள் பொருளாதார அபிவிருத்தியின் சிறந்த பெறுபேறுகளின் பங்குதாரர்களாக அமைதல் வேண்டும்.

இந்த சமூக நீதியை நடைமுறைப்படுத்துவதற்காக நாம் சமூக நீதிக்கான ஆணைக்குழுவை தாபிக்க எதிர்பார்க்கின்றோம். எதிர்வரும் 25 ஆண்டுகளுக்கான புதிய கொள்கைச் சட்டகத்தை இந்த சமூக இணக்கப்பாட்டை அடிப்படையாக கொண்டு உருவாக்குவோம். .

இறுதியாக எனக்கு மற்றுமொரு விடயத்தை ஞாபகப்படுத்த முடியும். அரசுக்கும் அரசாங்கத்துக்கும் இடையிலான வேறுபாட்டினை நாம் புரிந்து கொள்வோம். இலங்கை அரசைப் பாதுகாப்பதற்கு நாம் அனைவரும் கட்டுபட்டுள்ளோம். தேர்தல்களின் போது ஜனநாயக ரீதியில் அரசாங்கங்களை மாற்றியமைக்கும் சந்தர்ப்பம் எல்லோருக்கும் உண்டு. ஆனாலும் இலங்கையை அராஜகமாக்குக்ம் உரிமை ஒருவருக்கும் இல்லை. எந்தவொரு அரசியல் கட்சிக்கும் இல்லை. எந்தவொரு குழுவுக்கும் இல்லை. எமது தாய்நாட்டை பொருளாதார அல்லது சமூக காலனித்துவமாக மாற்றுவதற்கு இடமளிக்க முடியாது. அராஜக நிலைக்கு இட்டுச்செல்ல இடமளிக்க முடியாது. நாட்டை உண்மையாக நேசிக்கும் எந்தவொரு நபரும் அதற்கு இடமளிக்க மாட்டார்கள். நாம் அனைவரும் நாட்டை நேசிக்கும் தரப்பில் இருக்க வேண்டுமே தவிர நாட்டை அராஜக நிலைக்கு இட்டுச் செல்லும் தரப்புடன் அல்ல.

கடந்த ஞாயிறு சன்டே டைம்ஸ் பத்திரிகையில் இளைஞர் யுவதிகள் சிலர் முன்வைத்த சில கருத்துக்கள் பற்றி நாம் இதற்கு முன்னர் கவனம் செலுத்தினோம். எனது உரையை நிறைவு செய்வதற்கு முன்னர் கிளிபேர்ட் பிரணாந்து முன்வைத்த மற்றுமொரு கருத்து தொடர்பில் நான் உங்களுடைய அவதானத்தைச் செலுத்த விரும்புகின்றேன்.

"I hope the political leaders will get their act together – they have failed miserably. Leaders should have the ability to lead by example if they expect people to follow. Sri Lankans are very resilient and will buckle up and do what it takes to come out of the present crisis. If the leaders could act wisely, use some common sense and put their words to action, we will be able to manoeuvre through these challenging times"

"அரசியல் தலைவர்கள் ஒன்றிணைந்து செயற்படுவார்களென நான் எதிர்பார்க்கின்றேன். அவர்கள் தற்போது துரதிஷ்டவசமாக தோல்வியடைந்துள்ளார்கள். மக்கள் அவர்களைப் பின்பற்ற வேண்டுமென எதிர்பார்ப்பதாயின் அவர்கள் முன்மாதிரியாக செயற்படல் வேண்டும். நெகிழும் தன்மையுடைய இலங்கையர்களுக்கு தற்போதைய நெருக்கடியில் இருந்து மீளுவதற்கான தாங்கும் சக்தி உள்ளது. தலைவர்கள் அறிவுடைவர்களாக மற்றும் சுயபுத்தியுடன் தாம் கூறுகின்றவற்றை நடைமுறைப்படுத்தினால், தந்திரோபாய ரீதியாக இந்த சவால்மிக்க காலத்தை எம்மால் வெற்றிகொள்ள முடியும்."

நாட்டைப் பற்றி எதிர்பார்ப்புடன் உள்ள நாட்டை விட்டு வெளியேறுவதற்கு எண்ணியுள்ள இந்த மாணவ மாணவிகளின், இந்த இளைஞர் யுவதிகளின் எதிர்பார்ப்புக்களை வெற்றியடையச் செய்தல் இந்த சபையில் உள்ள நம் அனைவரதும் பொறுப்பு ஆகும். ஜனநாயக கருத்துக்கள் ஊடாக முன்னோக்கிச் செல்வோம். நாடு அடைந்துள்ள கவலைக்கிடமான நிலையில் இருந்து மீட்டெடுப்பதற்கு உயர்ந்தபட்ச ஒத்துழைப்பினை வழங்குவோம். அரசியல் நோக்கங்கள் பற்றி சிந்திக்க வேண்டுமாயின் நாட்டை இந்த நெருக்கடியிலிருந்து மீட்டெடுத்த பின்னர் அது பற்றி சிந்திப்போம்.

கௌதம புத்த பெருமான் இவ்வாறு போதித்தார்.

"நீங்கள் உங்களுக்கே விளக்காக இருங்கள்"

அந்த அறிவுரையினை ஏற்றுக்கொண்டு நாம் எமக்கே விளக்காக இருப்போம்.

அப்போதுதான் முழுநாட்டையும் வெளிச்சமாக்க முடியும்.

சியபத பினான்ஸ்
சியபத பினான்ஸ்
Siyapatha Finance
(Finance Company of Sampath Bank Group)

மீட்கப்படாத தங்க நகைகளை ஏலத்தில் விற்பனை செய்தல்

சியபத பினான்ஸின் கீழ்க்காணும் கிளை மத்தியஸ்தானங்களில் 2022 செப்டம்பர் 30ம் திகதி வரை அடகுவைக்கப்பட்டு இதுவரை மீட்கபடாத தங்க நகைகள் கீழ்க்குறிப்பிட்ட திகதியில் பொது ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

ஏலவிற்பனை 2023 பிப்ரவரி 23ம் திகதி மு.ப 9.30க்கு நடைபெறும்.

கிளை / மத்தியஸ்தானம்	மீட்கப்பட வேண்டிய கால எல்லை	ஏலவிற்பனை நடைபெறும் இடம்
கண்டி-கட்டுகஸ்தோட்ட, மாத்தறை, அம்பாறை, நுவரெலிய, நீர்க்கொழும்பு, குருணாகலை, பேலியகொட, நுகேகொட, சாய்ந்தமருது, அநுராதபுரம், இரத்தினபுரி, கேகாலை, குளியாபிட்டிய, வவுனியா, குருணாகலை-நகர், கண்டி - கந்த வீதி, கல்முனை, அவிஸ்சாவெல்ல, மட்டக்களப்பு, கம்பஹா, களுத்தறை, திருகோணமலை, வெள்ளவத்தை, காலி, பாணதுறை, கிரிபத்கொட, மஹரகம, வத்தளை, ஹட்டன், பிலியந்தல, சிலாபம், மொரட்டுவ, புறக்கோட்டை , யாழ்ப்பாணம், கொஹுவல நிட்டம்புவ, மாலபே. மாத்தளை மற்றும் தம்புன்னை	2022 செப்டெம்பர் 30ம் திகதிக்கு முன் மீட்கபடாத தங்க நகைகள்	சியபத பினான்ஸ், தலைமை காரியாலயம், இல 111, டட்லி சேனாநாயக்க மாவத்தை, கொழும்பு 08

ஏலவிற்பனையை நிராகரித்தல், பிற்போடுதல் மற்றும் வேறொரு கிளையுடன் ஒன்றிணைந்து நடாத்துதல் ஆகிய உரிமைகள் சியபத பினான்ஸ் பி.எல்.சி வசம் உள்ளன.

பதிவு இலக்கம்: PB 917PQ

தலைமை அதிகாரி
சியபத பினான்ஸ் பீஎல்சீ
இல 111, டட்லி சேனாநாயக்க மாவத்தை, கொழும்பு 08

இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசு

வனசீவராசிகள் மற்றும் வன பாதுகாப்பு அமைச்சு

வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம்

திருத்தம் பற்றிய அறிவித்தல்

2023-01-24ஆம் திகதிய தினமின, டெய்லி நியூஸ் மற்றும் தினகரன் எனும் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட விளம்பரத்தில் பின்வருமாறான திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

- 01ஆம் இலக்க விலைக்கோரலில் குறிப்பிடப்பட்டுள்ள பொறியியல் மதிப்பீட்டுப் பெறுமதி 17.7 மில்லியன் ரூபா வெட் வரி சகிதம் எனத் திருத்தப்படல் வேண்டும்.
- 09ஆம் இலக்க விலைக்கோரலில் குறிப்பிடப்பட்டுள்ள விலைமனு திறக்கப்படுதலானது 2023-02-21ஆம் திகதி பி.ப. 2.30 மணி மேற்கொள்ளப்படும் எனத் திருத்தப்பட்டுள்ளது.

தலைவர்,
பெறுகைக் குழு,
வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம்,
இல. 811/ஏ, ஜயந்திபுர வீதி,
பத்தரமுல்ல.

எட்டியந்தோட்டை பிரதேச சபை

பெறுகை அறிவித்தல்

எட்டியந்தோட்டை புதிய வாரச் சந்தையின் மீன் கடையை 2023ஆம் ஆண்டில் குத்தகைக்கு விடுவதற்காக 2023.02.21 அன்று மு.ப. 10.00 வரை என்னால் கேள்விகள் கோரப்படுகின்றன.

இதற்கான நிபந்தனைகளையும் விபரக் குறிப்புக்களையும் எட்டியந்தோட்டை பிரதேச சபையில் பெற்றுக்கொள்ளலாம்.

தொலைபேசி இலக்கம்: 036 2270237

உத்தியோக இணையதளம்: www.yatiyantota.ps.gov.lk

கே.டீ. வசன்த
தலைவர்
எட்டியந்தோட்டை
பிரதேச சபை.

The Housewives' companion
Classifieds on
Daily News

தேசிய மன நல நிறுவனம்
முல்லேரியாவ புதிய நகரம்

கேள்வி அழைப்பு

01. தேசிய மனநல நிறுவனத்தின் கீழ்க்காணும் உருப்படிகளை கொள்வனவு செய்வதற்காக முன் தகைமையுடைய கேள்விதாரர்களிடமிருந்து பொறியிடப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

தொடர் இல.	பெறுகை இலக்கம்	உருப்படி	அளவு	மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணம்
01	NIMH/ACC/FB/1/7/23	ரெக்சீன் மெத்தை	250	ரூ. 1,000.00

02. கேள்வி கோரல் தேசிய போட்டி கேள்வி கோரலின் கீழ் நடைபெறும்.

03. இதற்காக ஆர்வம் காட்டுகின்ற கேள்விதாரர்களுக்கு கேள்வி ஆவணங்களை 2023.02.28 அரச வேலை அலுவலக நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 4.00 வரை முல்லேரியாவ புதிய நகரம், தேசிய மனநல நிறுவன கணக்குப் பிரிவில் இலவசமாக பரீட்சிக்கலாம்.

04. கேள்வி ஆவணங்கள் ஆங்கில மொழியில் தயாரிக்கப்பட்டுள்ளதுடன் மு.ப. 9.00 முதல் பி.ப. 2.30 வரை 2023.02.28 வரை பணிப்பாளர், தேசிய மனநல நிறுவனத்தின் பெயரில், குறித்த நிறுவனத்தின் கடிதத் தலைப்பில் மேற்கொள்ளப்படும் எழுத்துமூல வேண்டுதல், மீளளிக்கப்படாத வைப்புத் தொகையை திணைக்களத்தின் காசாளர் பிரிவில் செலுத்திய பின்பு பெற்றுக்கொள்ளலாம்.

05. கேள்விப் பிணை முறி கேள்வி ஆவணங்களில் குறிப்பிடப்படும் நிறுவனங்களிலிருந்து மற்றும் பெறுமதிக்கு தரப்பட்டுள்ள திகதி வரை செல்லுபடியாகுமாறு சமர்ப்பித்தல் வேண்டும். அதனை காசாகச் செலுத்துவதாயின் காசாளரிடம் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டின் பிரதியை இணைத்தல் வேண்டும். கேள்வி ஆவணங்களுடன் கேள்விப் பிணையை சமர்ப்பித்திராத கேள்விப் பத்திரங்கள் நிராகரிக்கப்படும்.

06. பூர்த்தி செய்யப்பட்ட கேள்வி ஆவணங்களை மூலப் பிரதி மற்றும் நகல் பிரதியென வேறுவேறாக கடித உறைகளில் இட்டு, உறையில் இடது பக்க மேல் மூலையில் "ரெக்சீன் மெத்தை கொள்வனவு செய்தல்" என மற்றும் பெறுகை இலக்கத்தைக் குறிப்பிட்டு 2023.03.01 பி.ப. 1.45 இற்கு முன் கீழ்க்காணும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அல்லது பணிப்பாளர் பணிமனையில் வைக்கப்பட்டுள்ள கேள்வி உள்ளிடும் பெட்டியில் உள்ளிடமுடிவதுடன், தாமதமாகக் கிடைக்கும் கேள்விப் பத்திரங்கள் நிராகரிக்கப்படும். கேள்விகள் திறத்தல் அன்றே (2023.03.01) பி.ப. 2.00 இற்கு இடம் பெறுவதுடன், அதற்காக உங்களுக்கு அல்லது உங்களது அதிகாரம் அளிக்கப்பட்ட பிரதிநிதிக்கு சமுகமளிக்கலாம்.

07. கேள்விப் பத்திரங்கள் பற்றிய மேலதிக விபரங்களை, 0112-578234 (நீடிப்பு இல. - 406/404) தொலைபேசி மூலம் தேசிய மனநல நிறுவனத்தின் கணக்காளரை அழைத்து பெற்றுக்கொள்ளலாம். கேள்விப் பத்திரங்கள் பற்றிய தீர்மானம் எடுக்கும் உரிமை பிரதேச பெறுகைக் குழுவிற்கு உரித்தாவதுடன், இவ்அறிவித்தலில் அல்லது கேள்வி மாதிரிகளில் குறிப்பிடப்படும் அல்லது குறிப்பிடப்படாத இப் பெறுகை விடயங்களுடன் சம்பந்தப்பட்ட ஏதேனும் விடயங்கள் பற்றிய தீர்மானம் எடுக்கும் அதிகாரம் தேசிய மனநல நிறுவன பணிப்பாளருக்கு உரியது.

08. கேள்விப் பத்திரங்கள் தயாரித்தல் பற்றி, ஏற்படும் எந்தச் செலவுகளுக்கும், தலைவர், பிரதேச பெறுகைக் குழுவினால் பொறுப்புக் கூறப்பட மாட்டாது.

தலைவர்,
பிரதேச பெறுகைக் குழு,
தேசிய மனநல நிறுவனம்,
முல்லேரியாவ புதிய நகரம்.

இலங்கை சனநாயக சோசலிச குடியரசு
பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு
விசேட அதிரடிப்படை
(இலங்கை பொலிஸ்)

விலைமனுக்கோரல் (IFB)

01. பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு, 14வது மாடி, "சுஹுருபாய", ஸ்ரீ சுபூதிபுர வீதி, பத்தரமுல்ல, இலங்கை அமைச்சின் பெறுகை குழு, தலைவரினால் பின்வரும் பொருட்களை வழங்குவதற்கு தகுதியான மனுதாரர்களிடமிருந்து மனுக்கள் கோரப்படுகின்றது.

தொடர் இல.	ஒப்பந்தத்தின் பெயர்	விபரம்	அளவு	மனு ஆவணக் கட்டணம் ரூ.	மதிப்பீட்டு மனுப்பிணைப் ரூ.
1.	PS/03/PB/PR/08/21/2022	ஐக்கிய நாடுகளின் அமைதி காக்கும் போலீஸ் அணிதிரட்டல் கடமைகளுக்காக வெடிமருந்து கொள்முதல் செய்தல்	பட்டியலின் படி	45,000.00	3,700,000.00
2.	PS/03/PB/PR/08/02/2023	ஐக்கிய நாடுகளின் அமைதி காக்கும் போலீஸ் அணிதிரட்டல் கடமைகளுக்காக புதிய 4x4 Truck Fuel Tanker (8000 லீட்டர்) வாகனங்களை கொள்முதல் செய்தல்	01	10,500.00	450,000.00
3.	PS/03/PB/PR/08/03/2023	ஐக்கிய நாடுகளின் அமைதி காக்கும் போலீஸ் அணிதிரட்டல் கடமைகளுக்காக புதிய Single Cab வாகனங்களை வாங்குதல் செய்தல்	04	16,500.00	990,000.00
4.	PS/03/PB/PR/08/04/2023	சிறப்பு அதிரடிப்படையினருக்கு உருவமறைப்பு சீருடைகளை வாங்குதல்	5000	14,000.00	600,000.00

02. மனுகோரல்கள் தேசிய மனு கோரல் போட்டி முறைக்கமைய நடைபெறும்.

03. இதற்காக ஆர்வம் காட்டும் தகுதியான மனுதாரர்கள் மேலதிக தகவல்களை பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு, 14வது மாடி, "சுஹுருபாய", ஸ்ரீ சுபூதிபுர வீதி, பத்தரமுல்ல, கணக்காளர் (பெறுகை) அவர்களிடம் பெற்றுக்கொள்ளவதுடன், **2023.02.10 ஆம் திகதி முதல் 2023.03.13 ஆம் திகதி வரை** பொது மற்றும் வங்கி விடுமுறை நாட்கள் தவிர்ந்த வார நாட்களில் **மு.ப. 09.00** மணி முதல் **பி.ப. 03.00** மணி நேரம் வரை அதே முகவரியில் அல்லது எமது உத்தியோகபூர்வ இணையத்தளத்தில (**www.pubsec.gov.lk**) மனு ஆவணங்களை இலவசமாக பரிசீலனை செய்ய முடியும்.

04. தகுதியான அனைத்து மனுதாரர்களும் பொருட்களை வழங்குவதற்கான சட்டப்பூர்வ உரிமையைப் பெற்றிருக்க வேண்டும். மனுதாரர் தனது நிறுவனத்தை வணிகமாக பதிவு செய்திருக்க வேண்டும், மேலும் உங்களால் சமர்ப்பிக்கப்பட்ட மனுவின் பெருமதி **ரூ.05 மில்லியனுக்கும்** அதிகமாயின் 1987 இலக்கம் 03 பொது ஒப்பந்த சட்டத்தின் கீழ் **(Public Contract Act)** பதிவு செய்யப்பட்டிருத்தல் வேண்டும். சமர்ப்பிக்கப்பட்ட மனுவுடன் இந்த பதிவுச்சான்றிதழின் நகல் பிரதிகள் இணைக்கப்படாதவிடத்து மனுக்கள் தகுதி நீக்கம் செய்யப்படும். மனுதாரரின் பெயர் அபகீர்த்தியாளர் பட்டியலில் இடம்பெற்றிருத்தல் கூடாது. மேலதிக விபரங்கள் மனு ஆவணத்துடன்

05. பின்வரும் முகவரியில் எழுத்துப்பூர்வ விண்ணப்பத்தை **2023.02.10** ஆம் திகதியிலிருந்து **2023.03.13** ஆம் திகதி வரை பொது மற்றும் வங்கி விடுமுறை நாட்களைத் தவிர வார நாட்களில் **மு.ப.09.00** முதல் **பி.ப.03.00** மணிவரை சமர்ப்பித்து இதற்காக ஆர்வம் காட்டும் மனுதாரர்களால் மேலே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள மீளச்செலுத்தப்படாத ஆவணக்கட்டணத்தைச் செலுத்தி அச்சிடப்பட்ட ஆங்கில மொழியிலான விண்ணப்பத்தை பெற்றுக்கொள்ள முடியும். ஒரு நிறுவனத்திற்கு மனுகோரல் விண்ணப்ப படிவம் ஒன்று மட்டுமே வழங்கப்படும்.

06. பூரணப்படுத்தப்பட்ட மனு ஆவணங்களை பிரதிகளுடன் **2023.03.14** ஆம் திகதி **பி.ப.02.00** மணிக்கு அல்லது அதற்கு முன்னர் 14வது மாடி, "சுஹுருபாய", ஸ்ரீ சுபூதிபுர வீதி, பத்தரமுல்ல, பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் நிதிப் பிரிவில் வைக்கப்பட்டுள்ள டென்டர் பெட்டியில் இடுதல் அல்லது மனுக்கள் திறக்கப்படும் நேரத்திற்கு முன்னர் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். மனுக்கள் இடப்பட்டுள்ள உறையின் இடது பக்கமேல் மூலையில் ஒப்பந்த இலக்கத்தினை தெளிவாக குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும். கால தாமதமாக கிடைக்கப்படும் மனுக்கள் நிராகரிக்கப்படும். மேலும் தனிப்பட்ட முறையில் சமுகமளிக்கும் மனுதாரர் அல்லது அவரது உரிமம் பெற்ற பிரதிநிதிக்கு முன்னிலையில் **2023.03.14** ஆம் திகதி **பி.ப.02.00** மணிக்கு மனுக்கள் திறக்கப்படும். மனுக்கள் ஏற்றுக்கொள்ளல் முடிவுற்ற பின்னர் மனுக்கள் திறக்கப்படும் வேளையில் பங்கேற்கும் மனுதாரரின் பிரதிநிதிகள் மனுதாரரிடமிருந்து எழுத்துப்பூர்வ அனுமதியை கட்டயாம் பெற்றுத்தல் வேண்டும். மனுதாரரின் எழுத்துப்பூர்வ அனுமதியை வழங்கத் தவறிய எந்த முகவரும் அச்சந்தர்ப்பத்தில் அனுமதிக்கப்பட மாட்டார்கள்.

07. சமர்ப்பிக்கப்பட்ட மனுக்களின் செல்லுபடியாகும் காலம் **91 நாட்கள்** வரையாகும்.

08. அனைத்து மனுக்களும், மனுப் பிணையுடன் சமர்ப்பிக்கப்பட வேண்டும், மேலும் சமர்ப்பிக்கப்பட்ட மனுப் பிணையானது பின்வரும் நிபந்தனைகளுக்கு உட்பட்டதாக இருக்க வேண்டும்.

i. ஒரு நிதி நிறுவனமாக மத்திய வங்கியில் பதிவு செய்யப்பட்ட ஒரு நிறுவனத்திடமிருந்து பெறப்பட்ட உத்தரவாதமாக இருத்தல் வேண்டும்.

ii. மனுப் பாதுகாப்புப் படிவம் மனு ஆவண தொகுப்பின் IV ஆம் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ள ஆவணத்தின்படி இருத்தல் வேண்டும்.

iii. மனு பிணையானது செயளாலர்,பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு **"Secretary / Ministry of Public Security"** எனும் பெயரில் இருத்தல் வேண்டும்.

iv. மனுப்பிணை **2023.03.14** ஆம் திகதி முதல் **2023.07.11** வரை செல்லுபடியானதாக இருத்தல் வேண்டும். (மனுக்கள் திறக்கப்படும் கால எல்லை **119 நாட்கள் வரை**)

09. **2023.02.22 ஆம் திகதி 14.00** மணிக்கு **பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு,** 14வது மாடி, "சுஹுருபாய", ஸ்ரீ சுபூதிபுர வீதி, பத்தரமுல்ல, விசேட அதிரடிப்படையின் கேட்போர்கூடத்தில் முன்மனுக் கூட்டம் நடைபெறும்.

10. வழங்கப்படும் நிதி ஒழுங்குமுறைகள் மற்றும் திறைசேரி சுற்றறிக்கைகளில் ஏதேனும் திருத்தங்களைச் செய்வதற்கான உரிமையை கொள்முதல் குழுவினருக்கு உண்டு. கொள்முதல் குழுவினால் எடுக்கப்படும் தீர்மானம் இறுதி தீர்மானமாக காணப்படும்.

11. மனுதாரர்களின் விசேட கவனத்திற்கு:

மனு ஆவணங்களை வழங்குவதில் தாமதம் ஏற்படுவதைத் தவிர்த்துக்கொள்ள **caminlofinance@gmail.com** மின்னஞ்சல் முகவரியைத் தொடர்பு கொள்ளவும் அல்லது **0112887916** என்ற தொலைநகல் இலக்கத்திற்கு தேவையான மனு ஆவணங்கள் பற்றிய தகவலை அனுப்பவும் மற்றும் முன் அறிவிப்பை வழங்கவும் வாடிக்கையாளருக்கு தெரிவித்துக்கொள்கின்றேன்.

12. மேலதிக விபரங்களை பின்வரும் முகவரியில் அல்லது தொலைபேசி எண்களினூடாக பெற்றுக்கொள்ளலாம்.

விலாசம் :-
தலைமை கணக்காளர்
14வது மாடி, "சுஹுருபாய",
ஸ்ரீ சுபூதிபுர வீதி,
பத்தரமுல்ல.

தொலைப்பேசி இலக்கம் :-
பிரதான - 011-2887328
பொது - 011-2886067
பெக்ஸ், - 011- 2887784/2887916

தலைவர்,
அமைச்சின் பெறுகை குழு,
பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு,
14வது மாடி, "சுஹுருபாய",
ஸ்ரீ சுபூதிபுர வீதி,
பத்தரமுல்ல.

பொது அறிவித்தல்

2007ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தின் 9ம் (01) பிரிவிற்குட்பட்ட அறிவித்தலாகும்.

கம்பனியின் பெயர்:
மென்டோ குரூப் (பீவீடீ) எல்டீடீ

கம்பனியின் இலக்கம்:
பிவி 00210431

பதிவு செய்யப்பட்ட முகவரி:
தநுக ஹவுஸ், வெலி வீதி, கபலான, கதமுவ, அஹங்கமை

செயலாளர்
எம்.என்.எசோசியாட்ஸ் மெநேஜ்மன்ட் சர்விசேஷ் (பிறைவட்) லிமிட்டட்
51, முன்றாம் ஒழுங்கை கட்டுகொடை, காலி

Repeat Your Ad For Better Offers

இலங்கை துறைமுக அதிகார சபை

விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

1. பின்வரும் பொருட்களுக்காக தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்களை இலங்கை துறைமுக அதிகார சபையின் சார்பில் திணைக்களப் பெறுகைக் குழுவின் தவிசாளர் கோருகிறார்.

கேள்வி இல.	கேள்வியின் பெயர்	கேள்விப் பிணைத் தொகை (ரூபா)	ஆவணக் கட்டணம் (VAT உள்ளடக் கப்பட்டுள்ளது)	முடிவுறுத்தல் திகதி மற்றும் நேரம்
CMS/LP/22/PT/17/062	02 Nos. GI Wire Rope 38 MM (6x24), 220M Coil	16,000.00	1,000.00	02.03.2023 பி.ப. 1.30 மணி
CMS/LP/22/PT/01/054	Cloth Polyester Brown Suiting - 7000 Meters for Year - 2023	63,000.00	1,000.00	02.03.2023 பி.ப. 1.30 மணி
CMS/LP/22/PT/01/055	T - Shirts (Colour With Logo) - 7600 Nos for Year 2023	98,800.00	1,000.00	02.03.2023 பி.ப. 1.30 மணி
CES/LP/22/PT/01/058	Marine Paints and Thinners for TUNAC Tug	40,000.00	1,000.00	03.03.2023 பி.ப. 1.30 மணி
CMS/LP/22/PT/10/063	02 Nos. Rotary Actuator HS 14	28,000.00	1,000.00	03.03.2023 பி.ப. 1.30 மணி

2. 5 மில்லியன் ரூபாவிற்கு மேற்படும் கேள்விகளுக்கு 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் ஏற்பாடுகள் பிரயோகிக்கப்படும் என விலைமனுதாரர்கள் இத்தால் அறிவுறுத்தப்படுகிறார்கள். இதற்கமைய சகல தரப்பினரும் மேற்குறிப்பிட்ட ஒவ்வொரு கேள்வியின் பொருட்டும் ஒப்பந்தக் காலப்பகுதியில் கூறப்பட்ட சட்டத்தை கண்டிப்பாக பின்பற்றுதல் வேண்டும். மேலும் யாராவது விலைமனுதாரர் ஒரு முகவராகவோ, உப முகவராகவோ, ஒரு பிரதிநிதியாகவோ அல்லது யாராவது வெளிநாட்டு உற்பத்தியாளரின் சார்பில் பெயர் குறிப்பிடப்பட்டவராகவோ அல்லது வழங்குநரோ தம்மை பொது ஒப்பந்தங்கள் பதிவாளரிடம் பதிவு செய்து கொள்ளும்படி வேண்டப்படுவதோடு முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட பதிவுச் சான்றிதழை கேள்வி ஆவணங்களுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.
3. விலைமனுதாரர்கள் மேற்குறிப்பிட்டவைகளுக்கு நிகரான பொருட்களை வழங்கும் வியாபாரத்தில் ஆகக் குறைந்தது ஐந்து (5) வருடங்கள் ஈடுபட்டிருத்தல் வேண்டும்.
4. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிகத் தகவல்களை பிரதம பொறியியலாளர் (வழங்கல்கள்) இடம் பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் விலைமனு ஆவணங்களை பின்வரும் முகவரியில் அலுவலக நேரங்களில் பரீட்சித்துப் பார்க்கலாம்.
5. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் 4ம் நிரலில் குறித்துரைக்கப்பட்டுள்ள மீளளிக்கப்படாத கட்டணத்தைச் செலுத்தியதன் பின் 2023 பெப்ரவரி 10ஆம் திகதி தொடக்கம் வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையான நேரத்தில் முடிவுறுத்தப்படும் திகதிக்கு முதல் நாள் வரை பின்வரும் முகவரிக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம் ஆங்கில மொழியிலான விலைமனு ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம். கொடுப்பனவுகள் காசாகச் செலுத்தப்படல் வேண்டும்.
6. விலைமனுக்கள் பின்வரும் முகவரிக்கு இறுதி நேரம் அல்லது அதற்கு முன்னர் ஒப்படைக்கப்படல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கும் விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. விலைமனுக்கள் பின்வரும் முகவரியில் முடிவுறுத்தப்படும் வேளையில் நேரடியாகச் சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும். அனைத்து விலைமனுக்களுடனும் மேற்குறிப்படப்பிட்ட விலைமனுப் பிணையொன்று இணைக்கப்படல் வேண்டும்.

பிரதம பொறியியலாளர் (வழங்கல்கள்),
வழங்கல்கள் பிரிவு,
இலங்கை துறைமுக அதிகார சபை,
இல. 45, லேடன் பஸ்தியன் வீதி, கொழும்பு-01.
தொலைபேசி எண்கள்: 2482231, 2483338, 2482499, 2482832, 2482409, 2482652, 2483024, 2482638
தொலைநகல் எண்: 2381652, 2470443

To Buy Your Dream Vehicle within your Budget
If it is a vehicle you want,
YOU NAME IT, WE HAVE IT
Sunday Observer adz Auto Focus

THE ONLY PLACE TO BUY YOUR DREAM CAR!
Sunday Observer adz

- Auto Focus
Magazine Issued with Sunday Observer
Hot Line 011 2 429 369 011 2 429 368
E-mail adzsuo@gmail.com

கேள்வி மனுக் கோரல்

ලංකා විදුලිබල මණ්ඩලය
இலங்கை மின்சார சபை
CEYLON ELECTRICITY BOARD

1	2	3	4	5	6
பிராந்தியம்	கேள்வி இல. பொருட்களது விபரம் - தொகை	விலைமனுக் கோரல் முடிவு திகதி	விலைமனு ஆவணம் பெறும் இடமும் தொ.பே. இலக்கமும்	விலைமனு ஆவண விலை (ரூபா)	கேள்வி விபரம் ICB NCB
			சேவைகள்		
பிராந்தியம்-02 கிழக்கு	**DGM(E)/QPPC/23/015** வாடகைக்கு வான் மின் அத்தியட்சகர் - I (திட்டமிடல்)- பிரதிப் பொது முகாமையாளர் (கிழக்கு) அலுவலகம், திருகோணமலை (இரண்டு வருட காலம்)	22-02-2023 ம் திகதி பி.ப.2.00 மணி	பிரதிப் பொதுமுகாமையாளர் (கிழக்கு) அலுவலகம், திருகோணமலை 026-2222666, 026-2221030	1000.00	NCB
பிராந்தியம்-02 கிழக்கு	**DGM(E)/QPPC/23/016** வாடகைக்கு 4WD டபிள் கப் மின் அத்தியட்சகர் - III (விநியோக பராமரிப்பு பிரிவு) திருகோணமலை (இரண்டு வருட காலம்)	22-02-2023 ம் திகதி பி.ப.2.00 மணி	பிரதிப் பொதுமுகாமையாளர் (கிழக்கு) அலுவலகம், திருகோணமலை 026-2222666, 026-2221030	1000.00	NCB
பிராந்தியம்-02 கிழக்கு	**DGM(E)/QPPC/23/017** வாடகைக்கு வான் - மின் அத்தியட்சகர் - III (விநியோக பராமரிப்பு பிரிவு)- அம்பாறை (இரண்டு வருட காலம்)	22-02-2023 ம் திகதி பி.ப.2.00 மணி	விநியோக பராமரிப்பு பிரிவு அலுவலகம்,(அம்பாறை) 063-2222266 அல்லது பிரதிப் பொதுமுகாமையாளர் (கிழக்கு) அலுவலகம், திருகோணமலை 026-2222666, 026-2221030	1000.00	NCB
பிராந்தியம்-02 கிழக்கு	**DGM(E)/QPPC/23/018** வாடகைக்கு வான் மின் அத்தியட்சகர் - II (விநியோக கட்டுமான பிரிவு)– அம்பாறை (இரண்டு வருட காலம்)	22-02-2023 ம் திகதி பி.ப.2.00 மணி	விநியோக கட்டுமான பொறியியலாளர் அலுவலகம், அம்பாறை 063-2222440 அல்லது பிரதிப் பொது முகாமையாளர் (கிழக்கு) அலுவலகம், திருகோணமலை 026-2222666. 026-2221030	1000.00	NCB
பிராந்தியம்-02 கிழக்கு	**DGM(E)/QPPC/23/019** வாடகைக்கு வான் மின் அத்தியட்சகர் (நிந்தவூர் மின் பாவனையாளர் சேவை நிலையம்)–கல்முனை (இரண்டு வருட காலம்)	22-02-2023 ம் திகதி பி.ப.2.00 மணி	பிரதேச பிரதம மின் பொறியியலாளர் அலுவலகம்,கல்முனை 067-2229276 அல்லது பிரதிப் பொதுமுகாமையாளர் (கிழக்கு) அலுவலகம், திருகோணமலை 026-2222666, 026-2221030	1000.00	NCB
பிராந்தியம்-02 கிழக்கு	**DGM(E)/QPPC/23/020** வாடகைக்கு வான் மின் அத்தியட்சகர் (பிரதேச பராமரிப்புப் பிரிவு)-வாழைச்சேனை (இரண்டு வருட காலம்)	22-02-2023 ம் திகதி பி.ப.2.00 மணி	பிரதேச மின் பொறியியலாளர் அலுவலகம், வாழைச்சேனை 065-2258882 அல்லது பிரதிப் பொதுமுகாமையாளர் (கிழக்கு) அலுவலகம், திருகோணமலை 026-2222666, 026-2221030	1000.00	NCB
பிராந்தியம்-02 கிழக்கு	**DGM(E)/QPPC/23/021** வாடகைக்கு காணி - அம்பாறையில் அமைந்துள்ள மாகாண உப களஞ்சியசாலையில் மின்கம்ப தூண்களினை களஞ்சியப்படுத்துதல் (இரண்டு வருட காலம்)	22-02-2023 ம் திகதி பி.ப.2.00 மணி	பிரதிப் பொதுமுகாமையாளர் (கிழக்கு) அலுவலகம், திருகோணமலை 026-2222666, 026-2221030	500.00	NCB
பிராந்தியம்-02 கிழக்கு	**DGM(E)/QPPC/23/022** வாடகைக்கு கட்டிடம் (உகண மின் பாவனையாளர் சேவை நிலையம்)- அம்பாறை (இரண்டு வருட காலம்)	22-02-2023 ம் திகதி பி.ப.2.00 மணி	பிரதேச பிரதம மின் பொறியியலாளர் அலுவலகம், அம்பாறை 063-2222387, 063-2222078 அல்லது பிரதிப் பொது முகாமையாளர் (கிழக்கு) அலுவலகம், திருகோணமலை 026-2222666, 026-2221030	500.00	NCB
பிராந்தியம்-02 கிழக்கு	**DGM(E)/QPPC/23/023** வாடகைக்கு கட்டிடம் (அக்கரைப்பற்று மின் பாவனையாளர் சேவை நிலையம்)- அம்பாறை (இரண்டு வருட காலம்)	22-02-2023 ம் திகதி பி.ப.2.00 மணி	பிரதேச பிரதம மின் பொறியியலாளர் அலுவலகம்,அம்பாறை 063-2222387, 063-2222078 அல்லது பிரதிப் பொது முகாமையாளர் (கிழக்கு) அலுவலகம், திருகோணமலை 026-2222666, 026-2221030	500.00	NCB
பிராந்தியம்-02 கிழக்கு	**DGM(E)/QPPC/23/024** வாடகைக்கு கட்டிடம் (பொத்துவில் மின் பாவனையாளர் சேவை நிலையம்)- அம்பாறை (இரண்டு வருட காலம்)	22-02-2023 ம் திகதி பி.ப.2.00 மணி	பிரதேச பிரதம மின் பொறியியலாளர் அலுவலகம்,அம்பாறை 063-2222387, 063-2222078 அல்லது பிரதிப் பொது முகாமையாளர் (கிழக்கு) அலுவலகம், திருகோணமலை 026-2222666, 026-2221030	500.00	NCB
பிராந்தியம்-02 கிழக்கு	**DGM(E)/QPPC/23/025** வாடகைக்கு கட்டிடம் (சம்மாந்துறை மின் பாவனையாளர் சேவை நிலையம்)- கல்முனை (இரண்டு வருட காலம்)	22-02-2023 ம் திகதி பி.ப.2.00 மணி	பிரதேச பிரதம மின் பொறியியலாளர் அலுவலகம்,கல்முனை 067-2229276 அல்லது பிரதிப் பொதுமுகாமையாளர் (கிழக்கு) அலுவலகம், திருகோணமலை 026-2222666, 026-2221030	500.00	NCB
பிராந்தியம்-02 கிழக்கு	**DGM(E)/QPPC/23/026** வாடகைக்கு கட்டிடம் (ஏறாவூர் / செங்கலடி)மின் பாவனையாளர் சேவை நிலையம்)- வாழைச்சேனை (இரண்டு வருட காலம்)	22-02-2023 ம் திகதி பி.ப.2.00 மணி	பிரதேச மின் பொறியியலாளர் அலுவலகம், வாழைச்சேனை 065-2258882 அல்லது பிரதிப் பொதுமுகாமையாளர் (கிழக்கு) அலுவலகம், திருகோணமலை 026-2222666, 026-2221030	500.00	NCB
பிராந்தியம்-02 கிழக்கு	**DGM(E)/QPPC/23/027** வாடகைக்கு வான் பிரதிப் பொது முகாமையாளர் (கிழக்கு) அலுவலகம், திருகோணமலை (இரண்டு வருட காலம்)	22-02-2023 ம் திகதி பி.ப.2.00 மணி	பிரதிப் பொதுமுகாமையாளர் (கிழக்கு) அலுவலகம், திருகோணமலை 026-2222666, 026-2221030	1000.00	NCB
பிராந்தியம்-02 கிழக்கு	**DGM(E)/QPPC/23/028** வாடகைக்கு மோட்டார் கார் மின் பொறியியலாளர் (விநியோக பராமரிப்பு) - மட்டக்களப்பு (இரண்டு வருட காலம்)	22-02-2023 ம் திகதி பி.ப.2.00 மணி	விநியோக பராமரிப்பு மின் பொறியியலாளர் அலுவலகம், மட்டக்களப்பு 0652227761 அல்லது பிரதிப் பொது முகாமையாளர் (கிழக்கு) அலுவலகம், திருகோணமலை 026-2222666, 026-2221030	1000.00	NCB
பிராந்தியம்-02 கிழக்கு	**DGM(E)/QPPC/23/029** வாடகைக்கு வான் மின் அத்தியட்சகர் (சம்மாந்துறை மின் பாவனையாளர் சேவை நிலையம்) - கல்முனை (இரண்டு வருட காலம்)	22-02-2023 ம் திகதி பி.ப.2.00 மணி	பிரதேச பிரதம மின் பொறியியலாளர் அலுவலகம், கல்முனை 067-2229276 அல்லது பிரதிப் பொதுமுகாமையாளர் (கிழக்கு) அலுவலகம், திருகோணமலை 026-2222666, 026-2221030	1000.00	NCB

மேற்குறித்த பொருட்கள் வழங்கப்படல் தொடர்பாக வழங்குதாரர்களிடமிருந்து இலங்கை பிராந்தியம்-02 மின்சார சபை சார்பாக கொள்வனவுக் குழுவின் தலைவர் சர்வதேச/ தேசிய போட்டித்தன்மையுடன் கூடியதான விலைமனுக்களைக் கோருகின்றார். இலங்கை மின்சார சபையிலிருந்து கொள்வனவு செய்யப்பட்ட ஆவணங்களில் மாத்திரமே விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

விலைமனுக்கோர உத்தேசித்திருப்பவர் அல்லது அவரது அங்கீகாரம் பெற்ற முகவர்களுக்கு மாத்திரமே விலைமனு ஆவணங்கள் விநியோகிக்கப்படும். தேவைக்கேற்ப அவர்கள் 1987 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க பொது ஒப்பந்தச் சட்டத்திற்கேற்ப பதிவுசெய்துகொள்ளல் வேண்டும்.

விலைமனுக்கோரல் முடிவு திகதிக்கு இரண்டு தினங்கள் இருக்கும் வரை விலைமனு ஆவணங்கள் விலைமனுக்கோர உத்தேசித்திருப்பவர்கள் அல்லது அவர்களது முகவர்கள் மூலம் உரித்தான முறையில் இலங்கை மின்சார சபையின் பிரதிப் பொது முகாமையாளருக்கு/ பிரதம பொறியியலாளருக்கு எழுத்துமூலமாக விண்ணப்பித்து 5 ஆம் கூட்டில் குறிப்பிடப்பட்டுள்ள தொகையை வழங்குவதன் மூலம் கடமை நாட்களில் 09.00 மணிமுதல் 15.00 மணி வரையிலான காலப்பகுதிக்குள் ஆவணங்கள் பெற்றுக்கொள்ளலாம். பணமாகவோ இலங்கை மின்சார சபை பொது முகாமையாளர் சார்பாக வரையப்பட்ட வங்கி வரைவுப்பத்திரம் ஒன்றின் மூலமாகவோ கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படலாம்.

எழுத்து மூலமான விண்ணப்பமொன்றின் அடிப்படையில் வெளிநாட்டுத் தூதரகங்கள்/ வர்த்தக ஆணைக்குழுக்கள் என்பன இலவசமான முறையில் விலைமனுக்கோரல் ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளலாம். இ.மி.சபையின் உரித்தான பி.பொ.மு/ பிரதம பொறியியலாளர்களது அலுவலகங்களில் வைத்து உத்தேச விலைமனுதாரர்களினாலும் அவர்களது முகவர்களினாலும் விலைமனுக்கோரல் ஆவணங்கள் இலவசமாகப் பரிசீலிக்கப்படலாம்.

4 ஆம் கூட்டில் குறிப்பிடப்பட்டுள்ள இடத்தில் வைத்து விலைமனுதாரர்கள் மற்றும் அவர்களது முகவர்கள் முன்பாக விலைமனுக்கோரல் நேரம் முடிந்தவுடனேயே விலைமனுக்கள் திறக்கப்படும். காலம் பிந்திவரும் மனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனு ஆவணங்கள் விநியோகிப்பவர்களான இ.மி.சபை.பொ.மு/ பிரதம பொறியியலாளர் ஆகியோர்களிடமிருந்து விலைமனுக்கோரல் முடிவு திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்பாக அனைத்து விளக்கங்களும் பெற்றுக்கொள்ளப்படல் வேண்டும்.

*பொது முகாமையாளர்

வளமான வாழ்விற்கு மின்சாரம்

விலைமனு ஆவணத்தின் தகவல் பிரதியானது www.ceb.lk என்ற இ.மி.ச. கூட்டுரு இணையதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்யப்படலாம்.

இலங்கை வங்கி
BOC
தேசத்தின் வங்கியாளர்

இலங்கை வங்கி

ஏல விற்பனை அறிவித்தல்

1968ஆம் ஆண்டு 34ஆம் இலக்கச்சட்டத்தாலும் 1974ஆம் ஆண்டு 10ஆம் இலக்க அதிகாரச்சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறு இலங்கை வங்கி கட்டளைச்சட்டம் 22ஆம் பிரிவின் (397ஆம் அத்தியாயம்) கீழ் வெளியிடப்படும் அறிவித்தல்.

1. கடன் தொடர்பு இல : 79348849, 84371479

இல.233/2, ஹெய்யன்துடுவை, மாபிம, பியகம எனும் முகவரியிலுள்ள வரையறுக்கப்பட்ட எஸ்.பீ.ஜி.பி ஹோல்டிங்ஸ் லங்கா தனியார் நிறுவனத்தின் கடன் பொறுப்புகளுக்காக ஆதனத்தின் விற்பனை.

இலங்கை வங்கி கட்டளைச் சட்டம் 19ம் பிரிவின் கீழ் இலங்கை வங்கி பணிப்பாளர்கள் சபை எடுத்த தீர்மானத்துக்கமைய இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் 2022.09.09 ஆம் திகதியன்று 2297 ஆம் இலக்க வர்த்தமானியிலும் 2022.08.29ஆம் திகதி தினமின, தினகரன் மற்றும் டெய்லி நியூஸ் ஆகிய பத்திரிகைகளிலும் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கமைய நிலுவை முதலையும் விற்பனைத் திகதி வரை வருமதியாக உள்ள வட்டியையும் மேற்குறிப்பிட்ட கட்டளைச்சட்டத்தின் பிரிவு 26ன் கீழ் அறவிட வேண்டிய செலவு மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு இங்கு கீழ் அட்டவணையில் விபரித்த சொத்தையும் நிலமனையையும் இல.50/3, விஹார மாவத்தை, கொலன்னாவ என்னும் முகவரியைச் சேர்ந்த திருவாளர்கள் T&H ஒக்ஷன்ஸ் ஏலநிறுவனத்தின் ஏலதாரர் திரு.துசித்த கருணாரத்ன அவர்கள் 2023.03.20ஆம் திகதி மு.ப 11.00 மணிக்கு அதே இடத்தில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்வாரென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

மேற்குறிப்பிட்ட அட்டவணை

மேல் மாகாணம், கம்பஹா மாவட்டம், சியனே கோரளை, அதிகாரி பற்று, பியகம பிரதேச சபை எல்லையினுள் பியகம பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட மாபிம கிராம உத்தியோகத்தர் பிரிவில் 395 என்ற வரி மதிப்பீட்டு இலக்கத்துடன் கனேவெல்ல வீதி, மாபிமயில் அமைந்துள்ள 'கொடபரக்காவத்த' என அழைக்கப்படும் காணியின் உரிமம் பெற்ற நில அளவையாளர் கே.ஏ. ரூபசிங்ஹ தயாரித்த 2022 மார்ச் 31ஆம் திகதிய 247/2002ஆம் இலக்க வரைபடத்தில் விபரிக்கப்பட்டுள்ள பிரிக்கப்பட்டதும் எல்லை நிர்ணயிக்கப்பட்டதுமான காணித்துண்டு 3A என அடையாளமிடப்பட்ட காணி குறித்த வரைபடத்தின்படி வடக்கில் உரிமம் பெற்ற நில அளவையாளர் கேஜி ஹுபெட் பெரேரா தயாரித்த 1992 ஜனவரி 28ஆம் திகதிய 4916ஆம் இலக்க வரைபடத்தில் விபரிக்கப்பட்டுள்ள காணித்துண்டு 2ஐயும் கிழக்கில் வீதியாலும் (நெடுஞ்சாலைகள்) தெற்கில் 4916ஆம் இலக்க வரைபடத்தில் விபரிக்கப்பட்டுள்ள காணித்துண்டு 4ஐயும் மேற்கில் ரம்யா சாந்தனி அவர்கள் உரிமைகோரும் காணியையும் எல்லைகளாகக் கொண்டு ஒரு றூட் முப்பத்திரண்டு பேர்ச்சுகள் (ஏ0. றூ1. பே32) பரப்பளவுடன் 247/2002ஆம் இலக்க வரைபடத்தின்படி இக்காணியும் அங்குள்ள அனைத்தும் N239/98 எனும் இலக்கத்தின் கீழ் கம்பஹா காணிப்பதிவகத்தில் பதியப்பட்டுள்ளது.

ஏலவிலைகூறுபவர்கள் மேற்குறித்த ஆதனம்/ஆதனங்கள் தொடர்பான உரித்துறுதியையும் ஏனைய தொடர்புபட்ட ஆவணங்களையும் சிரேஷ்ட முகாமையாளர் அறவிடல் மற்றும் கடன் மேற்பார்வை பெருநகரக்கிளையில் பார்வையிட முடியும். தொலைபேசி இலக்கம் - 011-2329087

இலங்கை வங்கிப் பணிப்பாளர் சபைக் கட்டளைப்படி.

எஸ்.எஸ்.பீ. ஏகநாயக்க
சிரேஷ்ட முகாமையாளர்,
அறவிடல் மற்றும் கடன் மேற்பார்வை.

இலங்கை வங்கி,
பெருநகரக் கிளை.

மருத்துவ பட்டப்பின்படிப்பு நிறுவனம்
கொழும்புப் பல்கலைக்கழகம்

பெறுகை அறிவித்தல்

கொழும்பு பல்கலைக்கழகம், மருத்துவ பட்டப்பின்படிப்பு நிறுவனத்திற்கு தற்போதுள்ள Hardware Firewall இற்கு பிரதியீடாக மூன்று வருட காலத்திற்கு license subscription உடன் Hardware Firewall System ஐ வழங்குதல் நிறுவுதல், வடிவமைத்தல் மற்றும் இயக்குதல்.

விலைமனு இல. PGIM/GA/07/FW/2023

2023.02.23ம் திகதி பி.ப. 2.30 வரை கொழும்புப் பல்கலைக்கழகம், மருத்துவ பட்டப் பின்படிப்பு நிறுவனத்திற்கு தற்போதுள்ள Hardware Firewall இற்கு பதிலீடாக மூன்று வருட காலத்திற்கு license subscription உடன் Hardware Firewall System ஐ வழங்குதல் நிறுவுதல் வடிவமைத்தல் மற்றும் இயக்குவதற்காக பொறியிடப்பட்ட விலைமனுக்களை கொழும்புப் பல்கலைக்கழகம் மருத்துவ பட்டப்பின்படிப்பு நிறுவனம் சார்பாக திணைக்கள பெறுகைக் குழுவின் தலைவர் அழைக்கின்றார்.

விலைமனுக்கள் தேசிய போட்டி விலைமனுக்கோரல் (NCB) முறைமையின் ஊடாக நடத்தப்படும்

ஆர்வமுள்ள தகைமையான விலைமனுதாரர்கள் 2023.02.09 முதல் 2023.02.22 வரை மு.ப. 9.00 முதல் பி.ப. 3.30 வரை தொலைபேசி அல்லது மின்னஞ்சல் ஊடாக (தொ. பே. இல. 070 4702867/ 011 2688650/ மின்னஞ்சல் saradmin@pgim.cmb.ac.lk) PGIM இன் சிரேஷ்ட உதவிப் பதிவாளர்/பொது நிர்வாகம் இடமிருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

2023.02.09 முதல் 2023.02.22 வரை கணக்கு இல: 193413 சிறப்பு தரக்கிளை பொரள்ளை இலங்கை வங்கியின் PGIM கணக்கிற்கு ஓர் மீளளிக்கப்படாத கட்டணம் ரூ. 5000/- செலுத்துவதன் பேரில் மின்னஞ்சல் ஊடாக (saradmin@pgim.cmb.ac.lk) மருத்துவ பட்டபின்படிப்பு நிறுவனம். சிரேஷ்ட உதவிப் பதிவாளர்/ பொது நிர்வாகம் இற்கு கொடுப்பனவு பற்றுச்சீட்டின் ஓர் ஸ்கேன் செய்த பிரதியுடன் ஓர் எழுத்துமூல விண்ணப்பத்தை சமர்ப்பிப்பதன் பேரில் ஆர்வமுள்ள விலைமனுதாரர்களால் ஆங்கில மொழியிலான (PDF format) ஓர் முழுமையான தொகுதி விலைமனு ஆவணங்களை கொள்வனவு செய்யலாம்.

எல்லா விலைமனுவுடனும் ரூபா 60.000/- பெறுமதியான ஓர் விலைமனுப்பிணையை இணைத்தல் வேண்டும். விலைமனுப்பிணை பொரள்ளை சிறப்புத் தரக்கிளை இலங்கை வங்கி PGIM கணக்கு இல. 193413 இற்கு வைப்புச் செய்யப்பட வேண்டும். அத்துடன் விலைமனு ஆவணத்துடன் இணைக்கப்படல் வேண்டும்.

நகல்களுடனான முழுமையாக பூர்த்தி செய்யப்பட்ட பொறியிடப்பட்ட விலைமனுக்களை உள்ளடக்கும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் கொழும்பு பல்கலைக்கழகம் மருத்துவ பட்டப்பின்படிப்பு நிறுவனத்திற்கு தற்போதுள்ள Hardware Firewall இற்கு மாற்றீடாக 3 வருடங்களுக்கு licence sudscription உடன் Hardware Firewell System ஐ வழங்குதல் நிறுவுதல் வடிவமைத்தல் மற்றும் இயக்குதல் என்று குறிப்பிட்டு மருத்துவ பட்டப்பின்படிப்பு நிறுவனத்தின் பொது நிர்வாக கிளையில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் வைப்பிலிடல் வேண்டும் அல்லது 2023.02.23ஆம் திகதி பி.ப. 2.30 மணிக்கு அல்லது அதற்கு முன் கொழும்பு-7, பேராசிரியர் நந்ததாச கோத்தாகொட மாவத்த, இல 160, மருத்துவ பட்டப்பின்படிப்பு நிறுவனம் திணைக்கள பெறுகைக் குழுவின் தலைவருக்கு பதிவுத்தபாலில் அனுப்பப்படல் வேண்டும்.

விலைமனுதாரார்கள் அல்லது விலைமனு திறக்கப்படும் வேளையில் சமுகமளிக்கும் அவர்களது அங்கீகாரம் பெற்ற பிரதிநிதிகள் முன்னிலையில் மருத்துவ பட்டப்பின்படிப்பு நிறுவனத்தின் பொது நிர்வாகக் கிளையில் 2023.02.23ஆம் திகதி பி.ப. 2.30 இற்கு விலைமனுக்கள் திறக்கப்படும். தாமதமான மற்றும் பூர்த்தியற்ற விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.

தலைவர்,
திணைக்களப் பெறுகைக் குழு,
மருத்துவ பட்டப்பின்படிப்பு நிறுவனம்,
கொழும்பு பல்கலைக்கழகம்,
இல. 160, பேராசிரியர் நந்ததாச கோட்டாகொட மாவத்த,
கொழும்பு-7.

09.02.2023

கொழும்பு மாநகர சபை

விலைக்கோரல்களுக்கான அழைப்பு

கொழும்பு மாநகர சபையின் மாநகர ஆணையாளரால் பின்வரும் சேவைகளை வழங்குவதற்காக தகுதி மற்றும் தகைமை வாய்ந்த கேள்விதாரர்களிடமிருந்து முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

தொ. இல.	கேள்வி இலக்கம்	விபரம்	மீளளிக்கப் படாத கட்டணம் ரூபா	விலைக்கோரல் பிணை முறியின் பெறுமதி	விலைமனுதாரர் / கேள்விதாரரின் தகுதிகள்	மேலதிக விபரங்களுக்கு தொடர்பு கொள்ளும் நபர்
1	ME/ME/ ML/184/2022	கொழும்பு-07, விஹார மஹாதேவி பூங்காவில் மிதி வண்டிகளை வாடகைக் கமர்த்துதல்	5,750.00	வரிகள் இன்றி மாதாந்த வாடகை விலைக்கோரல் தொகையை 2 வருடங்களுக்கு கணக்கிடப்பட்டு அதன் 2% பெறுமதிக்கான நிபந்தனையற்ற உடன் பணம் பெற்றுக்கொள்ள முடியுமான பிணை முறி	செல்லுபடியாகும் வியாபாரப் பதிவுச் சான்றிதழ் சகிதம் இந்த வகையான வேலைகளில் அனுபவம் வாய்ந்த நிறுவனங்கள், தனிப்பட்டவர்கள்	பொறியியல் பணிப்பாளர் காணிகள் மற்றும் சுற்றாடல் தொலைபேசி: 011-2695475

விலைமனு ஆவணங்களை (மூலப் பிரதி மற்றும் நகல் பிரதி) **இரண்டு முறைகளில்** பெற்றுக்கொள்ளலாம்.

முறை 01 - கொழும்பு மாநகர சபையின் இணையதளத்திலிருந்து (www.colombo.mc.gov.lk) தரவிறக்கம் செய்துகொள்ளலாம்.

i. மேற்குறிப்பிடப்பட்ட மீளளிக்கப்படாத விலைமனு ஆவணக் கட்டணத்தை பின்வரும் வகையில் செலுத்துதல் வேண்டும்.

அ) எந்தவொரு **மக்கள் வங்கிக் கிளையிலும் மக்கள் வங்கி நகர மண்டப கிளையில் பேணப்படும் 167-1-001-6-3169425** எனும் கணக்கிலக்கத்திற்கு வரவு வைக்கலாம்.

ஆ) கொழும்பு மாநகர சபை எல்லைக்குள் அமைந்துள்ள பின்வரும் கொடுப்பனவு கருமபீடங்களில் வார நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரை செலுத்தலாம்.

- **வட்டார அலுவலகம் 04,** இல. 147, ஹைலெவல் வீதி, கிருலப்பனை, கொழும்பு 06.
- **வடிகாலமைப்பு மற்றும் நீர் வழங்கல் பிரிவு,** மாளிகாகந்த, கொழும்பு 10.

ii. பற்றுச்சீட்டு / வங்கி வரவுத் துண்டை விலைமனு ஆவணங்களுடன் கட்டாயம் இணைத்தல் வேண்டும்.

iii. இணைய தளத்திலிருந்து விலைக்கோரல் ஆவணங்களைப் பெற்றுக்கொண்ட விலைமனுதாரர்கள் பின்வரும் விபரங்களை dirproj@Colombo.mc.gov.lk எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அறிவித்தல் வேண்டும்.

1. நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி
2. தொடர்புகொள்ளும் தொலைபேசி இலக்கம் மற்றும் மின்னஞ்சல் முகவரி

முறை 02 - நகர மண்டப வளவில் பெற்றுக்கொள்ளலாம்.

அ. ஒவ்வொன்றிற்கும் மீளளிக்கப்படாத விலைமனுக்கோரல் **ஆவணக் கட்டணத்தை வேலை நாட்களில் மு.ப. 9.00 மணியிலிருந்து பி.ப. 3.30 மணி வரையும் 2023-03-01ஆம் திகதி மு.ப. 10.00 மணி வரையில் நகர மண்டப காசாளர் கருமபீடத்திற்கு செலுத்தி மற்றும் எழுத்து மூலமான கோரிக்கையொன்றை சமர்ப்பிப்பதன் மூலம், கொழும்பு-07, நகர மண்டபம், கொழும்பு மாநகர சபை, மாநகர பொறியியலாளர் திணைக்களத்தின் செயற்றிட்ட முகாமைத்துவப் பிரிவிலிருந்து விலைமனுக்கோரல் ஆவணங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.**

அ. கொடுப்பனவுகளை **2023-03-01ஆம்** திகதி மு.ப. 10.00 மணி அல்லது அதற்கு முன்னர் செலுத்துதல் வேண்டும்.

இ. நிபந்தனையற்ற கோரும்போது பெறத்தக்கதான விலைமனு முறி/ பிணை விலைமனுக்கள் மூடப்படும் திகதியிலிருந்து **210 நாட்கள்** வரை செல்லுபடியாதல் வேண்டும். **விலைமனு முறி/ பிணை 2023.09.28ஆம் திகதி வரை செல்லுபடியாதல் வேண்டும். விலைக்கோரல்கள் 2023.08.29ஆம் திகதி வரை செல்லுபடியாதல் வேண்டும்.** ரொக்கப் பணமாகச் செலுத்தப்படும் பிணை முறிகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

ஈ. உரிய முறையில் பூர்த்தி செய்யப்பட்டு முத்திரையிடப்பட்ட விலைமனுக்கோரல் ஆவணங்களை மூலப் பிரதி மற்றும் நகல் பிரதிகளில் **கொழும்பு-07, நகர மண்டபம், செயலாளரின் திணைக்களத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் 2023-03-02ஆம் திகதி மு.ப. 10.00 மணி அல்லது அதற்கு முன்னர்** உள்ளிடல் வேண்டும்.

உ. **2023-03-02ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு விலைமனுக்கள் ஏற்றுக்கொள்வது** முடிவுறுத்தப்படும் என்பதுடன் இறுதி நேரத்திற்கு பின் கிடைக்கப்பெறும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும் என்பதோடு அதன் பின்னர் விலைமனுக்கள் உடன் திறக்கப்படும். இந்த நாள் பொது விடுமுறை தினமாக அறிவிக்கப்பட்டால், அடுத்து வரும் வேலை நாளில் 10.00 மணிக்கு விலைமனுக்கள் முடிவுறுத்தப்படும். விலைமனுக்கள் திறக்கப்படும் நிகழ்வில் பங்கேற்பதற்கு விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் அங்கீகாரம் பெற்ற பிரதிநிதிகள் அனுமதிக்கப்படுவர்.

ஊ. விலைமனுக்களின் விபரங்கள் விலைமனு ஆவணங்களுடன் வழங்கப்படும். 5.0 மில்லியன் ரூபாவிற்கு மேற்பட்ட விலைமனுக்களுக்கு விலைமனுதாரர் பொது ஒப்பந்தங்கள் பதிவாளருடன் பதிவு செய்து கொண்ட பின் PCA 3 படிவத்தைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

ஜே.எம். பத்ராணி ஜயவர்தன,
மாநகர ஆணையாளர்
கொழும்பு மாநகர சபை.

கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில்

ஐக்கிய இராச்சியத்தின், BR2 9PU, ப்ரொமலி செலிஸ்பரி வீதி, 44 இல் குடியிருந்து காலஞ்சென்ற அதீசன் அருட்சோதி என்பவருடைய ஆதனம் தொடர்பாக ஹய் கோர்ட் ஒப் ஜஸ்டிஸினால் ஐக்கிய இராச்சியத்தின், SE3 9HZ, லன்டன் 40C லீ பார்க் இல் வசிக்கும் ஷெலன் ஸ்டுவர்ட்ஸ் வோக் என்பவரிடம் வழங்கப்பட்ட ப்ரொபேட் ஆவணத்தினை 1977 ஆம் ஆண்டு 20 ஆம் இலக்கம் கொண்ட குடியியல் வழக்குச் சட்டக்கோவையின் பிரிவு XXXVIIIB எனும் அத்தியாயத்தின் கீழ் மீள் முத்திரையிடுவதற்காக விண்ணப்பம் தொடர்பான விடயம் தொடர்பாக.

(காலஞ்சென்றவர்)

வழக்கு இல: DTS /421/22
தன்மை : விருப்பாவணம்
நடைமுறை : சுருக்கம்
பெறுமதி : ரூ. 460,996.50

ஐக்கிய இராச்சியத்தின், SE3 9HZ, லன்டன் 40C லீ பார்க் இல் வசிக்கும் ஷெலன் ஸ்டுவர்ட்ஸ் வோக்,

பின்வரும் அவரது அற்றோனி தத்துவக்காரர் மூலம் தோன்றுகின்றார்.

கொழும்பு 07, அலெக்ஸான்ட்ரா பிளேஸ், இல. 47 எனும் முகவரியில் வசிக்கும் சந்தன பத்மகுமார ரூபசிங் சிறிவர்தன

(மனுதாரர்)

ஐக்கிய இராச்சியத்தின், BR2 9PU, ப்ரொமலி செலிஸ்பரி வீதி, 44 இல் குடியிருந்து காலஞ்சென்ற அதீசன் அருட்சோதி என்பவருடைய ஆதனம் தொடர்பாக ஹய் கோர்ட் ஒப் ஜஸ்டிஸினால் ஐக்கிய இராச்சியத்தின், SE3 9HZ, லன்டன் 40C லீ பார்க் இல் வசிக்கும் ஷெலன் ஸ்டுவர்ட்ஸ் வோக் என்பவரிடம் வழங்கப்பட்ட ப்ரொபேட் ஆவணத்தினை 1977 ஆம் ஆண்டு 20 ஆம் இலக்கம் கொண்ட குடியியல் வழக்குச் சட்டக்கோவையின் பிரிவு XXXVIIIB எனும் அத்தியாயத்தின் கீழ் மீள் முத்திரையிடுவதற்காக மேற்கொள்ளப்படும் விண்ணப்பத்தினை பிரசுரத்திலிருந்து 28 நாட்கள் முடிவடைந்த பின்னர் கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் விண்ணப்பிக்கப்படும் என இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

2022 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 21 ஆம் திகதி

டீ.எல். மற்றும் எப்(f) த சேரம்
மனுதாரரின் சட்டத்தரணி,

கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில்

ஐக்கிய இராச்சியத்தின், SE3 9HZ, லன்டன், லீ பார்க் ப்ளெக்ஹீத் எனும் இடத்தில் குடியிருந்து காலஞ்சென்ற அம்பிகா அருட்சோதி வோக் என்பவருடைய ஆதனம் தொடர்பாக கோர்ட் ஒப் ப்ரைட்டனினால் ஐக்கிய இராச்சியத்தின், SE3 9HZ, லன்டன் லீ பார்க் ப்ளெக்ஹீத் 40C இல் வசிக்கும் கிரெஹெம் ரோஸ் வோக் என்பவரிடம் வழங்கப்பட்ட ப்ரொபேட் ஆவணத்தினை 1977 ஆம் ஆண்டு 20 ஆம் இலக்கம் கொண்ட குடியியல் வழக்குச் சட்டக்கோவையின் பிரிவு XXXVIIIB எனும் அத்தியாயத்தின் கீழ் மீள் முத்திரையிடுவதற்காக விண்ணப்பம் தொடர்பான விடயம் தொடர்பாக.

(காலஞ்சென்றவர்)

வழக்கு இல: DTS /422/22
தன்மை : விருப்பாவணம்
நடைமுறை : சுருக்கம்
பெறுமதி : ரூ. 460,996.50

ஐக்கிய இராச்சியத்தின், SE3 9HZ, லன்டன் லீ பார்க் ப்ளெக்ஹீத் 40C இல் வசிக்கும் கிரெஹெம் ரோஸ் வோக்

பின்வரும் அவரது அற்றோனி தத்துவக்காரர் மூலம் தோன்றுகின்றார்.

கொழும்பு 07, அலெக்ஸான்ட்ரா பிளேஸ், இல. 47 எனும் முகவரியில் வசிக்கும் சந்தன பத்மகுமார ரூபசிங் சிறிவர்தன

(மனுதாரர்)

ஐக்கிய இராச்சியத்தின், SE3 9HZ, லன்டன், லீ பார்க் ப்ளெக்ஹீத் எனும் இடத்தில் குடியிருந்து காலஞ்சென்ற அம்பிகா அருட்சோதி வோக் என்பவருடைய ஆதனம் தொடர்பாக கோர்ட் ஒப் ப்ரைட்டனினால் ஐக்கிய இராச்சியத்தின், SE3 9HZ, லன்டன் லீ பார்க் ப்ளெக்ஹீத் 40C இல் வசிக்கும் கிரெஹெம் ரோஸ் வோக் என்பவரிடம் வழங்கப்பட்ட ப்ரொபேட் ஆவணத்தினை 1977 ஆம் ஆண்டு 20 ஆம் இலக்கம் கொண்ட குடியியல் வழக்குச் சட்டக்கோவையின் பிரிவு XXXVIIIB எனும் அத்தியாயத்தின் கீழ் மீள் முத்திரையிடுவதற்காக மேற்கொள்ளப்படும் விண்ணப்பத்தினை பிரசுரத்திலிருந்து 28 நாட்கள் முடிவடைந்த பின்னர் கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் விண்ணப்பிக்கப்படும் என இத்தால் அறிவிக்கப்படுகின்றது..

2022 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 21 ஆம் திகதி

டீ.எல். மற்றும் எப்(f) த சேரம்
மனுதாரரின் சட்டத்தரணி,

சிறு விளம்பரம்

மோட்டார் வாகனங்கள் 106

கார்கள் விற்பனைக்கு

WP CBL-6720 Audi A5, 2019, WP KV-5556 Audi, 2011, cars கூடிய விலைக் கோரிக்கைக்கு. வெலிபில் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு03. தொ.பே 071 4542 958 . 008520

113

சுசூகி கார்கள் விற்பனைக்கு

WP CAP-8584 Suzuki Wagon R, 2014, கூடிய விலைக் கோரிக்கைக்கு. வெலிபில் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு03. தொ.பே 0714542 958 . 008517

120

வாகனங்கள்/ சேவைகள்

NW DAG-0740 Mahindra Mini Truck, 2017 கூடிய விலைக் கோரிக்கைக்கு. வெலிபில் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு03. தொ.பே. 0711210 810 . 008519

122

மோட்டார் சைக்கிள், திரீவீலர்கள் விற்பனைக்கு

WP QG-2002, Bajaj, 2006, WP AA X-0473 B ajaj, 2015, threew heel கூடிய விலைக் கோரிக்கைக்கு. வெலிபில் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு03. தொ.பே. 0711 2 10 810 . 008518

128

டயர்கள், டியூப்புகள் விற்பனைக்கு

கொழும்பில் ஆர்பிடெக் நிரப்பு வதற்குத் தரப்பட்டு, திருப்பியெடுக்கப்படாத டயர்கள் 700x16, 750x16, 1000x20 பஸ் உரிமையாளர்களுக்கு உத்தரவாதத்துடன் கார், வேன், லொறி டயர் தருவிப்பவர்கள் போக்லிப்ட் சொலிட் காற்று டயர், அரச நிறுவனங்களுக்கு கடன் வசதிகள். இல. 155, கிரவுன் டயர், கொழும்பு 14. 0773134060. 003604

சுகாதாரம், போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சு

விஜயகுமாரதுங்க ஞாபகார்த்த வைத்தியசாலை தாதியர் விடுதியொன்றிற்காக வீடொன்றை குத்தகைக்குப் பெற்றுக் கொள்ளல்.

2023.04.01 முதல் 2024.03.31 வரை ஒரு வருட காலத்திற்கு, விஜயகுமாரதுங்க ஞாபகார்த்த வைத்தியசாலையின் பெண் தாதியர்களிற்கு விடுதிவசதிகளை வழங்குவதற்காக, வீடொன்றைக் குத்தகைக்குப் பெற்றுக்கொள்வதற்காக கேள்வி விலைமனுக்கள் கோரப்படுகின்றன. அதில் பின்வரும் தேவைப்பாடுகள் பூரணப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

1. 10 தாதியர்களிற்குப் போதியளவு அறைகள் மற்றும் இட வசதிகளைக் கொண்டுள்ளதாக மற்றும் சமையலறையொன்றைக் கொண்டுள்ளதாக இருத்தல் வேண்டும். (வீடொன்றினால் மேற்படி தேவைப்பாடுகளைப் பூரணப்படுத்த இயலாத சந்தர்ப்பத்தில், அண்மையிலுள்ள இரண்டு வீடுகள், கவனத்திற்கொள்ளப்படும்)
2. வைத்தியசாலையிலிருந்து, 03 கி.மீ. தூரத்திற்கு மேற்படாதிருத்தல் வேண்டுமென்பதுடன் அவ்வீடானது, பிரதான வீதிக்கு அண்மையில் அமைந்திருத்தல் வேண்டும். அல்லது இலகுவில் சென்றடையக்கூடிய இடமொன்றில் அமைந்திருத்தல் வேண்டும். 3 கி.மி. எல்லையினுள் தகுதியான வீடொன்று இல்லாத பட்சத்தில் பிரதான வீதிக்கு முகப்பாக 5 கி.மீ. உள்ள வீடுகளும் கவனத்திற் கொள்ளப்படும்.
3. குழாய் நீர் வசதிகள் மற்றும் மின்சாரம் இருத்தல் வேண்டும். (அவற்றிற்காக தனியான விலைப்பட்டியல்கள் இருத்தல் வேண்டும்.)
4. குறைந்தபட்சம் குளியலறைகள் மற்றும் கழிவறைகள் இரண்டாவது இருத்தல் வேண்டும். அவை வீட்டின் உள்ளே அமைந்திருத்தல் வேண்டும்.
5. வீட்டைச் சுற்றிவர பாதுகாப்பு வேலி மற்றும் நுழைவாயில் அமைந்திருத்தல் வேண்டும். யன்னல்கள் கிறில்களைக் கொண்டதாக அமைந்திருத்தல் வேண்டுமென்பதுடன், வீட்டுக்குப் போதியளவு பாதுகாப்பு இருத்தல் வேண்டும்.
6. தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரர், வைத்தியசாலை நிருவாக சபையுடன் ஒரு வருட காலத்திற்கான குத்தகை ஒப்பந்தமொன்றில் கைச்சாத்திடுதல் வேண்டும்.

மேற்படி தேவைப்பாடுகளைப் பூரணப்படுத்தி உள்ள நபர்கள் 2023.02.09 முதல் 2023.03.01 வரை வார வேலை நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 வரையான காலப்பகுதியில் எழுத்துருவ விண்ணப்பமொன்றைச் சமர்ப்பித்து ரூபா 500/-ஐச் செலுத்தி இதற்கான கேள்வி விண்ணப்பப்படிவங்களை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

உரியவாறு பூரணப்படுத்தப்பட்ட கேள்வி விண்ணப்பங்கள் 2023.03.02 அன்று மு.ப. 10.00 இற்கு முன்னர், வைத்தியசாலையின் பணிப்பாளர் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியிற் சேர்த்தல் அல்லது பதிவுத்தபாலில் பின்வரும் முகவரிக்குக் கிடைக்கக்கூடியவாறு அனுப்புதல் முடியும். குறித்த தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில், 'தாதியர் விடுதியொன்றிற்காக வீடொன்றைக் குத்தகைக்கு பெற்றுக்கொள்ளல்-2023' எனக் குறிப்பிடுதல் வேண்டும்.

கேள்விகள் திறக்கப்படும் நேரம் 2023.03.02 அன்று மு.ப. 10.00 அவ்வேளையில் குறித்த விண்ணப்பதாரர் அல்லது பிரதிநிதிகள் சமுகமளித்திருக்கலாம். தாமதமாகும் கேள்விகள் அனைத்தும் நிராகரிக்கப்படுவதுடன் எந்தவொரு கேள்வியையும் ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் முழுமையான உரிமை பெறுகைக்குழுவிற்கு உரித்தாகும். மேலதிக தகவல்களை தொலைபேசி இல. 011-2258862-4 மூலம் விஜயகுமாரதுங்க ஞாபகார்த்த வைத்தியசாலையின் நிருவாக அலுவலர், கணக்காளரிடம் பெற்றுக்கொள்ளலாம்.

தலைவர் - பிராந்தியப் பெறுகைக் குழு,
விஜய குமாரதுங்க ஞாபகார்த்த வைத்தியாசலை,
சீதுவ.

வ/ப பம்பரபொட்டுவ மாரப்பன பலநோக்கு கூட்டுறவுச் சங்கம்

மீட்கப்படாத அடகுத் தங்க நகைகளை ஏலத்தில் விற்பனை செய்தல்

● பெலேதகம ● மாரப்பன ● வெலிமலுவ ● நிரல்கம ● கல்லேல்ல ● பஹலரத்கங்க ● வேடுவல்வத்த மற்றும் தலைமையகம்

ஆகிய கிராமிய வங்கிக் கிளைகளின் மூலம் 2021.12.31ம் திகதி உற்பட அத்தினம் வரை அடகுவைக்கப்பட்டு, 2023.02.17 நன்பகல் 12.00 வரை மீட்கப்படாத அடகுத் தங்க நகைகள்

2023.02.18 மு.ப. 10.00 முதல்

இரத்தினபுரி குடுகல்வத்த இல. 424 எனுமிடத்தில் அமைந்துள்ள சங்க அலுவலகத்தில் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும் என்பதை இத்தால் அறிவித்துக் கொள்கிறேன்.

பொது முகாமையாளர்
வ/ப பம்பர பொட்டுவ மாரப்பன பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்
கும்புகல்வத்த, இரத்தினபுரி.
045-2222332

Best way to fulfil your Future Dreams

Marriage Proposals

in the

Sunday Observer

வர்த்தக, வணிக மற்றும் உணவு பாதுகாப்பு அமைச்சு

ஆர்வத்தை வெளிப்படுத்துதல் (EOI)

கிளிநொச்சியிலுள்ள லங்கா சதொச கட்டிடத் தொகுதியை நீண்டகால குத்தகைக்கு வழங்குதல்

வரையறுக்கப்பட்ட லங்கா சதொச லிமிடெட்டின் உரிமையின் கீழுள்ள கிளிநொச்சி கட்டிடத் தொகுதியானது கண்டி - யாழ்ப்பாணம் (A9) பிரதான வீதியை முகப்பாகக் கொண்டு, நகர மத்தியில் (32 பேர்ச் காணியில்) நிர்மாணிக்கப்பட்டுள்ளது என்பதுடன் இது வர்த்தக, வணிக மற்றும் உணவு பாதுகாப்பு அமைச்சின் கீழ் வருகிறது. திருமண மண்டபம் (வளிச்சீராக்கி சகிதம்), அறைகள் (வளிச்சீராக்கி சகிதம்), 250KVA மின்மாற்றி ஊடாக மூன்று நிலை மின்சார வழங்கல் உட்கட்டமைப்பு வசதிகளை உள்ளடக்கிய மினி அரங்க மண்டப வசதிகள், தனியான நீர் வழங்கல், கட்டிடத்தின் முன்னால் வாகனத் தரிப்பிட வசதிகள் மற்றும் கட்டிடத்தின் தரை தளத்தில் சுப்பர் மார்க்கட் வசதிகள் என்பவை உட்பட ஏனைய பல வசதிகளைக் கொண்டுள்ளது. இந்தக் கட்டிடத்தை நீண்டகால குத்தகை உடன்படிக்கையின் கீழ் பெற்றுக்கொள்ள விரும்பும் ஆர்வமுள்ள தரப்பினரிடமிருந்து ஆர்வத்திற்கான வெளிப்பாடுகள் (EOI) இத்தால் கோரப்படுகின்றன.

சமர்ப்பிக்க வேண்டிய விபரங்கள்:

1. நிறுவனத்தின் பெயர், முகவரி, தொலைநகல் இலக்கம், மின்னஞ்சல் முகவரி என்பவற்றை உள்ளடக்கி கட்டிடத்தைப் பெற்றுக்கொள்வதற்கான ஆர்வ வெளிப்பாட்டுக் கடிதம்
2. நிறுவனம் / தனிப்பட்ட வியாபாரத்தின் சுயவிபரம்
3. வியாபாரப் பதிவு
4. முக்கிய வியாபார விபரங்கள்
5. ஒற்றை முகாமைத்துவத்தின் கீழ் ஒருங்கிணைந்த நிறுவனங்களின் தெளிவான செயல் விளக்கம்
6. குறைந்தபட்சம் அண்மைய 3 வருடங்களுக்கான நிதி நம்பகத்தன்மை இருக்க வேண்டும். (கட்டாய அளவுகோள்)

ஆர்வமுள்ள விண்ணப்பதாரர்கள் தங்கள் ஆர்வ வெளிப்பாடுகளை 2023-03-01ஆம் திகதி பி.ப. 3.00 மணி அல்லது அதற்கு முன் கிடைக்கும் வகையில் செயலாளர், 04ஆம் தளம், இல. 492, வர்த்தக, வாணிப மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சு, ஆர்.ஏ. டி மெல் மாவத்தை, கொழும்பு-03, இலங்கை எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம்.

ஆர்வ வெளிப்பாட்டைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''கிளிநொச்சியிலுள்ள லங்கா சதொச லிமிடட் கட்டிடத் தொகுதியின் நீண்டகால குத்தகைக்காக ஆர்வத்தை வெளிப்படுத்துதல் (EOI)'' எனத் தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும்.

ஆர்வ வெளிப்பாடுகளை ஏற்றுக்கொள்ளல் 2023-03-01ஆம் திகதி பி.ப. 3.00 மணிக்கு முடிவுறுத்தப்படும். கிடைக்கப்பெற்ற ஆர்வ வெளிப்பாடுகள் சமுகம் தந்துள்ள விண்ணப்பதாரர்கள் அல்லது அவர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் ஆர்வ வெளிப்பாடுகள் ஏற்றுக்கொள்ளல் முடிவுற்றதன் பின் உடன் திறக்கப்படும். பிந்திக் கிடைக்கும் சமர்ப்பிப்புகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

ஒரு குறும்பட்டியல் இறுதியாக்கப்படும் என்பதுடன் நிதி முன்மொழிவு ''தகுதி'' நிறுவனங்கள் / தனி நபர்களிடமிருந்து கோரிக்கையின் மூலம் (RFP) மட்டுமே கோரப்படும்.

தெளிவுபடுத்தல்களுக்கு கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள அதிகாரியைத் தொடர்பு கொள்ளவும்.

உதவிச் செயலாளர் (நிர்வாகம்), வர்த்தக, வாணிப மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சு - 076 2566047

செயலாளர்,
வர்த்தக, வாணிப மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சு,
இல. 492, ஆர்.ஏ. டி மெல் மாவத்தை,
கொழும்பு-03, இலங்கை.
2023-02-07.

தென் மாகாண சுகாதார சேவைகள் திணைக்களம்

பெறுகை அறிவித்தல்

தென் மாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்தின் பெறுகைக் குழுத் தலைவரினால் பின்வரும் மருத்துவ உபகரணங்கள் / அலுவலக உபகரணங்களை வழங்குவதற்காக அங்கீகரிக்கப்பட்ட விற்பனையாளர்களிடமிருந்து முத்திரை பொறிக்கப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

நிதியளிப்பு: ஆரம்ப சுகாதார சேவைகளை கட்டியெழுப்பும் செயற்றிட்டம் **(PSSP)**

தொ. இல.	உபகரணம்	எண்ணிக்கை	மீளளிக்கப் படாத கேள்விப் பிணை முறி
மருத்துவ உபகரணங்கள்			
1	Mini autoclave (20L)	19	5,000.00
2	Sterilizers	29	4,000.00
3	Nitrogen Gun	1	3,000.00
4	Wax Bath	1	1,000.00
5	Dental x-ray CR System	4	5,000.00
6	Short Wave Diathermy	1	4,000.00
7	Infrared Red Lamp (with Stand)	1	2,000.00
8	CTG Machine	8	5,000.00
9	Anesthetic Machine	1	5,000.00
10	Operation Theater Table	1	5,000.00
11	Diathermy Machine (Bipolar/Monopolar Function)	2	5,000.00
12	Electro Conversion therapy (ECT)	1	5,000.00
13	High Pressure Sterilizer	1	10,000.00
14	Laparoscopy	1	10,000.00
15	Nerve Sitimulator Machine	2	3,000.00
16	Ultra Sound Therapy Machine	2	3,000.00
அலுவலக உபகரணங்கள்			
17	Desktop Computers	42	7,500.00
18	Laptop Computers Core i5	60	7,500.00

கேள்வி நிபந்தனைகள்

01. தேசிய போட்டி ரீதியிலான விலைக்கோரல் (NCB) ஊடாக இந்த விலைக்கோரல் நடைமுறைப்படுத்தப்படும்.
02. விண்ணப்பதாரர் இலங்கை வியாபார பெயர் பதிவுச் சட்டத்தின் கீழ் அல்லது கம்பனிகள் சட்டத்தின் கீழ் மருத்துவ உபகரணங்கள் தொடர்பான மருத்துவ உபகரணங்கள் மற்றும் ஔடத அதிகார சபையில் (மருத்துவ மற்றும் ஆய்வுகூட உபகரணங்களுக்காக) பதிவைப் பெற்ற நபராக அல்லது நிறுவனமாக இருத்தல் வேண்டும் என்பதுடன் இயந்திரங்களுக்காக உள்நாட்டு சந்தைப்படுத்தல் நிறுவனத்தின் ஊடாக விலைமனுக்களைச் சமர்ப்பித்தல் வேண்டும்.
03. கேள்வி ஆவணங்களை எமது அலுவலகத்தின் கணக்கியல் பிரிவில் 2023-02-13ஆம் திகதி முதல் 2023-02-28ஆம் திகதி வரையில் பெற்றுக்கொள்ளலாம். இங்கு ஒவ்வொரு உருப்படியின் பொருட்டும் அதன் மதிப்பீட்டுத் தொகையின் 1% கட்டணத்தை மீளளிக்கப்படும் வைப்பு தொகை மற்றும் மேற்படி அட்டவணையில் குறிப்பிடப்பட்ட வகையில் ஒவ்வொரு உருப்படிக்காகவும் மீளளிக்கப்படாத வைப்புத் தொகையை ரொக்கப் பணமாகச் செலுத்துதல் வேண்டும்.
04. முத்திரைக் குறி பொறிக்கப்பட்டு இரு பிரதிகளில் சமர்ப்பிக்கப்படல் வேண்டும் என்பதுடன் மூலப் பிரதி மற்றும் நகல் பிரதியை வெவ்வேறு உறைகளில் இட்டு பின் அவ்விரு உறைகளையும் வேறொரு உறையில் இடப்படுதல் வேண்டும் என்பதுடன் அதன் இடதுபக்க மேல் மூலையில் உருப்படியின் இலக்கத்துடன் உபகரணத்தின் பெயர் மற்றும் 2023ஆம் வருடத்திற்கு எனக் குறிப்பிட்டுச் சமர்ப்பித்தல் வேண்டும்.
05. 2023-03-02ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு முன் முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட கேள்விப் படிவங்களை தவிசாளர், பெறுகைக் குழு, மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம், இல. 15ஏ, கீழ் டிக்சன் வீதி, காலி எனும் முகவரிக்கு தபாலில் அல்லது நேரில் கொண்டு வந்து ஒப்படைக்கலாம்.
06. அன்றைய தினமே மு.ப. 11.00 மணிக்கு கேள்விகள் திறக்கப்படும். கேள்விகள் திறக்கப்படும் வேளையில் கேள்விதாரர் அல்லது அவரது அதிகாரபூர்வ பிரதிநிதியொருவர் கலந்து கொள்ளலாம்.
07. நிர்ணயிக்கப்பட்ட திகதி மற்றும் குறித்த நேரத்திற்குப் பின் கிடைக்கப்பெறும் மற்றும் உரிய வகையில் சமர்ப்பிக்கப்படாத கேள்விகள் நிராகரிக்கப்படும்.
08. கேள்விகளை ஏற்றுக்கொள்ளல் அல்லது நிராகரித்தல் அல்லது ஒரு பகுதியை ஏற்றுக்கொள்ளும் அதிகாரத்தை பெறுகைக் குழு தன்னகத்தே கொண்டுள்ளது.
09. இது தொடர்பான மேலதிக விபரங்களை பின்வரும் தொலைபேசி இலக்கங்கள் ஊடாக பெற்றுக்கொள்ளலாம்.

091-2231620 / 091-2224609

தலைவர்,
பெறுகைக் குழு,
மாகாண சுகாதார சேவைகள் திணைக்களம்,
இல. 15ஏ, கீழ் டிக்சன் வீதி,
காலி.

ලංකා විදුලිබල මණ්ඩලය
இலங்கை மின்சார சபை
CEYLON ELECTRICITY BOARD

இலங்கை மின்சார சபை

அனுமதிக்கப்பட்ட கட்டணங்கள் 2022 – மின் பரிமாற்ற வாடிக்கையாளர்கள்

மின் பரிமாற்ற வாடிக்கையாளர்களுக்கான 2022 நவம்பர் 24 ஆம் திகதியிலிருந்து அடுத்த திருத்தம் வரை அமுலில் இருக்கும் பின்வரும் அனுமதிக்கப்பட்ட கட்டணங்கள் இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

1. நியம பரிமாற்ற கட்டுமான வீதங்கள்

மின்பரிமாற்ற உரிமதாரரினால் விடயத்திற்கு விடயம் எனும் அடிப்படை (CCE) மீது வழங்கப்படுகின்ற மதிப்பீட்டிற்கு அமைய மின் பரிமாற்ற வாடிக்கையாளரிடம் கட்டணம் அறவிடப்படும்.

2. ஏனைய கட்டணங்கள்

இல.	வாசகம்	வேலை வகை	2022 ஆண்டிற்கான கட்டணம்
1	5.1.1	வாடிக்கையாளரின் வேண்டுகோளின் பேரில் இணைப்பைத் துண்டித்தல்	இலவசம்
2	5.1.2	வாடிக்கையாளரின் வேண்டுகோளின் பேரில் இணைப்பைத் துண்டித்ததன் பின்னர் மீள்-இணைப்பு	இலவசம்
3	5.1.3	மின்பரிமாற்ற உரிமதாரரினால் மின்சாரம் துண்டிக்கப்பட்டதன் பின்னர் மீள்-இணைப்பு	இ.ரூ. 3,000
4	5.1.4	மூ- அவத்தை சக்தி/ கேள்வி மானியொன்றைப் பரீட்சித்தல் (132/220kV இல் நிறுவப்பட்டது)	அன்றாட பரீட்சித்தல் இலவசம். ஏனையவை விடயத்திற்கு விடயம் எனும் அடிப்படையில் (CCE) கட்டணம் அறவிடப்படும்
5	5.1.5	நிறுவல் பரீட்சித்தல்	வாடிக்கையாளருக்குச் சொந்தமான நிறுவல்களுக்கு விடயத்திற்கு விடயம் எனும் அடிப்படையில் (CCE) கட்டணம் அறவிடப்படும்
6	5.1.6	கணக்குப் பெயரொன்றை மற்றும்/ அல்லது தீர்வை வகையை மாற்றுதல்	இலவசம்
7	5.1.7	132/220kV இல் நிறுவப்பட்ட மூ-அவத்தை மின்மானி ஒன்றை மாற்றுதல்	கோளாறு உடைய மானிகளுக்கு இலவசம். ஏனையவற்றிற்கு விடயத்திற்கு விடயம் எனும் அடிப்படையில் (CCE) கட்டணம் அறவிடப்படும்
8	5.1.8	132/220kV புதிய மின் இணைப்பொன்றை வழங்குதல் புதிய 132/220kV வழங்கல்: (Feeder bay ஊடாக இணைப்பைப் பெற்றுக்கொடுப்பதற்கு)	விடயத்திற்கு விடயம் எனும் அடிப்படையில் (CCE) கட்டணம் அறவிடப்படும்
9	5.1.9	132/220kV தற்காலிக மின் இணைப்பொன்றை வழங்குதல்	ஏற்புடையதாகாது
10	5.1.10	தற்போதுள்ள 132/220kV வழங்கலை அதிகரித்தல் I. அதே மின்னேற்றத்தில் அதிகரித்தல். II. உயர் மின்னேற்றத்தில் அதிகரித்தல்.	விடயத்திற்கு விடயம் எனும் அடிப்படையில் (CCE) கட்டணம் அறவிடப்படும்
11	5.1.11	தற்போதுள்ள 132/220kV கிரிட் உபநிலைய மின் பரிமாற்ற இணைப்பை இடமாற்றல்	விடயத்திற்கு விடயம் எனும் அடிப்படையில் (CCE) கட்டணம் அறவிடப்படும்
12	5.1.12	பொதுவழியுரிமை ஏற்பாடுகளைச் செய்தல்	பிரதேச செயலாளர்களினால் தீர்மானிக்கப்பட்ட நட்டஈடு மற்றும் பொது வழியுரிமை ஏற்பாடுகளைச் செய்வதற்கான விடயத்திற்கு விடயம் எனும் அடிப்படையில் (CCE) கட்டணம் அறவிடப்படும்
13	5.1.13	மின் பரிமாற்ற வாடிக்கையாளர்களுக்கு இசைவு அறிக்கையை வழங்கல்	விடயத்திற்கு விடயம் எனும் அடிப்படையில் (CCE) கட்டணம் அறவிடப்படும்
14	5.1.14	நகல் விலைப்பட்டியல் ஒன்றை வழங்கல்	இலவசம்
15	5.1.15	விரிவான கணக்குக்கூற்றினை வழங்கல்	ஏற்புடையதாகாது
16	5.1.16	மின்மானிகளில் மின்ஏற்ற வரைபுகளையும் ஏனைய தரவுகளையும் வழங்கல்	இலவசம்
17	5.1.17	நிகர அளவீட்டுமானி வசதிகளை வழங்கல்	ஏற்புடையதாகாது
18	5.1.18	பதிக்கப்பட்ட(embedded) மின் பிறப்பாக்க ஒன்றிணைப்பினை மின் பரிமாற்ற வலையமைப்புடன் இணைத்தல்	ஏற்புடையதாகாது
19	5.1.19	33/132/220kV வலையமைப்புடன் மின் பிறப்பாக்க இணைப்பை இணைத்தல்	ஏற்புடையதாகாது
20	6.1.10	தாமதக் கட்டணங்கள்	முன்னைய வருடத்தின் ஒக்டோபர் 31 ஆம் திகதியின் வணிக வங்கிக்கான தாமத சராசரி எடையுள்ள கடன் விகிதத்தின் (AWLR) பன்னிரெண்டில் ஒருபகுதி. விலைப்பட்டியல் வழங்கப்பட்டு 15 நாட்களின் பின்னர் அறவிடப்படும்.

3. நானாவித கட்டணங்கள்

1		132/220kV புதிய மின் இணைப்பிற்கான விண்ணப்பப்படிவக் கட்டணம்	இலவசம்
2		பிணை வைப்பு	விடயத்திற்கு விடயம் எனும் அடிப்படையில் (CCE) கட்டணம் அறவிடப்படும்
3		வாடிக்கையாளரின் வளாகத்திற்கு உள்ளே இலங்கை மின்சார சபைக்குச் சொந்தமான இலத்திரனியல் உபகரணங்கள்/ இணைப்புகள் ஆகியவற்றிற்கு ஏற்பட்ட சேதங்களைப் பழுதுபார்த்தல்	விடயத்திற்கு விடயம் எனும் அடிப்படையில் (CCE) கட்டணம் அறவிடப்படும்
4		வலுச்சக்தி தர மதிப்பீடானது, மின் பரிமாற்ற தர நிர்ணயங்களுக்கு ஏற்ப சுயாதீன தொழிற்றுறையாள ரொருவரினால் மேற்கொள்ளப்படுதல் வேண்டும் என்பதுடன், அதற்கான கட்டணம் அறவிடுதல்.	ரூ. 25,000

- மேற்குறித்த தீர்வை மீள்திருத்தமானது 2009 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க இலங்கை மின்சார சட்டத்தின் 30 (2) (ஈ) பிரிவின் நியதிகளுக்கு அமைய இலங்கை மின்சார சபையினால் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

பொது முகாமையாளர்
இலங்கை மின்சார சபை

வளமான வாழ்விற்கு மின்சாரம்

சிவப்பு பந்தை கைவிட வாய்ப்பு

அனைத்து டெஸ்ட் போட்டிகளிலும் சிவப்புப் பந்துக்கு பதில் இளஞ் சிவப்பு பந்து பயன்படுத்தக் கூடும் என்று இங்கிலாந்து பந்து உற்பத்தி நிறுவனமான டியுக்ஸ் தெரிவித்துள்ளது.

போதிய வெளிச்சம் இல்லாததால் ஆட்டம் நிறுத்தப்படும் பிரச்சினை டெஸ்ட் போட்டிகளில் இருக்கும் நிலையில் இதற்கு இளஞ்சிவப்புப் பந்து தீர்வாக அமையும் என்று அந்த நிறுவனம் கருதுகிறது.

இளஞ்சிவப்புப் பந்தின் தரத்தை உயர்த்துவதால் போதிய வெளிச்ச மின்மையால் வீணாகும் நேரத்தை குறைக்க முடியும் என்று டியுக்ஸ் முகாமைத்துவ பணிப்பாளர் திலிப் ஜஜோடியா தெரிவித்துள்ளார்.

1877 ஆம் ஆண்டு முதல் டெஸ்ட் ஆடப்பட்டது தொடக்கம் டெஸ்ட் போட்டிகளில் சிவப்பு நிறப் பந்து பயன்படுத்தப்படும் நிலையில் 2015 தொடக்கம் பகலிரவு டெஸ்ட் போட்டிகளில் இளஞ்சிவப்புப் பந்து பயன் படுத்தப்பட்டு வருகிறது.

இங்கிலாந்து லயன்ஸ் ஸ்திரமான நிலையில்

இலங்கை ஏ அணியுடனான இரண்டாவது உத்தியோகபூர் வமற்ற டெஸ்ட் போட்டியில் தனது முதல் இன்னிங்ஸை துடுப்பெடுத்தாடி வரும் இங்கிலாந்து லயன்ஸ் அணி ஸ்திரமான நிலையை பெற்றுள்ளது.

காலியில் நடைபெற்றுவரும் இந்த டெஸ்ட் போட்டியின் இரண்டாவது நாளான (08) நேற்று ஆட்டநேர முடிவின்போதும் இங்கிலாந்து லயன்ஸ் முதல் இன்னிங்ஸில் 3 விக்கெட்டுகளை இழந்து 234 ஓட்டங்களை பெற்றுள்ளது. இலங்கை ஏ அணி முதல் இன்னிங்ஸில் 332 ஓட்டங்களை பெற்ற நிலையில் அந்த அணி 7 விக்கெட்டுகள் கைவசம் இருக்க 98 ஓட்டங்களாலேயே பின்தங்கியுள்ளது.

இலங்கை ஏ அணி 190 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுகளை மாத்திரம் இழந்த நிலையில் இரண்டாவது நாளை ஆரம்பித்த போதும் அடுத்தடுத்து விக்கெட்டுகளை பறிகொடுத்தது.

122 ஓட்டங்களுடன் இரண்டாவது நாளில் துடுப்பெடுத்தாடகளமிறங்கிய லசித் குரூஸ்புள்ளே மேலும் ஆறு ஓட்டங்களையே பெற்றார். அணித்தலைவர் நிபுன் தனஞ்சய 61 ஓட்டங்களை குவித்தார். இரண்டாவது நாளில் இலங்கை ஏ 142 ஓட்டங்களுக்கு எஞ்சிய 7 விக்கெட்டுகளையும் பறிகொடுத்தமை குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் நேற்று முதல் இன்னிங்ஸை ஆரம்பித்த இங்கிலாந்து லயன்ஸ் அணியின் முதல் இரு விக்கெட்டுகளும் 17 ஓட்டங்களுக்குள் வீழ்த்தப்பட்டபோதும் ஆரம்ப வீரர் அலெக்ஸ் லீஸ் சிறப்பாக துடுப்பெடுத்தாடினார். அவர் ஜோஷ் பஹ்னனுடன் (54) இணைந்து 3ஆவது விக்கெட்டுக்கு 105 ஓட்டங்களை பகிர்ந்து கொண்டார்.

அடுத்து வந்த ஜமீ ஸ்மித்தும் அபாரமாக துடுப்பெடுத்தாடினார். இரண்டாம் நாள் ஆட்ட நேர முடிவின்போது லீஸ் 75 ஓட்டங்களுடனும் ஸ்மித் 86 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காது களத்தில் உள்ளனர்.

சீனாவின் ஹொங்சூ நகரில் இந்த ஆண்டு கடைசியில் நடைபெறவுள்ள ஆசிய விளையாட்டுப் போட்டியை ஒட்டி கொழும்பு துறைமுக நகரில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம் பெற்ற 'பன் ரன்' விளையாட்டு நிகழ்ச்சியின்போது பிடிக்கப்பட்ட படத்தினை காணலாம். (படம்: சுதத் நிஷான்த)

மகளிர் கரப்பந்து அணி பெப். 21, 22இல் தெரிவு

இலங்கை தேசிய மகளிர் கரப்பந்தாட்ட அணிக்கு வீராங்கனைகளை உள்வாங்குவதற்கான தெரிவுகள் இம்மாதம் 21, 22ஆம் திகதிகளில் இடம்பெறும் என்று இலங்கை கரப்பந்தாட்ட சம்மேளனம் தெரிவித்துள்ளது. இந்த வருடம் இடம்பெறவுள்ள ஆசிய மற்றும் மத்திய ஆசிய கரப்பந்து சுற்றுத் தொடர்களுக்கு இலங்கை அணியை தயார்படுத்துவதற்காகவே இந்த தெரிவு இடம்பெறவுள்ளது. இந்த தெரிவுகள் வரும் 21, 22ஆம் திகதிகளில் காலை 8 மணி முதல் விளையாட்டு அபிவிருத்தி திணைக்களத்தின் டொரிங்டன் உள்ளக விளையாட்டரங்கில் இடம் பெறும் என்று இலங்கை கரப்பந்தாட்ட சங்கம் தெரிவித்துள்ளது.

சர்வதேச செய்திகள்

துருக்கி, சிரிய பூகம்பம்

உயிரிழப்பு 11,000ஐத் தாண்டியது: பலர் இடிபாடுகளில் சிக்கித்தவிப்பு

துருக்கி மற்றும் சிரியாவில் கடந்த திங்கட்கிழமை (06) ஏற்பட்ட பயங்கர பூகம்பத்தில் உயிரிழந்தவர்கள் எண்ணிக்கை 11,000ஐக் கடந்திருக்கும் நிலையில், கட்டட இடிபாடுகளில் சிக்கியிருப்போரை தேடும் மீட்பு நடவடிக்கைகள் விரைவுபடுத்தப்பட்டுள்ளன.

பெரும் சிரமங்களுக்கு மத்தியிலும், கட்டட இடிபாடுகளில் சிக்கி உயிருடன் இருப்பவர்களை மீட்கும் முயற்சி நேற்று (08) விரைவுபடுத்தப்பட்டிருந்தது. 7.8 ரிக்டர் அளவில் ஏற்பட்ட சக்திவாய்ந்த பூகம்பம் இடம்பெற்று 48 மணி நேரம் கடந்த நிலையிலும் பலரும் இடிபாடுகளில் இருந்து காப்பற்றப்பட்டு வருகின்றனர்.

இடிபாடுகளில் உறையும் குளிருக்கு மத்தியில் இரவை கழித்த குடும்பம் ஒன்று சிரியாவில் உயிருடன் மீட்கப்பட்டுள்ளது.

இடிபாடுகளில் இருந்து பச்சிளம் குழந்தை உட்பட சிறுவர்கள் மற்றும் பெரியவர்கள் காப்பாற்றப்பட்டு வரும் நிலையில் மேலும் நூற்றுக்கணக்கானோர் தொடர்ந்து இடிபாடுகளில் சிக்கி இருப்பதாக அஞ்சப்படுகிறது.

பெரும் தெங்கிறீட், இரும்புத் தூண்களுக்குக் கீழ் சிக்கி இருப்போரை காப்பாற்றுவதற்கு கால அவகாசம் மணிக்கு மணி குறைந்து வருகிறது.

இந்நிலையில் உயிரிழப்பு எண்ணிக்கையும் வேகமாக அதிகரித்து வருகிறது. உள்நாட்டு நேரப்படி துருக்கியில் புதன்கிழமை காலையில் உயிரிழப்பு எண்ணிக்கை 8,574 ஆக அதிகரித்திருந்ததோடு சிரியாவில் பலியானோர் எண்ணிக்கை 2,662ஐத் தொட்டிருந்தது.

இதன்மூலம் இந்த பூகம்பம் 21ஆம் நூற்றாண்டின் அதிக உயிர்ப்பலி கொண்ட இயற்கை அனர்த்தமாக உருவெடுத்து வருகிறது.

தொடர்ந்து இடிபாடுகளில் சிக்கி இருப்பவர்கள் மற்றும் காயமடைந்தவர்களை காப்பாற்றுவதற்கான காலம் குறைந்து வருவதாக உலக சுகாதார அமைப்பின் தலைவர் டெட்ரோஸ் அதனொம் கெப்ரியேசுஸ் எச்சரித்துள்ளார்.

பூகம்பம் ஏற்பட்டு இரண்டு நாட்களை எட்டிய நிலையில் பூகம்பம் இடம்பெற்ற மையப் பகுதிக்கு அருகில் உள்ள கரமன்மராஸ் நகரில் இருந்து 3 வயது சிறுவன் ஒருவன் இடிபாடுகளில் இருந்து காப்பாற்றப்பட்டான். சில மணி நேரங்களின் பின்னர் அடியமான் நகரில் 10 வயது சிறுமி ஒருவர் இடிந்த அவரது வீட்டில் இருந்து காப்பாற்றப்பட்டார்.

உயிர் தப்பியோரை மீட்கும் பணியில் துருக்கியின் 24,000க்கும் அதிகமான அவசர சேவை பிரிவினருடன் 20க்கும் மேற்பட்ட நாடுகளின் தேடுதல் குழுக்கள் இணைந்துள்ளன.

எனினும் மீட்புக் குழுக்களின் வருகை தாமதம் அடைவதாக பாதிக்கப்பட்டவர்கள் சாடுகின்றனர். "எனது சகோதரனை இடிபாடுகளில் இருந்து வெளியே எடுக்க முடியாமல் உள்ளது. எனது மருமகனை மீட்க முடியாமல் உள்ளது. இங்கே சுற்றிப்பாருங்கள் அரச அதிகாரிகள் யாரும் இல்லை" என்று கரமன்மராசைச் சேர்ந்த அலி சகிரொக்லு ஏ.எப்.பி. செய்தி நிறுவனத்திற்குத் தெரிவித்துள்ளார்.

துருக்கியின் 85 மில்லியன் மக்கள்தொகையில் 13 மில்லியன் பேர் இந்த பூகம்பத்தில் பாதிக்கப்பட்டிருப்பதாக குறிப்பிட்ட அந்நாட்டு ஜனாதிபதி ரிசப் தையிப் எர்துவான் 10 மாகாணங்களில் அவசர நிலையை அறிவித்துள்ளார். அவர் நேற்று பாதிக்கப்பட்ட பகுதிகளை பார்வையிட்டார்.

கடந்த ஒரு தசாப்தத்திற்கு மேல் உள்நாட்டுப் போரால் பாதிக்கப்பட்ட சிரியாவில் மீட்பு பணிகள் மற்றும் உதவிகள் வருவதில் மேலும் தாமதம் ஏற்பட்டுள்ளது.

மக்கள் உறங்கிக் கொண்டிருந்த அதிகாலையில் ஏற்பட்ட பிரதான பூகம்பத்திற்கு பின்னர் 12 மணி நேரம் கழித்து 7.6 ரிக்டரில் மற்றொரு சக்திவாய்ந்த பூகம்பம் பதிவானதோடு அங்கு தொடர்ந்து 100க்கும் அதிகமான அதிர்வுகள் பதிவாகி உள்ளன.

இதனால் மக்கள் கட்டடங்களில் வசிக்க பயந்து வெட்ட வெளிப் பகுதிகளில் கூடாரங்களில் வசித்து வருகின்றனர். உறையும் குளிர் மற்றும் வீதிகள் சேதமடைந்திருப்பது மீட்புப் பணிகள் மற்றும் உதவி விநியோகங்களிலும் சிரமத்தை ஏற்படுத்தியுள்ளது.

துருக்கியில் புகம்பத்தில் கட்டடம் இடிந்து விழுந்து படுக்கையிலேயே உயிரிழந்த தனது 15 வயது மகளின் கையை பிடித்தபடி இருக்கும் தந்தை மசூத் ஹன்சரை காணலாம்.

இடிபாடுகளில் இருந்து பச்சிளங்குழந்தை மீட்பு

வடமேற்கு சிரியாவில் பூகம்பத்தில் இடிந்த கட்டடத்திற்குள் இருந்து தொப்புள் கொடி கூட வெட்டப்படாத பச்சிளம் பெண் குழந்தை ஒன்றை மீட்பாளர்கள் காப்பாற்றியுள்ளனர்.

குழந்தையின் தாய் அந்தக் குழந்தையை பிரசவித்த நிலையில் உயிரிழந்திருப்பதோடு அவளது தந்தை, நான்கு சகோதரர்கள் மற்றும் சித்தி ஆகியோரும் கொல்லப்பட்டுள்ளனர்.

ஜின்டைரிஸ் நகரில் இடிபாடுகளுக்குள் இருந்து புழுதியால் மூடப்பட்ட அந்தக் குழந்தையை ஒருவர் வெளியே எடுக்கும் காட்சிகள் வெளியாகியுள்ளன. உடன் மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப்பட்ட அந்தக் குழுந்தையின் உடல் நிலை சீராக இருப்பதாக மருத்துவர்கள் குறிப்பிட்டுள்ளனர். இடிந்த

கட்டடத்திற்குள் இருந்து அழுகுரல் கெட்டதை அடுத்தே உடன் இடிபாடுகள் அகற்றப்பட்டு குழந்தை மீட்கப்பட்டுள்ளது. இதன்போது தாயிடம் இருந்து பிரிக்கப்படாமல் இருந்த தொப்புள் கொடியை அறுத்தே குழந்தை வெளியே எடுக்கப்பட்டுள்ளது.

"நான் அடிமையாக இருப்பேன்"

வடக்கு சிரியாவில் தனது வீட்டின் கொங்கிறீட் சுவருக்குக் கீழ் சிக்கி இருந்த இரு சிறுவர்கள் 36 மணி நேரத்திற்குப் பின்னர் மீட்கப்பட்டனர்.

"என்னை இங்கிருந்து வெளியே எடுங்கள். நான் நீங்கள் சொல்வதையெல்லாம் செய்கிறேன்" என்று அதில் மூத்த சிறுமி மீட்பாளர்களை பார்த்து கூறுவது வீடியோவில் பார்க்க முடிகிறது.

"நான் உங்கள் அடிமையாக இருப்பேன்" என்று அந்த சிறுமி கூறும் போது, மீட்பாளர் ஒருவர், "இல்லை, இல்லை" என்று பதிலளிக்கிறார். மரியம் என்ற அந்த சிறுமி அருகில் சிக்கி இருக்கும் தனது இளைய சகோ

தரரின் தலையை மெதுவாகத் தடவுகிறாள். இருவரும் படுக்கையில் இருக்கும்போதே சுவர் விழுந்து சிக்கியுள்ளனர். இவர்களின் பெற்றோர்கள் பூகம்பத்தில் இருந்து உயிர் தப்பிய நிலையில் அதிர்ஷ்டவசமாக அந்தக் குடும்பத்தில் எந்த உயிரிழப்பும் ஏற்படவில்லை.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2023 பெப்ரவரி மாதம் 9ம் திகதி வியாழக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.